# தொழிலாளி

இலங்கை தொழிற் சங்க சம்மேளன வெளியீடு

விலை சதம் 15 | இந்தியாவில் 15 நயா பைசா. | பக்கங்கள் 16

முரசு 1 | 1963 ஆம் மே மாதம் 1-ந் திகதி புதன்கிழமை | ஒலி 3


மே தின மலர் 1963

# ஐக்கியம் காண்போம் தொல்லைகள் தொலைப்போம்!

## இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் மேதின அறைகூவல்!!

ஏகாதிபத்தியத்திற்கு அடிக்குமேல் அடிவிழுகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் தேசிய விடுதலை எழுச்சி மலையாக வளர்ந்து வருகிறது. சோவியத் நாட்டினதும், மக்கள் சீனத்தினதும் தலைமையில் முற்போக்கு இயக்கங்கள் பெரும் சக்திபெற்று வளருகின்றன. சமாதான, ஜனநாயக, சோஷலிஸ இயக்கங்களின் பலம் என்றுமில்லாதவாறு பெருகியுள்ளது. இந்த நிலமையிலேதான் இவ்வருட மேதினம் கொண்டாடப்படுகிறது.

ஏகாதிபத்தியம் பலம் இழந்தது உண்மைதான். ஆனல் உலகத்தை ஓர் பயங்கர அணு ஆயுத யுத்தத்தில் தள்ளிவிட, மனித சமுதாயத்தின் எதிர்காலத்தை நாசமாக்க, வாழ்வைப் பாழ்படுத்த ஏகாதிபத்தியம் முயன்றுகொண்டிருக்கிறது. அவ்வித போக்கு தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் தற்கொலைப்பாதை என்பதை ஏகாதிபத்தியம் நன்கு உணர்ந்துள்ளது. இருப்பினும் இதன் மூலமாவது, தான் இழந்த சக்தியை மீண்டும் பெற அது முயற்சிக்கிறது.

ஏகாதிபத்தியத்திற்கு சாவு மணி அடிக்கின்ற, உலகத்தை விட்டே ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் ஒழித்துக் கட்டுகின்ற போராட்டத்திற்கு ஏற்றகாலம் வந்துவிட்டது.

### கஷ்டங்கள் கூடுகின்றன:

இலங்கையில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை பொறுக்கமுடியாத அளவுக்குப் படுமோசமாகிக்கொண்டு போகிறது. வாழ்க்கைச்செலவு மலையென உயர்ந்துகொண்டு போகிறது. தன்னுடைய குறைந்த வருவாயில் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் தொழிலாளி துன்பப் படுகிறன். அவசிய தேவைப் பொருட்களின் விலை எண்ண முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது. நாளுக்கு நாள் தொழிலாளி வர்க்கத்தின் கடன் தொல்லை அதிகரிக்கிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாடு, பொருட்களின் விலைகளை உயர்த்துவது மட்டுமல்லாமல் பல தொழிலாளர்களை வேலையை இழக்கும் அவல நிலைக்கும் தள்ளியுள்ளது. ஆனல் நாட்டிலே புதியஉற்பத்திச்சாலைகளை அமைக்கும் அரசாங்கத்தின் கொள்கை ஆமை வேகத்தில் நகர்கிறது. மலையென வளர்ந்து வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்காவது ஆட்சியினரால் தீர்க்கமுடியவில்லை.

தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்குகின்ற இப்பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்திடம் மார்க்கம் இல்லை. பதிலாக பொருளாதார நெருக்கடி என்ற பெயரைச் சொல்லி தொழிலாளர்களின் சம்பளம் உயரக்கூடாது என்ற கொள்கையை அமுல்படுத்துகிறது. 1957க்குப் பிறகு அரசாங்க தொழிலாளர்களுக்கு எவ்வித சம்பள உயர்வும் கிடைக்கவில்லை. வாழ்க்கைச் செலவு கூடிக்கொண்டு போகிறது. ஆனல் அதற்கு ஈடுசெய்ய, வழங்கப்படுகின்ற பஞ்சப்படியோ பழைய நிலையிலேயே உள்ளது. தனிப்பட்ட ஸ்தாபனங்களைச்சேர்ந்த தொழிலாளர்களுக்கு 1959-க்குப் பின் எவ்வித சம்பள உயர்வும் கிடைக்கவில்லை. அதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த 20 வருடமாக எவ்வித சம்பள உயர்வும் கிடைக்கவில்லை.

### குமுறும் உள்ளங்கள்

என்றுமில்லாத அளவுக்கு முதலாளிகள் இன்று இந்த நாட்டில் கொள்ளை லாபம் பெறுகின்றனர். இங்குள்ள பெரிய என்ஜினியரிங் கம்பெனிகளில் ஒன்றுன பிரவுன்ஸ் குறூப் கடந்த வருடம் 70 லட்சம் லாபம் பெற்றதாக அதன் தலைவர் அறிவித்தார். எல்லையற்ற பணம், நன்கு, தடையின்றி லாபமாக இந்தநாட்டைவிட்டு வெளியேறுகிறது.

இக்காரணங்களால்தொழிற் சங்க இயக்கத்தில் ஓர் பெரிய கொந்தளிப்பும், குமுறலும் தோன்றியுள்ளது. பொறுக்க முடியாத வாழ்க்கைக் கஷ்டத்தினல் சகல பகுதித் தொழிலாளர்களும் குமுறும் எரிமலைகள் எனப்போராடப் புறப்பட்டுள்ளனர். முதலாளிகளின் கொள்ளை லாபத்தை அரசாங்கம் தடுக்கவிரும்பவில்லை. அதேநேரத்தில் தொழிலாளர்களுக்கு எதிராக போர் தொடுக்கின்ற அரசாங்கத்தின், தியாகம் செய்யும்படி கோருகின்ற வேண்டுகோளை ஏற்கத் தொழிலாளர்கள் தயாராக இல்லை.

போராடவேண்டும் எனத் தொழிலாளர்கள் துடிக்கிறர்கள். கடந்த சிலமாதங்களில் மகத்தான வேலை நிறுத்தப் போராட்டங்கள் பலவற்றை இந்தநாடு கண்டுள்ளது. அப்

[16-ம் பக்கம் பார்க்க]

## ஐக்கிய மேதினத்தில் அணிதிரளுங்கள் வர்க்க சக்தியைக்காட்ட திரண்டு வாருங்கள் !

இவ்வருட மேதினம் ஐக்கிய மேதினமாகக் கொண்டாடப்படும். இது சம்பந்தமாக மூன்று இடதுசாரிக் கட்சிகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்துள்ளன. இதைப் பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறது. இவ்வுடன்பாட்டை மனமுவந்து எமது சம்மேளனம் வரவேற்கிறது.

இம்மேதினத்தில் கம்யூனிஸ்ட், சமசமாஜ, எம். ஈ. பி. ஆகிய அரசியல் கட்சிகளும், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் உட்பட இந்த நாட்டிலே உள்ள சகல சக்திவாய்ந்த தொழிற்சங்கங்களும், வாலிப இயக்கங்களும் பங்குகொள்ளும். இவ்வித உடன்பாட்டைக்கண்டு சகல தொழிலாளர்களும், பொதுமக்களும் பெரிதும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் மேதின ஏற்பாடுகளைச் செய்வதில் சகல தொழிலாளர்களும் பெரும் உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளனர். இம்மேதின ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் என்றுமே இந்நாடு கண்டிராத அளவில், பிரமாண்டமான ரீதயில் வெற்றிபெறச் செய்ய சகலரும் முயற்சி எடுத்துவருகின்றனர்.

மூன்று இடதுசாரிக் கட்சிகளும் முதன் முதலாக ஒன்றுபட்டு மேதினம் கொண்டாடுவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன் 1953-54ம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் கட்சியும், புரட்சிகர சமசமாஜக் கட்சியும் ஒன்ருக மேதினம்கொண்டாடினர். 1956 ல் கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் ஒன்ருக மேதினம் கொண்டாடினர்.

கொழும்பில் ஐக்கிய மேதினப் பொதுக்கூட்டம் கால்பேஸ் மைதானத்தில் நடைபெறும். அதற்குமுன் பிரதான ஊர்வலம் பொரலை சந்தியிலிருந்து ஆரம்பமாகி நொறிஸ் றேட் வழியாககால் பேஸ் மைதானத்தை நோக்கிச் செல்லும். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் கிளை-ஊர்வலங்கள் வெள்ளவத்தை நெசவாலை, கிருண்பாஸ், கோட்டை, ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு ஹைட் பார்க்கை வந்தடையும். அதன் பின் ஒன்றுபட்ட ஊர்வலம் ஹைட் பார்க்கிலிருந்து 1 மணிக்குப் புறப்பட்டு பொரலையில் பிரதான ஊர்வலத்தில் ஒன்று சேரும்.

இம் மேதினம் வெற்றிபெற, சகல தொழிலாளர்களும், குடும்பங்களும் ஒன்றுதிரண்டு ஆயிரக்கணக்கில் அணிதிரளுமாறும், எங்கள் சக்தியை எடுத்துக்காட்ட முன்வருமாறும் அழைக்கின்றேம்.



தாய்மையின் உறைவிடம்
வீரத்தின் பிறப்பிடம்
கடமையின் இருப்பிடமாகக்
காட்சியளிக்கும் கியூபா
நாட்டு பெண் தொழிலாளி.

# தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக.

# சங்கம் வளர்ப்போம் உரிமை பெறுவோம்


பல லட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களை தன்னகத்தே யடக்கிக்கொண்டு, வருடத்திற்கொருமுறை பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவு செய்து டாம்பீகமான மேடைகள் அமைத்து, பிரஜாவுரிமை வேண்டும் என்று ஓர் தீர்மானமும், வாக்குரிமை வேண்டும் என்று மற்ருெரு தீர்மானமும் நிறைவேற்றி விட்டு தொண்டமானுக்கு ஜே! அஸீஸுக்கு ஜே! என்று வானளாவ கோஷமிட்டு மாகர்நாடுகளை முடித்துக்கொண்டு கலையும் மலைநாட்டிலுள்ள ஏனைய சங்கங்களுக்கும் செங்கொடிச் சங்கத்திற்குமுள்ள வித்தியாசங்களை இன்று தோட்டத்தொழிலாளர்கள் நன்கு உணர்ந்து வருகின்றனர்.

மார்ச் மாதம் 17ம் திகதி நுவரெலியாவிலே நடைபெற்ற செங்கொடிச் சங்கத்தின் விசேஷ மாநாடு, தோட்டத் தொழிலாளர்களின் சரித்திரத்திலேயே என்றும் நடைபெருத மாநாடாக இன்று தோட்டத் தொழிலாளர்களின் மனதிலே ஆணித்தரமாகப் பதிந்து விட்டது.

தோட்டத்துரை மார்கள், தொழிலாளர்களுக்கு விரோதமாக செய்யும் அக்கிரமங்களையும், அனியாயமான செயல்களையும் ஒருமுகமாக நின்று எதிர்த்துப் போராடி பல வெற்றிகளைப் பெற்றுவருகிறது செங்கொடிச் சங்கம் என்பது இன்று வெள்ளிடை மலையாகி விட்டது. இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழில் கோட்டுகளிலே தாக்கீது செய்த பல வழக்குகளில் தீர்ப்புகள் வெளியான வழக்குகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிந்துள்ளது. இது செங்கொடிச் சங்கத்தின் சிறந்த உழைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக விருக்கின்றது.

இன்று பல ஆயிரக்கணக்கான தோட்டத்தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தில் தினம் தினம் சேர்ந்தவண்ணமிருக்கின்றனர். தலவாக்கொல்லை, அட்டன்பகுதிகளிலே இந்த நிலைமையை நன்ருகக் காணலாம்.

கடந்த மாதத்தில் அக்ரபத்தனையைச் சேர்ந்த மோர்சான் கட்டமான் தோட்டத்தொழிலாளர்கள், தோட்டத்துரை விதித்த அநியாயமான ஒரு செயலை எதிர்த்துப் போராட முன்வந்தார்கள். ஆனல் அத்



ரெசாரியோ பர்ணுந்து

தொழிலாளர்கள் அப்போது ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் அங்கத்தவராயிருந்தனர். ஜ. தொ. கா. தலைமையில் அப்போராட்டத்தை நடத்த அவர்கள் தயங்கினர். எனவே தோட்ட துரைமார்களை எதிர்த்துப் போராடும் திறமையுள்ள சங்கத்தைத் தேடினர். சொல்லவும் வேண்டுமா? செங்கொடி சங்கத்தில் சேர்ந்தனர். சேர்ந்த இரண்டாவது நாளே வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இரு நாட்கள் நடத்திய வீரப் போராட்டத்துக்குப் பின் தோட்ட நிர்வாகம் பணிந்தது. தொழிலாளர்களின் வெற்றி, செங்கொடிச் சங்கத்தின் வெற்றி அக்ரபத்தனை பகுதி எங்கும் பரவிற்று.

வட்டக்கொடைப் பகுதியிலே உள்ள வட்டகொடை பணிய கணக்கைச் சேர்ந்த தொழிலாளர்களும் தங்களுடைய நியாயமான கோரிக்கைக்காக செங்கொடிச் சங்கத்தின் தலைமையில் கடந்தமாதம் மூன்று நாட்கள் போராட்டம் நடத்தினர். இரண்டரை வருடங்களாகப் பணியாத நிர்வாகம் பணிந்தது. செங்கொடிச் சங்கம் வெற்றியும் பெற்றது.

தலவாக்கொல்லை அட்டன் பகுதிகளிலேயுள்ள தொழிலாளர்கள் இன்று ஆயிர மாயிரமாக சேர்ந்த வண்ணமிருக்கின்றனர் செங்கொடிச் சங்கத்தில். இந்நிலையைக் கண்டு வெகுண்டெழுகின்றனர் தோட்டதுரைமார்களும் அவர்களின் பாதவருடிகளும். செங்கொடிச் சங்கத்தை நசுக்கி, இல்லாதொழிக்க பல திட்டங்களைத் தீட்டுகின்றனர். செங்கொடிச் சங்கத்தின் முன்னணித்தோழர்களைப் பல அக்கிரமங்களுக்கு ஆளாக்கப்பார்க்கின்றனர். இவைகளால் செங்கொடிச் சங்கத்தின் அங்கத்தவர்களான வீரத்தோழர்களை சரணடையச் செய்ய முடியாது. தோட்டத்துரைமார்களின் அக்கிரமங்களை மட்டுமல்ல, இந்த முதலாளித்துவ சமுகத்தையே குழி தோண்டிப் புதைக்க தொழிலாளர்கள் சபதம் எடுத்துள்ளனர்.

இந்த நல்ல காரியத்தைச் செய்துமுடிக்க மலையக மெங்குமுள்ள தோட்டத் தொழிலாளர்கள் லட்சக்கணக்காக செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்து சங்கத்தைப் பலப்படுத்துவதோடு, அரசாங்க அளவு பஞ்சப்படி கோரிக்கையை வென்றெடுக்க இலங்கைச் சரித்திரம் கண்டிராத மாபெரும் போராட்டத்தை நடத்த தொழிலாளர்கள் உசாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாழ்க தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள்.

# கலை இலக்கியப் பெருவிழா

★ ஈழத்து எழுத்தாளர்கள்

★ தமிழகத்து எழுத்தாளர்கள்

★ ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் எழுத்தாளர்கள்

வடபகுதியில் முதற் தடவையாகச் சந்திக்கும் முக்கிய இலக்கியப் பேரவை. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க

## இரண்டாவது மகாநாடு

இடம்: மே 8 ந் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபம்,
மே 7 ந் திகதி பருத்தித்துறை — வியாபாரி மூலை
(யாழ்ப்பாணத்துச் சாமியார் சமாதி முன்றலில்)

இல்க்கியப் பெரியார்களைக் கௌரவித்தல், கருத்துப் போர், கவிதைச் சமர், சொற்பொழிவு, இசையரங்கம், நாடக விருந்து, நாதசுரக் கச்சேரி, திரைப்படக்காட்சி மற்றும் பல நிகழ்ச்சிகள்.

அனைவரும் திரண்டு வருக!

## கார்ல் மார்க்ஸ் அவர்களின் பிறந்ததினத்தை முன்னிட்டு

மே மாதம் 4 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு
123, யூனியன் பிளேசிலுள்ள

எமது தலைமைக் காரியாலயத்தில்

கார்ல் மார்க்ஸ்சும் அவரது போதனைகளும்
என்னும் பொருள்பற்றி

**தோழர் என். சண்முகதாசன்**

சொற்பொழிவாற்றுவார்

அனைவரும் திரண்டு வருக.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம்

## இந்தியப் பாதுகாப்பு நிதியின் கதியென்ன...?

கடந்த இந்திய-சீன எல்லைத் தகராறின்போது இந்தியபாதுகாப்பு நிதியொன்றை இந்த நாட்டிலேயுள்ள சில ஸ்தாபனங்களாலும், முக்கியமாக இங்குள்ள ஓர் தமிழ் தினசரியாலும் சேர்க்கப்பட்டது. அத்துடன் தமிழரசுக்கட்சியும் நிதி திரட்ட ஆரம்பித்தது. தமிழ்மக்களில் பெரும் பான்மையினர் தமது அயல் நாடான இந்தியாவிற்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாரி வளங்கினர். இந்த லட்சக்கணக்கான ரூபாய்கள் என்னவாயிற்று என்று மக்களிடையே கேள்வி எழுந்துள்ளது. இந்தியாவிற்கு இந்த நிதி அனுப்பபடவில்லை என்பது உறுதி. அப்படி என்ருல் இதற்கு என்ன நடந்தது. சில தனிப்பட்ட இந்திய முதலாளிகளின் வியாபாரப் பெருக்கத்திற்கு இப்பணம் பயன்படுகின்றது என்று கதை அடிபடுகின்றது. உண்மையா ?



மேதின விழாவில் பல்கேரிய மங்கையர்கள் உடற்பயிற்சி அணிவகுப்பு ஒன்றை நடத்துவதை மேலே காணலாம்.

தலையங்கம்

# இடதுசாரிகள் ஒன்றுபடவேண்டும்!

இடதுசாரி ஐக்கியம் ஏற்படக்கூடிய நல்ல சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இது தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பெரும் ஆவலைத் தூண்டியுள்ளது. இடதுசாரி இயக்கம்தான் இந்த நாட்டில் முதலில் தோன்றிய அரசியல் இயக்கமாகும். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷத்தை முதலில் முன்வைத்ததும் இவ்வியக்கந்தான். தேசிய சுதந்திரத்தைப்பற்றி தேசியத் தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்ற, சேர். பரன் ஜயதிலகா, டி. எஸ். சேனநாயக்கா போன்றோர் பேசுவதற்கே கிலிபிடித்திருந்த காலத்தில், காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காகூட மௌனம் சாதித்த காலத்தில், இடதுசாரி இயக்கம்தான் பிரித்தானிய ஆதிக்கம் அகலவேண்டுமெனவும், நாடு பூரண சுதந்திரம் பெறவேண்டுமெனவும் கோரிக்கை கிளப்பியது.

இன்று தொழிற்சங்க இயக்கம் வளர்ந்து, எவ்வளவோ முன்னேறிவிட்டது. ஆனால் அன்று தொழிலாளர்கள் வாழ்ந்த இழிநிலையைப் போக்கவும், தொழிற்சங்க ரீதியாக தொழிலாளர்கள் ஒன்றுபடவும், புரட்சிகர தொழிற்சங்கங்களை அமைக்கவும் வழிகோலியது இடதுசாரி இயக்கமாகும்.

இந்த நாட்டில் அரசியல் வாழ்க்கை மிகவும் நாற்றமடிக்கும் நிலையில் உள்ளது. ஆனால் இடதுசாரிகள் மாத்திரம் இலட்சிய வாதிகளாக, நேர்மையாளர்களாக, தன்னலம் கருதா சேவையாளர்களாக மக்களிடத்திலே மதிப்புப் பெற்றுள்ளனர்.

ஆனால் இந்த நாட்டின் அரசியலில் இடதுசாரிகள் வகிக்க வேண்டிய பாத்திரத்தை, பெறவேண்டிய இடத்தைப் பெறவில்லை. அதற்குக் காரணம் கடந்த 23 வருடங்களாக இவர்கள் மத்தியில் இருந்த ஒற்றுமையின்மையேயாகும். ஆரம்ப பிளவுகளுக்குரிய காரணங்களின் சரி பிழையை நாம் இங்கு விவாதிக்கவிரும்பவில்லை. ஆனால் இதில் முக்கியமாக மனதில்கொள்ளவேண்டியதொன்று உள்ளது. கடந்த பல வருடங்களாக நாம் பிளவுபட்டு ஒருவரை ஒருவர் திட்டுவதில் காலம் கடத்தினோம். அதனால் சரியான ஒரு தலைமையைத் தொழிலாளி வர்க்கத்திற்கு எம்மால் அளிக்கமுடியாமல் போய்விட்டது.

ஆகவே இவ்வித ஐக்கியத்தை அமைக்க நாம் முயலும் பொழுது அடிப்படை உண்மையொன்றை எம் மனதில்கொள்ள வேண்டும். அதாவது பெருமளவில் இடதுசாரிகள் மத்தியில் ஒற்றுமை காணப்படுகிறது. மிகச் சில பிரச்சினைகளிலேயே வேறுபட்ட கருத்துக்கள் விளங்குகின்றன. ஆகவே பெரும்பாலும் ஒற்றுமைக் கருத்துள்ள கொள்கைகளின் அடிப்படையிலேயே நாம் ஐக்கியம் அமைக்க முயலவேண்டும்.

இடதுசாரி ஐக்கியம் அமைப்பதில் இருக்கக்கூடிய கஷ்டங்களையும் நாம் மறந்துவிடக்கூடாது. பலவருடங்களாக எதிராகப் பணிபாற்றிக்கொண்டிருந்த கட்சிகளும், மனிதர்களும் ஒரே கருத்தை வெளியிட சிறிதுகாலம் செல்லும் என்பதையும் நாம் மனதிற்கொள்ளவேண்டும். இவ்வளவு காலமாக எம்மைப் பிரித்துவைத்திருந்த பிரச்சினைகளை புறக்கணிப்பதிலோ, எதிர்நோக்க மறுப்பதிலோ பலனில்லை.

எந்தவிதமான கொள்கைகளை, தந்திரங்களை இடதுசாரி இயக்கம் கடைப்பிடிக்க வேண்டுமெனச் சரியாகத் தீர்மானிப்பதற்கு இடதுசாரிகளின் மத்தியில் ஓர் தத்துவார்த்த கருத்துப்பரிமாறல் நடைபெறுவது நன்மை பயக்குமென நாம் நம்புகிறோம். சரியான கொள்கைகளைத் தாங்கள் மட்டுமே கடைப்பிடித்ததாக எந்த ஒரு இடதுசாரிக் கட்சியும் பெருமைப்படமுடியாது. ஆதலால் இடதுசாரி ஐக்கிய இயக்கத்திற்கேற்ற ஓர் சரியான கொள்கையை போராட்டமுறையை வகுக்கும் நோக்கத்தோடு பரந்தளவில் ஓர் கருத்துப் பரிமாறல் இடம்பெறுதல் நல்லது.

தலைவர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவதின் மூலம் உண்மையான, சக்திமிக்க ஐக்கியம் ஏற்பட்டுவிடாது. போராட்டங்களின் மூலம்தான் சிறந்த ஐக்கியத்தை உருவாக்க முடியும். அவ்வித போராட்டங்களிலும் ஐக்கிய செயலாக்கம் இருக்க வேண்டும். போராட்டங்களின் போது, பொதுமக்களுக்கு முன் நிற்கும் பொழுதுதான் தவறான கொள்கைகள் மறைந்து, நல்ல கொள்கைகள் தோன்றும்.

இன்று வாழ்க்கைத்தரம் மிகவும் கீழான நிலைக்குச் சென்றுள்ளது. இதற்கெதிராகப் போராட வேண்டும் என்ற பொதுமக்களின் துடிப்பு அரசியல், தொழிற்சங்க இயக்கங்களில் பிரதிபலிக்கின்றது. இடதுசாரி ஐக்கிய தலைமை, மக்களின் இப்போராட்டத்திற்குத் தலைமை வகிக்கவேண்டும். இலங்கையில் ஒரே ஒரு சோஷலிஸ்ட் கட்சி வேண்டுமென்ற பொதுமக்களின் கனவு நனவாக இப்போராட்டம் வழிவகுக்கும்.

பாராளுமன்றக் காரணங்களுக்காக மாத்திரம் இடதுசாரி ஐக்கியம் காண முயல்கின்ற போக்கிருப்பின் அதையும் நாம் எதிர்க்க வேண்டும். அண்மைக் காலங்களில் இடதுசாரி இயக்கம் பாராளுமன்ற வேலைகளிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தது. இதற்காகவே இடதுசாரி ஐக்கியம் அமைக்கப்படுமானால் பலனில்லை. முடிவில்பிரிட்டிஷ் தொழிற் கட்சி போன்ற ஒன்றையே எம்மால் இதன் மூலம் பெறமுடியும்.

எங்கள் நாட்டை சோஷலிஸத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்ல, ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தை பூரணப்படுத்த சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றுதிரட்டக் கூடிய முறையில், இடதுசாரி ஐக்கிய முன்னணி அமையவேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள்ள மிக முக்கிய பிரச்சினை இடதுசாரி ஐக்கியமாகும். இந்த இலட்சியம் நிறைவேற சகல முற்போக்குவாதிகளும் எம் முழுச்சக்தியையும் பயன்படுத்துவோமாக.

## பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதம்

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்
பாரினிகடையரே எழுங்கள் வீறுகொண்டு தோழர்காள்
கொட்டுமுரசு கண்டனம் முழக்கமெங்கும் குமிறிட
குதித்தெழு புதுவுலக வாழ்வதில் திளைத்திட

பாடுவீர் சுயேச்சைக்கீதம் விடுதலை பிறந்தது
பாடுவீர் சுயேச்சைக்கீதம் விடுதலை பிறந்தது
உண்டுநம் உழைப்பிலே உயர்ந்தவருக்குச் சொல்லலாம்
உழைப்பவர் யாவருக்கும் சொந்தமிந்த நிலமெல்லாம்

வேலைசெய்ய கூலியுண்டு வீணர்க்கிங்கு இடமில்லை
வெறும்வார்த்தை பேசி வம்பளக்கும் காதகர்க்கும் இடமில்லை
நாளையெண்ணி வட்டிசேர்க்கும் ஞமலிகட்கும இடமில்லை
நாமுணர்த்தும் நீதியை மறுப் வர்க்கும் இட ில்லை.

பாரதோ மமதையின் சிகரத் இறுமாந்துமே
பாக்கிறுன் அரக்கமில் நிலத்தின் முதலாளியே
கூறிடில் அன்னவர் சரித்திரத்தில் கண்டதே
கொள்ளைகொண்டு உழைப்பின்பயனை கொடுமைசெய்து நின்றதே

பாடுபட்டுழைத்தவர் நினைப்பைத் தின்ற கழுகுகள்
இறந்தொழிந்து போதல் திண்ணம் பாரும் சில நாளதில்
காடுவெட்டி மலையுடைத்து கட்டிடங்கள் எழுப்புவோம்
கவலையற்ற போகவாழ்வை சகலருக்கு மாக்குவோம்.

# ஹோட்டல் தொழிலாளர்களின் வெற்றி!

நுவரேலியா கிராண்ட் ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஹோட்டல், பேக்கரி, குடிவகைத் தொழிலாளர் சங்க அங்கத்தினர்களாவர். இச்சங்கம் நுவரேலியா ஹோட்டல்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்திற்கு, அந்த ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஆறு கோரிக்கைகளை சமர்ப்பித்தது. அக்கோரிக்கைகள் பின்வருமாறு:

1 ரூபா 17/50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்குதல்.

2 சகாயநிதிக்கு சமபங்கு வழங்குதல்.

3 வழமையான போனஸ் வழங்குதல்.

4 மேலதிகநேர (ஓவர் டைம்) ஊதியம் வழங்குதல்.

5 சட்டப் பிரகாரமான விடுமுறை நாட்கள் வழங்குதல்.

6 பொது, வருடாந்த விடுமுறை நாட்களுக்கு உணவுப் படி வழங்குதல்.

4-3-63ல் நுவரேலியா தொழிற் கந்தோரில் ஒரு மகாநாடு கூடி இக்கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டன. மகாநாட்டில், நிர்வாகம் கம்பெனியின் நிதி நிலை மோசமாக உள்ளதால் விஷேசப் பஞ்சப்படி ரூபா 17/50 சதம் வழங்குவது சாத்தியமல்ல என வாதித்தது ஆனால் சங்கம், கொழும்பிலும் பிற இடங்களிலும் சம்பள உயர்வு பெற்றுள்ளதையும், இந்த ஹோட்டலில் அவர்கள் சிலகாலமாக சம்பள உயர்வு எதுவும் பெறாததையும் சுட்டிக்காட்டியது. நிதி நிலைமை சீரடையும் வரையும் பொதுப்பட உயர்வு வழங்க வேண்டுமென சங்கம் கேட்டுக் கொண்டது. ஆயினும் கம்பெனி இதனை ஆலோசிக்க வேண்டியுள்ளதென்றும் 25-3-63ல் சங்கத்திற்கு பதில் சமர்ப்பிப்பதெனவும் அறிவித்தது. 25-3-63ல் கம்பெனி தாம் எவ்வித சம்பள உயர்வையும் வழங்க முடியாதென தொழில் இலாகாவிற்கு அறிவித்தது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு பெற ஏப்ரல் மாதத்தில் வேலைநிறுத்தம் செய்வதென தீர்மானித்தனர். இதனைக் கேள்வியுற்றதாலும், தொழில் இலாகாவின் தலையீட்டாலும் நிர்வாகம் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ரூ 5/- சம்பள உயர்வு வழங்க இணங்கியுள்ளது.

இந்த ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்கள் விடுமுறையில் செல்லும்போது உணவுப் பணம் வழங்கப்படவில்லை. வருடாந்த பொது விடுமுறையிற் செல்லும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாளொன்றுக்கு ரூ 1/- உணவுப் படி வழங்கப்பட வேண்டும் என மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை மேலதிகநேர ஊதியம் வழங்குகையில் கம்பெனி உணவுப் படியின் பெறுமானத்தை சேர்த்து மேலதிக நேர ஊதியம் கணக்கிடுவதில்லை. உணவுப் படியின் பெறுமானத்தை சேர்த்துக் கணக்கிடாதது கம்பெனியின் குற்றம் என சங்கம் சுட்டிக்காட்டியது. இனி மேலதிக நேர ஊதிய விகிதங்கள் கணக்கிடுகையில் உணவுப்படியையும் சேர்த்துக் கணக்கிடுவது என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக நிலுவைகள் நான்கு வருட காலத்திற்குரியவை வழங்கப்பட வேண்டுமென சங்கம் கோரியது.

★

## தொழிலாளிக்குத் தடை

இந்திய அரசாங்கம் தொழிலாளி பத்திரிகை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் விற்பனை செய்யவோ விநியோகிக்கவோ கூடாது என தடைவிதித்துள்ளது.

உண்மைநிலைகளை அறிந்து கொள்ளத் தடை போடும் இந்திய அரசாங்கத்தின் இவ்வித போக்கை கண்டிக்கிறோம்.

# நம் தொல்லைகள் தொலையட்டும் !

## இடதுசாரி ஒற்றுமையே எமக்கு வாழ்வளிக்கும் !!

டபிள்யு. வில்சன்

ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக எமது நாட்டை சுரண்டி வந்த அன்னிய, மேற்கத்திய ஏகாதிபத்தியம் 1947ல் எமது நாட்டை விட்டு அரசியல் ரீதியாக வெளியேறியது. அடிமைப் பட்டிருந்த எமது நாடு அந்த ஆண்டில் சுதந்திரம் பெற்றது.

பிறந்த தாயகம் சுதந்திரம் பெறுவதைக் கண்டு தொழிலாளர்களும், விவசாயிகளும் பொதுமக்களும் அப்பொழுது பெருமகிழ்ச்சி கொண்டனர். ஆனால் 1956ம் ஆண்டு வரை பெற்ற சுதந்திரத்தின் பலனை இவர்களால் காணமுடியாமல் போய்விட்டது. அன்னிய ஏகாதிபத்தியம் வீற்றிருந்த இடத்திலே அவர்களின் தாசர்களான யூ. என். பி. ஆட்சி பீடம் ஏறியது. பெரு முதலாளிகளுக்கும் தங்கள் எஜமானர்களான அன்னிய ஏகாதிபத்தியத்திற்கும் தொண்டு செய்வதையே யூ.என்.பி.தன் இலட்சியமாகக் கொண்டிருந்தது.

இந்த நிலையை மாற்ற, தொழிலாளர்களும் விவசாயிகளும் பொதுமக்களும் விரும்பினர். பெற்ற சுதந்திரத்தின் பலனைக் காண விரும்பினர். இதன் பயனாக இந்த நாட்டிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் மத்தியிலும் பண்டாரநாயக்காவின் தலைமையில் இயங்கிய தேசிய முதலாளிகளுக்குமிடையில் ஓர் தேர்தல் முன்னணி ஏற்பட்டது. இதன் பயனாக 1956ல் யூ. என். பி. முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இவ்வித ஐக்கியம் 1960 ஜூலை தேர்தலிலும் யூ. என். பி. யை முறியடிக்க உதவி செய்தது.

பண்டாரநாயக்காவின் தலைமையில் இயங்கிய அரசாங்கத்திடமும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திடமும் சில நல்ல கொள்கைகள் இருந்தன. தேசிய முதலாளிகளின் வளர்ச்சியை மனதில் கொண்டு அவை நிறைவேற்றப் பட்டன. முற்று முழுதான சோஷலிஸ திட்டத்தை தொழிலாளி வர்க்கம் அவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் தேர்தல் காலத்தில் கூறிய வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்றத் தவறிவிட்டனர்

இவ் அரசாங்கத்திடம் சரியான தேசியவளர்ச்சித்திட்டம் இல்லை. அதன் காரணமாக நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. வேலை இருப்பவர்களுக்கும் சரியான ஊதியம் கிடையாது. இதற்கிடையில் நாட்டிலே வாழ்க்கைச் செலவு பொழுதொரு வண்ணமாகக் கூடிக் கொண்டு போகிறது. சம்பளம் உயரக் கூடாது என்ற கொள்கையையும் அரசாங்கம் கடைப் பிடிக்கிறது. தனது ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல் தனிப் பட்ட, முக்கியமாக அன்னிய முதலாளிகளுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்குக் கூட சம்பளம் உயர்வதை அரசாங்கம் தடுக்கிறது.

இதனால் இந்த நாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாகிக் கொண்டுபோகிறது. இந்த நிலை நீடிக்குமேயானால் மிகப் பயங்கர நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்படுவார்கள். ஆகவே இதை மாற்ற புதிய மார்க்கம் ஒன்று காண்பது அவசியமாகும்.

பல வருடங்களாகப் பிளவு பட்டிருந்த இடது சாரிக் கட்சிகள் ஒற்றுமைப்படக்கூடிய நல்ல சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதைப் பாவித்து சகல இடதுசாரிக் கட்சிகளும் தங்களுக்குள் இருக்கும் சிறிய வேற்றுமைகளை மறந்து இறுதி இலட்சியமான சோஷலிஸ சமுதாயம் காண ஒற்றுமைப்படுவது அவசியமாகும்.

## எங்கள் சம்மேளனம் வளர்கிறது

நாளுக்கு நாள் எங்கள் சம்மேளனம் புதிய சக்தியும் பொலிவும் பெற்று வளர்ந்து வருகிறது. நேர்மையான முறையில் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் முன்னின்று போராடுவதே இவ்வளர்ச்சிக்குக் காரணமாகும். இதனால் தினம் தினம் புதிய தொழிலாளர்கள் எமது சங்கத்தில் வந்து சேருகின்றனர். அவ்விதம் வந்தவர்களின் பட்டியலைக் கடந்த இரு ''தொழிலாளி'' யிலும் வெளியிட்டிருந்தோம். அவ்விதம் வந்தவர்களில் சிலோன்தியேட்டர்ஸ், பிரவுண் அன் கொம்பனி லிமிட்டட் (என்ஜினியரிங் பகுதி) ஆகியவற்றில் எமது சக்தியை நிர்ணயிக்க கடந்த மாதம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவ் வாக்கெடுப்பில் எமக்கு மாபெரும் வெற்றி கிட்டியது.

சிலோன்தியேட்டர்ஸ் ஸ்தாபனத் தொழிலாளர்கள் முன்பு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் இருந்தவர்கள். இப்பொழுது எங்கள் சங்கத்திற்கு மாறி வந்துள்ளனர். இவர்களின் சக்தியைக் கணிப்பதற்காக் கடந்த மாதம் தொழில் இலாகாவினால் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 58 வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று எமது சினிமாச் சாலை மற்றும் பட ஸ்டுடியோ தொழிலாளர் சங்கம் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது.

பிரவுன் அன் கொம்பனி லிமிட்டட்டில் நடைபெற்ற வாக்கெடுப்பிலும் 59 வீத வாக்குகளை எமது ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

★

## அப்போதிக்கரிஸ் தொழிலாளர்களின் வெற்றி

அப்போதிக்கரீஸ் ஸ்தாபனத்தின் பிரசுரப் பகுதியில் வேலை செய்கின்ற பல தொழிலாளர்கள் எங்கள் இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள். அங்கு வேலை செய்கின்ற சில தொழிலாளர்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் (C. M. U.) அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இவ் விஸ்தாபனத்தின் நிர்வாகம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு முன்பணம் வழங்க மறுத்தது.

எமது சங்கம் இந்தமாற்றத்தை வெகு கடுமையாக எதிர்த்துப் போராடியதோடு தொழிற்சங்க ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் கூறியது. அதன் காரணமாக இன்று சகல தொழிலாளர்களுக்கும் ரூபா 75 வீதம் பெருநாள் முன்பணம் வழங்கவும் வருடாந்த லாபத்தில் போனஸ் வழங்கவும் ஸ்தாபன நிர்வாகம் இணங்கியுள்ளது.

## தொழிலாளிக்கு டிரக்டர் பதவி ஆனால் தனது வர்க்கத்தைவிட்டுப்பிரிய அவர் விரும்பவில்லை.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்திலுள்ள சகலரின் மதிப்பையும் அன்பையும் பெற்ற தோழர்களில் எச். பி. ஆரியதாச அவர்களும் ஒருவர். இவர் சாதாரண ஒரு தொழிலாளி. போனர்ஸ்(சிலோன்) லிமிட்டட்டில் வேலை பார்ப்பவர். அந்தத் தொழிற்சாலையிலுள்ள எமது ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்க கிளையின் தலைவர்.

இவர் வர்க்க உணர்வு மிக்கவர் அத்தோடு தன் கடமையிலும் கருத்தாயிருப்பவர். தன் உரிமைகளுக்காகப் போராடுகின்ற நேரத்தில் தன் கடமையிலும் கண்ணாயிருப்பவர். இதனால் அவர் வேலை செய்கின்ற போனர்ஸ் (சிலோன்) லிமிட்டட் நிர்வாகம் இவரைத்தங்களுடைய டிரக்டர் சபைக்கு ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்தது. அதன் மூலம் உணர்வுமிக்க அந்த தோழரைக் கௌரவிக்க விரும்பியது,

இதை அவர் ஏற்றிருந்தால் பெரிய உல்லாச வாழ்க்கை நடத்த வழிபிறந்திருக்கும். சொந்தத்திலே கார் வாங்கியிருக்க முடியும். இன்று பெறுகின்ற ரூபா 200 சம்பளத்திற்குப் பதிலாக ரூபா 1000 பெற்றிருக்க முடியும்.

ஆனால் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாக, களனியிலே ஒரு சிறு வீட்டில் வாழும் தோழர் ஆரியதாச தனது வர்க்கத்தை விட்டுப் பிரிய விரும்பவில்லை. இன்றைய சமுதாயத்தில் தான் மட்டும் டிரக்டர் ஆவதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சினை தீர்ந்து விடும் என நினைக்கவில்லை. ஆகவே தன்னைக் கௌரவித்த ஸ்தாபனத்திற்கு நன்றி தெரிவித்ததோடு தன்னை அப்பதவியில் அமர்த்துவதற்குப் பதிலாக தொழிலாளி முதலாளிகளைக் கொண்ட ஒரு நலவுரிமைக் குழுவை நியமிக்கும் படியும் அதன் மூலம் ஸ்தாபனத்தின்வளர்ச்சிக்கு தொழிலாளி முதலாளிகளின் கருத்துக்களைப் பரிமாறவும், தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் பெரிதும் வழி பிறக்கும் எனத் தன் கருத்தைத் தெரிவித்தார்.

தோழர் ஆரியதாசாவின் கருத்துக்களை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளதோடு நாலு தொழிலாளர் பிரதிநிதிகளையும் மூன்று நிர்வாக பிரதிநிதிகளையும் கொண்ட ஓர் நலவுரிமைக் குழு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து தோழர் ஆரியதாச தன் கடமைகளை முன்போல ஆற்றிக்கொண்டிருக்கின்றார்.

இது சம்பந்தமாக நான் அவரிடத்தில் கேட்டபொழுது ''இதில் எதுவும் புதுமையில்லை. கம்யூனிஸ்ட் என்றாலே ஒருவித பயத்தோடு பார்க்கின்ற மனிதர்கள் உண்மையான, திறந்த உள்ளத்தோடு அவர்களை அணுகினால் அவர்களிடத்திலே இருக்கக் கூடிய சிறப்பை, கடமை உணர்ச்சியை, உண்மை நெறியை உணர்வார்கள். எனக்கு இன்று கிடைத்த கௌரவத்தைப் போன்று கௌரவிக்கப்பட வேண்டிய எத்தனையோ கம்யூனிஸ்ட்டுகள் இருக்கின்றார்கள். ஆனால் நேர்மை உள்ளத்தோடு இன்னும் அவர்கள் அணுகப்படவில்லை. எனக்குக் கிடைத்துள்ள பெருமை என்னைச் சார்ந்ததல்ல. எனக்கு நல்வழி காட்டி, வர்க்க போதத்தை உணர்த்தி, கடமையாளனாக மாற்றிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு, இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்கு உரியது எனக் கூறினார்.

[ந.நி.]

## பிளவுஸ் ஹோட்டல் தொழிலாளர்களின் கோரிக்கை

பிளவுஸ் ஹோட்டல் தொழிலாளர்கள் பலவித இன்னல்களை இன்று அனுபவித்துவருகின்றனர். இதை ஒழிப்பதற்கு உடனடியாக எமது ஹோட்டல், பேக்கரி மற்றும் குடிவகைத் தொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இத் தொழிலாளர்களின் சார்பாக பல கோரிக்கைகளை ஹோட்டல் நிர்வாகத்திற்கு எமது சங்கம் அனுப்பியுள்ளது.

★

## ஹோட்டல் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி

இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்களில் ஹோட்டல் தொழிலாளர்கள் மிகவும் குறைந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் மிகக் குறைவானதாகும். இந்நிலையினைப் போக்கும் நோக்கத்தோடு சகல ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் அரசாங்க அளவு பஞ்சப்படி பெற்றெடுக்கவும், வருடாந்த சம்பளஉயர்வுபெற்றெடுக்கவும், போராடுவதென எமது ஹோட்டல் பேக்கரி மற்றும் குடிவகைத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்விரு கோரிக்கைகளையும் வென்றெடுக்க சகல ஹோட்டல் தொழிலாளர்களையும் எமது சங்கத்தின் கீழ் அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## மாதர் அணியின் தேசிய விழா!

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் மாதர் அணி ஒன்றை அமைத்துள்ளது. இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள எந்தச் சங்கத்திலாயினும் அங்கத்துவம் வகிக்கும் ஒரு பெண் இவ்வணியில் சேரலாம்.

தொழிலாளர்களுக்காகப் போராடுகின்ற அதே நேரத்தில் வேலை செய்கின்ற பெண்களை எதிர்நோக்கும் விசேஷ பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றிக்கு முடிவுகாண்பதே இவ்வணியின் நோக்கமாகும்.

இவ்வணியினால் கடந்த ஏப்ரல் 15ம் திகதி சிங்கள தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு ஓர் தேசிய விழாக் கொண்டாடப்பட்டது. இவ்வைபவம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களும் பிள்ளைகளும் வந்திருந்தனர்.

சிறு குழந்தைகளுக்கிடையில் பலவித விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசியினால் பரிசில்கள் வழங்கப்பட்டன. விழாவில் தேனிர் விருந்தும் இன்னிசை விருந்தும் இடம் பெற்றன.

விழாவின் முடிவில் மக்கள் சீனத்தின் இன்றைய நிலையை எடுத்துக்காட்டும் சினிமாப் படம் ஒன்றும் காண்பிக்கப் பட்டது.

—

## மீண்டும் வேலை

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள நடராசா அச்சகத்திலிருந்து கரிசன் என்னும் தொழிலாளி நீதியற்ற முறையில் விலக்கப்பட்டார். இதற்கெதிராக எங்கள் சங்கம் நடவடிக்கை எடுத்தது. அதன் பயனாக தொழில் கந்தோரில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது மீண்டும் அத் தொழிலாளிக்கு வேலை வழங்கவும், வேலையற்றிருந்த காலத்திற்குரிய சம்பளம் வழங்கவும் நிர்வாகம் இணங்கியுள்ளது.

## கார்கில்ஸ் தொழிலாளர்களின் வருடாந்தக் கூட்டம்

ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்துள்ள கார்கில்ஸ் தொழிலாளர்கள் தமது கிளையின் வருடாந்தக் கூட்டத்தை அண்மையில் நடத்தினர். கீழ் காண்போர் அக் கிளையின் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-
H. A. மார்தலிஸ்,

உப தலைவர்:-
S. H. S· ரணசிங்க

இணைச் செயலாளர்கள்:-
M. V. கத்தையா,
H. டொன் சபட்

# அடிமைச் சங்கிலியை உடைத்து எறிவோம்!

## சுதந்திரவேட்கை உலகெங்கும் பரவட்டும்!!

- கரவைக் கந்தசாமி -

மே தினத்தில் உலகெங்கும் பலவித குரல்கள் ஒலிக்கின்றன. சோவியத் நாட்டில் கம்யூனிச சமுதாயம் கட்டி வளர்க்கும் தோழர்களின் சங்கநாதம் கேட்கிறது. மக்கள் சீனத்தில் வறுமையும், பிணியும் ஒழித்து சோஷலிஸ சமூகம் காண விரைந்து முன்னேறும் வீரர்களின் ஐக்கிய கோஷம் கேட்கிறது. ஏனைய சோஷலிச நாடுகளிலும் முன்னேற வேண்டும் என்ற பிரதிபலிப்புத் தெரிகிறது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற முதலாளித்துவ நாடுகளில் சமாதான விரும்பிகளின், ஜனநாயக சக்திகளின் சக்திமிக்க குரல் கேட்கிறது. விடுதலை பெற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் தங்கள் நாட்டு சுதந்திரத்தைப்பூரணமாக்கவும்,வாழ்விலே புதிய பொலிவு காணவும் சபதம் செய்யும் ஒலி கேட்கின்றது.

அதே நேரத்தில் இன்றும் விடுதலை பெருத ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் சுதந்திர கோரிக்கை முழக்கமும் கேட்கிறது. மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்டிருந்த பல நாடுகள் இன்று சுதந்திரம் பெற்றுவிட்டன. ஆனல் இன்னும் சில நாடுகளில் ஏகாதிபத்தியங்களின் பிடி அகலவில்லை. அந்த நாட்டுச்செல்வங்களைச் சுரண்டி வாழுகின்ற ஆசை இன்னும் அவர்களிடம் அகலவில்லை.

உலகம் பூராவும் பரவி விரிந்திருந்த ஏகாதிபத்தியம் இன்று மிகச் சுருங்கி விட்டது. அதன் கடைசி மூச்சு இன்று கேட்கிறது. ஆனல் சுதேசிய மக்களின் உழைப்பிலே, அவர்களின் ரத்தத்திலே உல்லாச வாழ்க்கை நடத்திய ஏகாதிபத்தியங்களுக்கு இந்த நேரத்திலும் அந்த நாடுகளை விட்டுச் செல்ல மனதிலே இடம் இல்லை. ஆனல் ஆசிய,ஆபிரிக்க,லத்தீன் அமெரிக்க மக்கள் விளித்தெழுந்து விட்டனர். சுதந்திரத்தின் பெருமையை, அன்னிய ஆட்சியை அகற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து விட்டார்கள்.

ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்கா பூராவும் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புக்கனல் சுடர் விட்டு எரிகிறது. சகல மக்களும் தம் இன நிற மத பேதம் மறந்து ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய் தம் தாயக விடுதலைப் போரில் ஒன்று பட்டு நிற்கின்றனர். கடந்த பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க ஒற்றுமை மாநாடு இதை நன்கு எடுத்துக் காட்டியது.

மக்களின் வீராவேசமிக்க எழுச்சிக்கு முன்னல் ஏகாதிபத்தியம் மண்டியிடுகிறது. சின்னஞ் சிறு கியூபாவின் எழுச்சிக்கு முன்னல் அமெரிக்க ஏகாதிபத்தியம் அடிபணிந்தது. ஏகாதிபத்தியம் பலமிழந்து விட்டது, தன் சாக்காட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே ஓர் சிறந்த உதாரணமாகும்.

### லத்தீன் அமெரிக்காவில் பேரெழுச்சி

லத்தீன் அமெரிக்காவில் என்றுமில்லாதவாறு சுதந்திர வேட்கை இன்று பரவி வருகிறது: அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமை கொள்ளும் போக்கு, சுரண்டல் நாடகம் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. கியூபாவின் வெற்றி சகல லத்தீன் அமெரிக்க மக்களுக்கும் பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது. அத்தோடு தங்கள் தாயகத்தின் விடுதலைக்கு வீர கியூபா கடைப்பிடித்த வழியே சாலச் சிறந்தது என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளனர்.

லத்தீன் அமெரிக்க நாட்டு விவசாயிகளும் தொழிலாளர்களும் மாணவர்களும் உண்மையைத் தெரிந்துகொண்டனர். தாம் எல்லாம் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை உணர்ந்துவிட்டனர். கியூபாவைத் தாக்க அமெரிக்கா முனைந்தபொழுது லத்தீன் அமெரிக்கா பூராவும் வெடித்துக் கிளம்பிய அமெரிக்க எதிர்ப்பு ஆர்பாட்டமே இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

லத்தீன் அமெரிக்க மக்கள் மத்தியில் சுதந்திர, ஜனநாயக புரட்சி எண்ணங்கள் வளர்ந்து வருகின்ற அதே அளவுக்கு அங்கு நிலவிவரும் அமெரிக்க தாசர்களின் ஆட்சிகளும் மிகக் கடுமையான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

வெனிசுலா, கௌதமாலா ஆர்ஜன்டைன போன்ற நாடுகளில் ஆட்சியாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், பொதுக் கூட்டங்களும், வேலைநிறுத்தங்களும் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. எந்த நேரத்திலும் இவர்களின் ஆட்சி எடுத்தெறியப்படும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

லத்தீன் அமெரிக்காவிலேயே முதன் முதல் ஆயுதத்தாங்கிப் போராடி விடுதலை பெற்றவர்கள் கியூபா நாட்டு மக்களாவர். அதன் பின்பு ஆயுதம் தாங்கிப் போராடுகின்ற தன்மை முழு லத்தீன் அமெரிக்காவிலும் புயலெனப் பரவி வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களுடைய அடக்கு முறைக்கு எதிராகப் போராட இதுவே அந்த நாட்டு மக்களுக்குள்ள ஒரே ஒரு வழியாகும். வெனிசுலா, கௌதமாலா, கொலம்பியா, ஈருடோர் போன்ற நாடுகளில் ஆயுதம் தாங்கிய சில தேசிய விடுதலை வீரர்களுக்கு முன்னல் அமெரிக்க கைப்பொம்மை ஆட்சியாளர்கள் தடுமாறுகின்றனர்.

உக்ரே, சிலி, பீரேசில் போன்ற நாடுகளில் மக்கள் மத்தியில் பரந்த ஐக்கிய முன்னணி ஆரம்பிக்கப்பட்டு சுதந்திரப் போராட்டம் நடத்தப் படுகிறது. தொழிலாளர்களின், விவசாயிகளின் இயக்கங்கள் புதிய சக்தியோடு தம் தேசிய விடுதலையில் முன்னின்று போராடுகின்றனர்.

### ஆபிரிக்காவில் என்றுமில்லா எழுச்சி

ஏகாதிபத்தியத்தின் கேவலமான சுரண்டல் ஆபிரிக்காவில் தான் அதிகமாக நடைபெற்று வருகிறது. ஆண்டு தோறும் பல நாடுகள் அடிமைத் தளை அறுத்து விடுதலைப் பாதையில் முன்னேறிச்செல்கின்றன. ஆனல் இன்றும் பல நாடுகள் கொடிய சுரண்டல் முறைக்கு ஆளாகி, வெள்ளையர்களின் வேட்டைக் காடாக விளங்குகின்றன. உலகில்வாழ்கின்றனமக்களிடையே மிகவும் கேவலமான முறையில் ஆபிரிக்க மக்கள் இன்றும் வாழ்கின்றனர்.

ஆபிரிக்கா பல சிறந்த கனிப் பொருட்களை உடையது. மத்திய, கிழக்கு ஆபிரிக்காவில் சுரங்கத் தொழில், வெளிநாட்டு ஏற்றுமதி, மொத்தமாக தேசிய பொருளாதாரமே அன்னிய மூலதனத்தில் தான் தங்கியுள்ளது. அதில் பெரும் பங்கு வகிப்பது பிரித்தானிய ஏகாதிபத்திய மூலதனமாகும்.

தங்களுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்த ஏகாதிபத்தியம் தனது நாட்டு மக்களை (வெள்ளைக்காரர்கள்] அந்த நாடுகளில் பெருமளவில் குடியேற்றியது. அந்த நாடுகளிலுள்ள நஞ்சை நிலங்களும், தோட்ட நிலங்களும் வெள்ளையருக்கே சொந்தம். இந் நிலங்களில் ஆதிக்கம் செலுத்துவதின் மூலம் இவ்வெள்ளையர் கூட்டம் உள்நாட்டு அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. தேசிய விடுதலை எழுச்சிகளை முறியடிக்க, முளையிலேயே கிள்ளி விட முனைகிறது.

ஆனல் ஆபிரிக்காவில் எழுந்துள்ள சுதந்திர தீச்சுடர் வேகமாய்ப் பரவிவருகிறது. தங்கனிக்கா, புருண்டி, ரவண்டா, உகண்டா போன்ற நாடுகள் கடந்த ஆண்டில் விடுதலை பெற்றன. ஆபிரிக்காவின் நாலா பக்கங்களிலும் சுதந்திர கோஷம் கிளம்பிவருகிறது; மக்கள் ஆர்ப்பாட்டங்கள் பெருகி வருகின்றன. காலனி ஆதிக்கத்தை முறியடிக்க ஆயுதம் தாங்கியும், சமாதான வழியிலும் இம் மக்கள் போராடி வருகின்றனர்.

வெள்ளைக் குடியேற்ற வாசிகளின் மூலம் தங்கள் ஆட்சியை நீடிக்க விரும்பிய ஏகாதிபத்திய சூழ்ச்சி தோல்விகண்டுவிட்டது. வடக்கு ரொடிசிய மக்கள் ஆயுதம் தாங்கிப் பல திடீர் தாக்குதல்களை நடத்தினர். இதனல் மத்திய ஆபிரிக்க சமஷ்டியிலிருந்து பிரிந்து போகும் உரிமை வடக்கு ரொடிசிய மக்களுக்குக் கிடைத்துள்ளது. நைஷ்லன்ட் நாடும் தனது சுதந்திர போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளது.

### நவீன காலனி ஆதிக்கம்

ஆசியாக் கண்டத்தைப் பொறுத்தவரையில் ஏகாதிபத்தியம் ஓரளவுக்குத் தன் பிடியை இழந்துவிட்டது. இருப்பினும் தென்கொரியா, தென்வியட்நாம் போன்ற நாடுகளில் நேரடியாகவே தனது ஆதிக்கத்தை அமெரிக்கா நிலைநிறுத்த முயன்று வருகிறது. ஒரே இன மக்களை, ஒரே நாட்டைப் பிளவு போட்டு, ஆசிய மக்களைப் பிரித்தாள அமெரிக்கா நப்பாசை கொண்டுள்ளது.

ஜப்பான், துருக்கி போன்ற நாடுகளில் தனது படைகளை நிறுத்தியும், வேறு பல நாடுகளில் பொருளாதார ரீதியாகவும் தனது ஆதிக்கத்தை அமெரிக்கா நிலை நிறுத்தப் பார்க்கிறது.

சகல நாடுகளிலும் தோன்றியுள்ள தேசிய எழுச்சிக்கு முன் ஏகாதிபத்தியத்தினல் நிற்க முடியவில்லை. இதனல் புதிய முறையில் தமது ஆதிக்கத்தை இந்நாடுகளில் நிறுவ ஏகாதிபத்தியங்கள் முயன்று வருகின்றன. இந்த நவீன காலனி ஆதிச்கத்தை நிலை நிறுத்துவதில் அமெரிக்கா ஏனைய ஏகாதிபத்தியங்களுக்கு முன்னிற்கிறது.

பழைய காலனி ஆதிக்கம் உக்கற்றப்படுகின்ற நாடுகளின் ஆதரவாளனக, உதவி செய்பவனக முகமூடியணிந்து அமெரிக்கா தனது நவீன காலனி ஆதிக்கத்தை நிறுவ முயற்சி செய்கிறது.

அண்மையில் விடுதலை பெற்ற நாடுகளின் தேசிய வளர்ச்சிக்கு உதவி செய்வதாகக்கூறி பொருளாதார உதவி செய்ய அமெரிக்கா முன்வருகிறது. உதவியின் பெயரால் அந்நாடுகளுக்கு சமாதானப் படைகளை அனுப்புகிறது. இந்த உதவியின் சிறப்

[12-ம் பக்கம் பார்க்க]



மக்கள் சீனத்தில், மேதினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படும். நாடு பூராவும் களியாட்டங்களும் கலாச்சார நிகழ்ச்சிகளும் அன்று நடைபெறும். அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றை மேலே காணலாம்.

# தேசியப் பிரச்சினை தீர இடதுசாரி ஐக்கியம் காண்போம்!

**- டபிள்யு. ஏ. குணசேகர -**

நாட்டிலே மக்கள் தொகை கூடிக் கொண்டு போகிறது. ஆனால் வேலை செய்பவர்கள் மொத்தம் 15 வீதமாகும். அதே நேரத்தில் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவ் ஆட்சியால் முடியாமலிருக்கிறது.

தற்போதைய ஆட்சி எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக இருப்பதால் ஆட்சியை வீழ்த்த அவர்கள் புது முயற்சி எடுக்கின்றனர். மக்களுடைய பிரச்சினைகள் நாளுக்கு நாள் கூடுகின்றன. ஆனால் அரசாங்கம் அதைத்தீர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருக்கிறது. சிலர் மீண்டும் யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் இப்பிரச்சினைகள் தீரும் என எண்ணுகின்றனர். யு. என். பி. யால் இவற்றைத் தீர்க்க இயலுமா இயலாதா என்பது பற்றி பொதுமக்களுக்கு இன்று சரியான விளக்கமில்லை. இது மிகவும் பயங்கரமான நிலையை சிருஷ்டிக்கும்.

இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் இருந்த சில வேறுபாடுகளின் காரணமாக பொதுமக்களையும் தொழிலாளர்களையும் தத் தமக்குள் பிரித்து வைத்திருக்கவே முடிந்தது. இதனால் பொதுமக்கள் உண்மையை உணர முடியாமல் இருந்தார்கள். இந்த நிலையில் பிற்போக்குவாதிகளின் பொய்ப்பிரச்சாரத்திற்கு பொதுமக்கள் இரையாகுவது புதுமையானதொன்றல்ல.

எங்கள் தொழிற்சங்கங்களில் உள்ள சில தொழிலாளர்களே பச்சைச் சட்டையும் பச்சைத் தொப்பியும் அணிந்து தேர்தல் காலங்களில் வேலை செய்வதை நாம் கண்டிருக்கின்றோம். சகல தொழிற் சங்கங்களிலுமுள்ள, நல்ல முறையில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களைத் தவிர மற்றவர்கள் போராட்ட உணர்ச்சியற்றவர்களாய் இருப்பதிலிருந்த இதைப் புரிந்து கொள்ள முடியும்.

இவற்றை நாம் நன்கு மனதிலே கொள்ளவேண்டும். இதற்கு மேலாவது காலம் கடத்தாமல் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் எந்த விதத்தில் ஐக்கியப் படுத்தலாம் என்பது பற்றி சிந்திப்பது சிறப்பாகும்.

இந்த நாட்டு மொத்த மக்கள் தொகையில் 10 வீதமே தொழிற் சங்க ரீதியாக அணி திரட்டப்பட்டுள்ளனர். ஏனைய மக்கள் தொகையினர் எந்த விதமான அரசியல் தலைமையுமின்றி இருக்கின்றனர். அவர்களுடைய பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக அவர்கள் தனித்தனியே போராடுகின்றனர். அவ்வித போராட்டங்களைக் கூட அரசாங்கம் தனது முழுச் சக்தியையும் உபயோகித்து முறியடிக்க முயன்றது.

தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியாகப் போராடுவது தவறு எனச்சிலர் சொல்கின்றனர். அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர்கள் சொல்வது கிடையாது. ஆனால் சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் கம்யூனிஸ்ட், சமசமாஜ, எம்.ஈ.பி. போன்ற இயக்கங்களிலுள்ள தொழிலாளர்கள் கூட, ஒற்றுமையின்றி இருப்பதினால் தாம் எத்திசையை நோக்கிச் செல்கின்றனர் என்பதைப் புரியாதவர்களாக இருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்கு நல்ல பாதையை இடது சாரிக் கட்சிகள் தனித்தனியே காட்ட முடியாதுஎன நாம் எண்ணுகிறோம். தொழிலாளர்கள் தனித்தனி தொழிற்சங்கங்களில் பிளவுபட்டிருப்பதினால், அவர்கள் நடத்தக்கூடிய நேர்மையான போராட்டங்கள் கூட அரசாங்கத்தால் முறியடிக்கப் படுகிறது.

இன்று நாடுள்ள நிலையில் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டும் போராடுவது இயலாத காரியம் எனச் சிலர் தெளிவுபெற்றிருப்பது வரவேற்கத்தக்க நல்ல சூழ்நிலையாகும். இந்த சூழ்நிலையை நாம் சரியாக உபயோகிக்கவில்லையானால் அவர்கள் பயங்கரப் பாதையில் செல்லக்கூடும் என்பது தெளிவாகியுள்ளது.

ஆகவே இந்த நாட்டிலுள்ள 15 லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு சரியான தலைமையளித்து, சோஷலிச சமுதாயத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வது மிக முக்கிய காரியமாகும். அதற்குத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து ஐக்கிய அரசியல் தலைமையளிக்க வேண்டியது சிறப்பாகும். அதற்கு முதலில் ஓர் பொதுத் திட்டமொன்றைத் தயாரிக்கவேண்டும். அதைப் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் நன்கு விளக்கவேண்டும். அதன் அடிப்படையில் தொழிலாளர் விவசாயிகளை ஒன்று திரட்டவேண்டும்.

பிளவுபட்டுள்ள இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபட்டு, தொழிலாளர்களை அரசியல் ரீதியாக வளர்த்து எடுக்காவிடில் எதிர்காலத்தில், இலங்கையில் ஈராக், சிரியா போன்ற நாடுகளில் உள்ளநிலை ஏற்படும். இன்றைய ஆட்சி மக்கள் மத்தியில் மதிப்பை இழந்து வருகிறது. அதே நேரத்தில் பிற்போக்கு வாதிகள் பெரும் சக்திபெற்றுள்ளதாகக் காட்டிவருகின்றனர்.

இதை மனதிலே கொண்டு கம்யூனிஸ்ட், சமசமாஜ, எம். ஈ. பி. போன்ற சோஷலிஸ்ட் இயக்கங்கள் ஒன்று சேர்வது அவசியம். அதே போன்று எங்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பூரணப்படுத்தவும், பசிப் பிணியைப் போக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், தேசிய உணர்வுத் தேவையை பூர்த்திசெய்தல், எங்களுக்குத் தேவையானவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்தல், நாட்டை நாசமாக்கிவரும் சக்திகளை ஒழித்தல், எமது நாட்டு கல்வி வளர்ச்சியை சிறப்பாக அமைத்தல் போன்ற வற்றை முன்வைத்து ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் தொழிலாள விவசாய மக்களின் ஐக்கியம் அமைத்து சோஷலிச சமுதாயம் காண திட்டம் தீட்டப்பட வேண்டும்.

இடது சாரி ஐக்கியத்திற்காக உங்கள் இயக்கம் எடுத்துள்ள முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதோடு, இலங்கையிலுள்ள சகல சோஷலிஸ எண்ணம் கொண்டவர்களையும் ஒன்று சேர்த்த ஐக்கியத்திற்கு எம் பூரண ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


இன்றே வாங்குங்கள் !

**மாஸ்கோ பதிப்பகத் தமிழ் நூல்கள்**

| | |
|---|---|
| 1. சோவியத் இன மொழிச் சிறுகதைகள் | 1-75 |
| 2. வெற்றியாளர்கள்—நாவல் | 1-50 |
| 3. விடிவெள்ளி—நாவல் | 1-00 |
| 4. துப்பறியும் அதிகாரியின் குறிப்புகள் | 1-50 |
| 5. அவன் விதி | 50 |
| 6. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை —மார்க்ஸ், எங்கல்ஸ் | 60 |
| 7. சோவியத் யூனியனில் சுகாதாரப் பாதுகாப்பு | 50 |
| 8. சோவியத் யூனியனது அரசியல் திட்டம் | 35 |
| 9. ஆசியாவும் ஆபிரிக்காவும் | 50 |
| 10. குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்—பிரெடரிக் ஏங்கல்ஸ் | 1-25 |
| 11. மூன்று ஆண்டுகள் (சிறுகதைகள்) | 1-50 |
| 12. முறியடிப்பு | 1-50 |

12 புத்தகங்கள் ஒன்றாக எடுப்பவர்களுக்கு 30%. கமிஷன் உண்டு. தபால் செலவு இனும் போஸ்டல் ஓடர் அல்லது மணி ஓடர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

கிடைக்குமிடம்:

**மக்கள் பிரசுராலயம்**

249, 1-ம் டிவிஷன் மருதானை, கொழும்பு-10

மக்கள் பிரசுராலயப் புத்தகசாலை

124, குமாரன் ரத்தினம் வீதி, கொழும்பு-2;

பூபாலசிங்கம் புத்தகசாலை,

கிராண்ட் பஸார், யாழ்ப்பாணம்.


## தொழிலாளர் சபதம்

★ யாழ்ப்பாணக் கவிராயர் ★

கொடுமைகள் யாவும் ஒழிப்போம் – கொண்ட
கொள்கையை வளர்ப்போம்.
அடிமைதம் விலங்கினை அறுப்போம் – அன்பு
ஆனமட்டும் இங்கு வளர்ப்போம்.

முதலாளி தன்மை முடிப்போம் – நம்
தொழிலாளர் தம்மை வளர்ப்போம்.
இதமான வாழ்க்கை சமைப்போம் – இன்ப
இலங்கையை நன்கு அமைப்போம்.

நாசக் காரரை வீழ்த்துவோம் – நம்
நாட்டின் ஒற்றுமை தேக்குவோம்
தேச பக்தியைக் கூட்டுவோம் – தினம்
தேசம் சிறக்க வாழ்த்துவோம்.

விடிவுகாலம் இங்கு எமக்காம் – இதை
வெற்றியோடு ஈட்டித்தருவோம்.
மிடிமையை முற்றும் மடிப்போம் – சுய
ஆட்சியைப் பெற்றே உழைப்போம்.

தேசநலம் என்றும் காப்போம் – திரு
செல்வவளம் மிகச் சேர்ப்போம்.
பேசுமின மக்கள் மொழியை – பெரும்
பேறுக எண்ணி மதிப்போம்.

காடுகளை வெட்டி எரிப்போம் – நல்ல
கழனிகள் எங்கும் வளர்ப்போம்
தேடிடும் செல்வம் யாவும் – இங்கு
தேவை வரையினில் சேர்ப்போம்.


ஆலைகள் எங்கும் அமைப்போம் – அதில்
ஆயிரம் வித்தைகள் செய்வோம்.
வேலைகள் எவர்க்கும் கொடுப்போம் – விதம்
ஆன கலைகள் வளர்ப்போம்.

நவீனஇக் காலம் தந்த – நல்ல
நாகரீகம் நன்கு அளிப்போம்.
புவியின் பாகம் எங்கும் – பெரும்
புதுமைகள் பெற்று வாழ்வோம்.

மண்ணில் விளைந்த புதுமை – உலக
மக்கள் எவர்க்கும் பொதுமை
எண்ண முடிக்க மறுப்போர் – இங்கு
இருக்க முற்றும் வெறுப்போம்.

சோஷலிசப் பாதை செல்லுவோம் – வெறும்
சோதாக் கருத்தினைத் தள்ளுவோம்.
தாசர்க ளாக வாழ்ந்திடோம் – தகு
நேசர்க ளாக வாழுவோம்.

## மே தினமும் தொழிலாளர் ஐக்கியமும்



★

எஸ். நடேசன்
தலைவர் இ. தோ. தொ. ச.

உலகத்தில் தோன்றும் கட்டிடங்களையும், மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும், ரயில் வேக்களையும் விமானங்களையும், மற்றும் மனித சமுதாயத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் சிருஷ்டித்திருப்பது மனித உழைப்பேயாகும். என்றாலும், டாஜ் மஹாலை ஷா ஜெஹான் எழுப்பினானென்றும், பராக்கிரம சமுத்திரத்தை பராக்கிரமபாகு என்ற அரசன் அமைத்தானென்றும், ஏதோ ஓர் அணைக்கட்டை சேனநாயக்கா கட்டினானென்றும், இந்தத் தோட்டத்தை சிமித்துரை உண்டாக்கினானென்றும், அந்தப் பங்களாவை பிளேக் துரை கட்டினானென்றெல்லாம் கூறுவது வழக்கம். உண்மையில் இத்தனைக்கும் மூல காரணமாயிருப்பவர்கள் உழைப்பாளி மக்களே.

ஆனால், பெரும்பாலான நாடுகளில் பாட்டாளிகள் தாழ்த்தப்பட்டு, மிகக் கேவலமான நிலையிலிருக்கின்றனர். அவர்கள் உழைக்கும் பயனை, ஒரு சிலர் பெற்று சுக போக வாழ்க்கை நடாத்திக்கொண்டு வருகின்றனர். சொற்ப சம்பளத்திற்காக தொழிலாளிகள் அடிமைகளைப்போல் உழைத்து உருக்குலைந்து போவதையே காண்கின்றோம். உழைப்பவன் ஒருவன், உண்டு களிப்பவன் இன்னொருவன் என்ற நியதி மாற வேண்டுமென ஏங்கித் தவித்தனர்– தவிக்கின்றனர் பாட்டாளி மக்கள்.

நாளொன்றுக்கு எட்டு மணி நேரமே வேலை இருக்கவேண்டுமெனக் கோரி அமெரிக்கத் தொழிலாளர்கள் 1886 ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி வேலை நிறுத்தம் செய்தனர். அப்போராட்டத்தில் வெகுவாக வெற்றி கண்டு மகிழ்ந்தனர். ஆனால், முதலாளி வர்க்கம் அவர்கள் மேல் வெறி நாய் பாய்ந்தாற்போல் சீறி விழுந்து சின்னா பின்னப் படுத்த முயன்றது. இந்தச் சம்பவத்திலிருந்தே எழுந்தது மே தினக் கொண்டாட்டம். ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதல் தேதியை தொழிலாளர் தங்கள் விடுதலைத் தினமாகக் கொண்டாடுவது வழக்கில் வந்தது.

இலங்கையிலும் மே தின விழா பலவருடங்களாக அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது: 1956-ல் ஐக்கிய தேசியக் கட்சி

[12-ம் பக்கம் பார்க்க]

# செங்கொடியின் கீழ் ஒன்றுபடுவோம்!

## அரசாங்க அளவு பஞ்சப்படியை வென்றெடுப்போம்!!

### தோட்டத் தொழிலாளர் மாநாட்டில் தோழர் என். சண்முகதாசன் முழக்கம்!

[இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் நுவரேலியாவில் நடத்திய தோட்டத் தொழிலாளர்களின் விசேஷ மாநாட்டின்போது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி தோழர். என். சண்முகதாசன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் விபரத்தைக் கீழே தருகிறோம்.] [ஆ-ர்.]

பல காரணங்களினால் இம்மாநாடு சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது. தோட்டத்தொழிலாளர்கள் எல்லோரும் தங்களுக்கெல்லாம் பொதுவாக உள்ள ஓர் பொருளாதாரப் பிரச்சினைக்காக முதன் முதலில் ஒன்று கூடியிருப்பது இவ்விசேஷ மாநாட்டில்தான் என எண்ணுகிறேன், தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க இயக்க சரித்திரத்தில் இம்மாநாடு ஓர் முக்கிய திருப்பு முனையாக அமைகிறது. தோட்டத்தொழிலாளர்கள் இந்த நாட்டின் ஏனைய தொழிற்சங்க இயக்கத்திலிருந்து பிரித்துவைக்கப்பட்டிருந்தது இத்துடன் முடிவடைந்துள்ளது. ஏனைய தொழிலாள வர்க்கத்தினரிடமிருந்து இன மொழி பேதத்தின் மூலம் பிரித்து வைத்திருந்த இயக்கங்களைப் புறக்கணிக்கத் தோட்டத்தொழிலாளர் தொடங்கிவிட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட பல தொழிற்சங்கள் இருக்கின்றன. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகப் போராட இன்றுவரை இச் சங்கங்கள். முன்வரவில்லை. இது மிகவும் வேதனைக்குரியதாகும்.

#### தோட்டத் தொழிலார்களின் துரதிஷ்டம்.

தொழிலாளி வர்க்கத்திலேயே மிகவும் கேவலமாகச் சுரண்டப்படுபவர்கள் தோட்டத்தொழிலாளர்கள். ஆகக் குறைந்த சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மனிதன் வாழ முடியாத கீழான நிலையிலே அவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் ஏனைய தொழிலாளர் மத்தியிலுள்ள போராட்ட நிலை இவர்கள் மத்தியில் கிடையாது. இது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாகும்.

இன்றுவரை துரதிஷ்ட வசமாகத்தோட்டத்தொழிலாளர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த தலைமையே இந்த நிலைக்குக் காரணமாகும். இத்தலைவர்களில் பலர் முதலாளிகள், வலதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அதிலும் கூடுதலாகப் பலர் தாங்களே தோட்டச் சொந்தக்காரர்களாகவும் விளங்கினர். இவ்விதமான தலைவர்கள் தோட்டத்தொழிலாளிகளின் உண்மையான, பொருளாதார முன்னேற்றத்திற்கான போராட்டத்திற்கு தலைமைவகிப்பார்கள் என எதிர்பார்ப்பது தவறுதான். அவர்கள் விரும்பியது ஒன்றே ஒன்றுதான். அரசியல் கோரிக்கைகளை கிளப்பி தோட்டத் தொழிலாளர்களின் வாக்கைப் பெற்றோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளாகவோ பாராளுமன்றம் செல்லவேண்டும் என்பதாகும்.



தோட்டத்தொழிலாளர் மாநாட்டில் எல்பிட்டிய மாவட்டப் பிரதிநிதி தோழர் விமலபால சிங்களத்தில் பேசிக்கொண்டிருப்பதையும் தோழர் கரவைக் கந்தசாமி தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருப்பதையும் காணலாம். இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் எஸ். நடேசன் பின்னால் அமர்ந்து பத்திரிகை நிருபரோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

#### பழைய நிலை ஒழியட்டும்

இந்த நாட்டிலுள்ள முக்கிய தொழிற் சங்கங்களோடு தோட்டத் தொழிலாளர்களும் ஒன்றுசேருகிறார்கள்என்பதற்கு இம்மாநாடு ஓர் எடுத்துக் காட்டு. இந்த நாட்டிலுள்ள தமதுவர்க்க உடன் பிறப்பான தமிழ், சிங்கள தொழிலாளர்களிடமிருந்து இனிமேலும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள். இந்த நாட்டின் ஏனைய தொழிலாளர்களைப் போல வாழ, தமது பொருளாதார உரிமையை வென்றெடுப்பதற்குரிய போராட்டத்தை இனிமேலும் காலம் தாழ்த்துவது இல்லையென தோட்டத் தொழிலாளர்கள் உறுதிபூண்டு விட்டனர்.

ஆதலால் தான் தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ் சிங்களத் தொழிலாளர்களின் மிக முக்கியகோரிக்கையைமுன்வைத்துப்போராட இம்மாநாட்டில் நாம் கூடியுள்ளோம். பல வருடங்களாக எங்கள் சம்பளம் உயரவில்லை. அரசாங்க அளவு பஞ்சப்படி பெறுவதின்மூலம் அந்த நிலை ஒழிக்கப்படவேண்டும். அரசாங்க அளவு பஞ்சப்படி என்பதன் அர்த்தமென்ன?

#### சம்பள வேறுபாடு

அரசாங்கத்தின்கீழ் வேலைசெய்யும் பயிற்சி பெறாத ஊழியருக்கு அடிப்படைச் சம்பளமாக ரூபா 1/44 சதம் வழங்கப்படுகிறது. சம்பள நிர்ணய சபையின் கீழுள்ள தொழிலாளர்களுக்கு ரூபா 1/40 சதம் வழங்கப்படுகிறது. எங்களுக்கு ரூபா 1/25 சதம் வழங்கப்படுகிறது. இவற்றிற்கிடையே சொற்ப வித்தியாசமே காணப்படுகிறது. ஆனால் அரசாங்கத்தின் கீழ் வேலைசெய்யும் பயிற்சி பெறாத தொழிலாளிக்கு பஞ்சப்படியாக ரூபா 2/93 சதம் வழங்கப்படுகிறது. சம்பள நிர்ணய சபையின் கீழுள்ள தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி ரூபா 2/09 சதம் வழங்கப்படுகிறது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 1/18 சதம் மட்டுமே கிடைக்கிறது. ஆகவே ஒரே வேலையைச் செய்யக்கூடிய அரசாங்க ஊழியருக்கும் தோட்டத் தொழிலாளிக்கும் பஞ்சப்படியில் ரூபா 1/75 வித்தியாசம் இருக்கிறது.

இவ்வித ஏற்றத்தாழ்வு நீதிக்கு முரண்பட்டதாகும்.

வாழ்க்கைச் செலவு கூடுகிறது. அதற்கு ஈடுசெய்யவே பஞ்சப்படி வழங்கப்படுகிறது. இந்த நாட்டிலுள்ள சகல தொழிலாளிக்கும் வாழ்க்கைச் செலவு கூடியுள்ளது. ஆகவே ஒரே அளவாகக் கூடியுள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஈடுசெய்ய வழங்கப்படுகின்ற பஞ்சப்படியில் ஏற்றத்தாழ்வு இருப்பது ஏற்கமுடியாததாகும்.

#### எங்கள் சாதனை

தனிப்பட்ட ஸ்தாபனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் மிக முக்கிய கோரிக்கையாக அரசாங்க அளவு பஞ்சப்படிக்கோரிக்கை இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தினால் 1957-ல் முன்வைக்கப்பட்டது. எங்களது தேயிலை றப்பர் ஏற்றுமதித் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிலாளர்கள், சினிமாத் தொழிலாளர்கள் போன்றோருக்கு இக் கோரிக்கையை வென்றெடுத்தோம். இப்பொழுது தோட்டத்தொழிலாளர்களுக்கும் இக் கோரிக்கையை வென்றெடுக்க போராட்டம் நடத்தவேண்டியது அவசியமாகும்.

இக் கோரிக்கையை வென்றெடுக்க செங்கொடியின் கீழ் அணி திரளுமாறு தோட்டத் தொழிலாளர்களை அழைக்கிறோம். அதே நேரத்தில் இக் கோரிக்கைக்காக ஐக்கிய போராட்டம் நடத்த எங்களோடு ஒன்றுபடுமாறு சகல தோட்டத் தொழிலாளர் சங்கங்களையும் அழைக்கிறோம்.

## எலாஸ்டோ நிர்வாகத்தின் போக்கு நீதியற்றது

### கைத்தொழில் நீதிமன்றத் தீர்ப்பு

பெங்தோட்ட எலாஸ்டோ உற்பத்தி ஸ்தாபனத்தார் 111 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தனர். இது சம்பந்தமாக அந்த ஸ்தாபன நிர்வாகத்திற்கும் எமது சம்மேளனத்தில் இணைந்துள்ள ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்திற்கும், சுதந்திர தொழில் மற்றும் உற்பத்தி தொழிலாளர் சங்கத்திற்குமிடையில் தகராறு ஏற்பட்டது. இத்தகராறு சம்பந்தமாக மூன்று உறுப்பினரைக் கொண்ட கைத்தொழில் நீதி மன்றம் விசாரணை நடத்தியது. விசாரணையின் முடிவில் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது நீதியற்றதென்றும், சட்ட விரோதமானதென்றும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அங்கு வேலைசெய்த தொழிலாளர்கள் தொழிற் சங்கமொன்றை அமைக்க விரும்பினர். அப்பொழுது இத்தகராறு ஆரம்பமாகியது. தொழிலாளர்களின் புதிய முயற்சியை நிர்வாகம் முற்றுமுழுதாக எதிர்த்தது. அந்த மாதத்தில் தொடர்ந்தாற்போல் 3 சனிக்கிழமைகளில் தொழிலாளர்களின் கூட்டத்தைக்கூட்டி சங்கத்தில் சேரவேண்டாமென வேண்டினர், ஆனால், இவ் வேண்டுகோளைத் தொழிலாளர்கள் ஏற்கவில்லை. இவ்விதம் நடைபெற்ற கூட்டமொன்றில், தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து விலகாவிடில் தான் திரும்பிவரப் போவதில்லையென்று கூறிவிட்டு பொறியியல் டிரக்டர் டொனல்ட் குணசேகர கூட்டத்தைவிட்டு வெளியேறியதாகத் தெரிகிறது.

அதன்பின்பு தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து விலகுவதாகவும் திரு குணசேகராவைத் திரும்பி வரும்படியும் வேண்டிக்கொள்ளும் பத்திரம் ஒன்றில் தொழிலாளர்களின் கையெழுத்து சேகரிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிடத்தக்க தொகையினர், முக்கியமாக என்ஜினியரிங் பகுதித் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து விலக முடியாதென திடமாகக் கூறினர். இதைத் தொடர்ந்து 1960 அக்டோபர் மாதம் 26-ம் திகதி எவ்வித அறிவித்தலுமின்றி என்ஜினியரிங் பகுதி மூடப்பட்டதுடன் அப்பகுதித் தொழிலாளர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். சிறிது காலத்திற்குப்பின் சிலர் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டனர். ஆனால் 111 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களாய் இருந்தனர்.

என்ஜினியரிங் பகுதி மூடப்பட்ட பொழுதும், தொழில் கந்தோரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போதும் பொறியியல் டிரக்டர் சுகயீனமுற்றிருப்பதாகவும், அதனால் என்ஜினியரிங் பகுதியில் வேலைசெய்ய முடியாதெனவும் நிர்வாகத்தால் காரணம் காட்டப்பட்டது. அதன்பின் எவ்வளவோ காலத்திற்குப்பின் தான் விற்பனைக்குப் போதியளவு யந்திரங்கள் இருப்பதாகவும், தற்போதைய நிலையில் யந்திரங்களுக்கு வேண்டிய உறுப்புக்களை உற்பத்தி செய்வதிலும்பார்க்க இறக்குமதி செய்வது லாபமானது எனவும் கூறப்பட்டது.

என்ஜினியரிங் பகுதி, வஞ்சக எண்ணத்துடன்,சங்கத்தில் சேர்ந்ததற்காகத் தொழிலாளர்களைப்பழி வாங்குவதற்காகவே மூடப்பட்டது என தொழிற்சங்கம் எடுத்துக் காட்டியது.

கைத்தொழில் நீதிமன்றம்தனது தீர்ப்பில் "1960 அக்டோபர் 26-ந் திகதி என்ஜினியரிங் பகுதி மூடப்பட்டது. யந்திர உற்பத்தி அவசியமில்லையெனவும், இறக்குமதி செய்வது லாபகரமானது என்பதனாலும் மூடப்பட்டது என இரண்டுமாதங்களின்பின் காரணம் காட்டப்பட்டது.இதை ஏற்க முடியாது. மூடப்பட்டதற்குரிய காரணம் நன்கு தெரிகிறது. சங்கமொன்று அமைக்கப்பட்டதும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளுமே காரணமாகும். அக்டோபர் 8-ம் திகதி கூட்டத்தில் பேசப்பட்டது எதுவாக இருப்பினும், அக்டோபர் 15-ம், 22-ம் திகதிகளில், சங்கம் அமைக்கப்படுவதை நிர்வாகம் முற்று முழுதாக எதிர்த்துள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளது.

தீர்ப்பின் முடிவில் "கனம் மந்திரி அவர்களினால் எங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கிணங்க,பட்டியல் 'பி' யில் குறிப்பிட்டுள்ள தொழிலாளர்களின் வேலை நீக்கம் நீதியற்றது" எனக் கூறப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்பது பற்றி தீர்ப்பு வழங்க தொழில் நீதிமன்றம் மறுத்துள்ளது. அதுபற்றிக் குறிப்பிடுகையில் "மூடப்பட்டுள்ள பகுதி மீண்டும் திறக்கும்படி ஸ்தாபனத்திற்கு உத்தரவு போட நீதி மன்றம் விரும்பவில்லை. காரணம் அதை

[10-ம் பக்கம் பார்க்க]

# தொழிலாளர்களின் முக்கிய கடமை

## ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் தலைமை தாங்குவது அவசியம்

காலம் சென்ற திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் ஓர் தேசிய முதலாளிகளின் அரசாங்கமாகும். இவ் அரசாங்கம் 1956ல் ஆட்சி பீடம் ஏறியது. அதன்பின்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களில் எமது நிலையென்ன என்பது பற்றி இடதுசாரிக் கட்சிகளின் மத்தியிற்கூட ஓர் தெளிவற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இது மிக முக்கியமான பிரச்சினையாகும். இதுபற்றி நாங்கள் பலரும் நன்கு சிந்திக்கவேண்டியது அவசியமாகும்.

இன்று எங்களை ஏகாதிபத்திய,நிலப்பிரபுத்துவஎதிர்ப்புப் போன்ற பிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன. இவ்எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த வேண்டிய பொறுப்பு தேசிய முதலாளிகளுக்கு மாத்திரமே உண்டு என்று சிலர் கருதுகின்றனர். இவ் எதிர்ப்புப் போராட்டங்களினால் வளர்ந்து வருகின்ற தேசிய முதலாளிகளே நன்மை பெறுவார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆகவே இப்பணிகளை நிறைவேற்றுகின்ற போராட்டத்திற்கு தேசிய முதலாளிகளே தலைமை தாங்க வேண்டும் எனவும், தொழிலாளி வர்க்கம் தேசிய முதலாளிகளின் உதவியாளர்களாக நிற்க வேண்டும் எனவும் வாதாடுகின்றனர். அவ்விதம் செய்யாவிடில் தேசிய முதலாளிகள் 'திகிலடைந்து' தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக ஏகாதிபத்தியத்தோடும் ஏகாதிபத்திய தாசர்களான உள்நாட்டு (கொம்புரடா) முதலாளிகளோடும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள் எனவும் கூறுகின்றனர்.

### ருஷ்யாவில் முரண்பாடு

இது ஓர் புதிய பிரச்சினையல்ல. ஜார் ஆட்சியைவீழ்த்தி, மக்கள் குடியரசு ஒன்றை நிறுவ லெனினாலும் போல்ஜிவிக் கட்சியினாலும் புரட்சிக்கு வழி வகுக்கப்பட்டது. அப்புரட்சியின் முதல் கட்டத்தின்போது தோழர் லெனினையும் போல்ஜிவிக் கட்சியையும் இதே பிரச்சினை எதிர்நோக்கியது. அப்பொழுது ருஷ்யாவில் இருந்த ருஷ்யன் சோஷல் டெமொக்கிரட்டிக் கட்சியில் இருந்த சிலரும் இதே வாதத்தை முன்வைத்தனர். ஜார் ஆட்சியை வீழ்த்துகின்ற பொறுப்பை முதலாளிகளுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் விட்டுவிட வேண்டுமெனக் கூறினர். இந்தப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் முன்னிற்பதின் மூலம் முதலாளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் திகிலடையச் செய்யக்கூடாது என வாதாடினர். அவர்கள் கூறியதின் உண்மையான கருத்து என்னவெனில் ஜார் ஆட்சியையும், நிலப்பிரபுத்துவத்தையும் முதலாளி வர்க்கம் முறியடிக்க வேண்டும், அதன்பின்பு முதலாளித்துவம் கட்டிவளர்க்கப் பட்டபின் தொழிலாளி வர்க்கம் சோஷலிஸ சமுதாயத்திற்காக தலைமைதாங்கிப்போராட வேண்டும். ஆகவே நிலப்பிரபுத்துவத்திற்கு, ஜார் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளிவர்க்கம் கைகட்டி ஒதுங்கி நிற்கவேண்டும் எனக் கூறினர்.

புரட்சியில் இரண்டு கட்டங்கள் பூரணமாக உண்டு என்று லெனினுக்கு முன்பிருந்து பல மார்ஸிட்டுகள்கருதினர். இதன் அடிப்படையிலே எழுந்ததுதான் இக்கருத்து. முதலில் முதலாளிகளின் ஜனநாயகப் புரட்சி நடைபெற வேண்டும். அதன்பின்பு முதலாளித்துவம் வளர்ந்தபின் சோஷலிசப் புரட்சி நடைபெறவேண்டும் எனக் கருதினர். இவர்களின் கருத்துப்படி முதலில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெறவேண்டும். அதன் மூலம் நிலப் பிரபுத்துவம் தூக்கியெறியப்பட்டு முதலாளித்துவ சமுதாயம் கட்டியமைக்கப்படும். பிரான்ஸ் நாட்டில் 1789ம் ஆண்டில்நடைபெற்ற புரட்சி இவ்விதமானதாகும். இவ்வித புரட்சியின் போது முதலாளிகளே அதற்குத் தலைமை தாங்கினார்கள். இவ்வித முதலாளித்துவப் புரட்சியின் பின் முதலாளித்துவம் வளரும். அதைத் தொடர்ந்து முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிச சமுதாயத்தை அமைக்க சோஷலிசப் புரட்சி நடைபெறும். இவ்வித சோஷலிசப் புரட்சிக்கு நிச்சயமாக தொழிலாளர்கள் தான் தலைமை தாங்குவார்கள். லெனினுக்கு முன்பு வர்க்கங்களின் கடமையை இவ்விதந்தான் வரையறுத்திருந்தனர்.

### லெனினின் புதிய விளக்கம்

இக்கொள்கையின் தவற்றை லெனின் விளக்கினார். ருஷ்யா போன்ற நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி காலத்தால் மிகவும் பின் தங்கிவிட்டது (பிரான்ஸ் முதலாளிகளின் ஜனநாயகப் புரட்சியிலிருந்து ருஷ்ய முதலாளிகளின் புரட்சி 128 வருடங்கள் பின் தங்கியது) என்பதைச் சுட்டிக்காட்டிய லெனின் இந்நாடுகளில் முதலாளித்துவம் நன்கு வளர்ந்துள்ளதோடு மிகவும் சக்தி பெற்ற, முக்கியமாக ருஷ்யாவில் ஒரு பெரிய தொழிலாளி வர்க்கத்தை உருவாக்கியுள்ளதை வெளிப்படுத்தினார். இவ்வித நிலைமையில் இரண்டு புரட்சிக்குமிடையில் ஓர் பெரிய இடைவெளியை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் கூறினார். இரண்டு புரட்சிக்குமுள்ள தனித்தனிக் கடமைகளை அவர் தெளிவாக விளக்கினார். (இரண்டு விதமான புரட்சிக்கும் உரிய வேலைத் திட்டமொன்றை குறைந்தபட்ச வேலைத்திட்டமொன்றும், கூடிய பட்ச வேலைத்திட்டமொன்றும் ருஷயன் சோஷல்டிமொக்ரட்டிக் கட்சிக்கு வகுத்துக் கொடுத்தார்) முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி காலத்தால் மிகவும் பின் தங்கி விட்டதாலும், தொழிலாளிவர்க்கம் இதற்கிடையில் ஓர் பெரும் சக்தியாய் வளர்ந்துவிட்டதாலும், இரண்டு புரட்சிக்குமிடையில் பெரியதோர் கால இடைவெளி இருக்கவேண்டியது அவசியமில்லையென லெனின் சுட்டிக்காட்டினார். ஆதலால் ஒரு புரட்சியைத் தொடர்ந்து மற்றப் புரட்சி நடைபெறவேண்டும் என்று கூறினார்.

இதன் அடிப்படையிலே தான் தொழிலாளர்களின் முக்கிய கடமைகளை அவர் விளக்கினார். ' ஜனநாயகத்திற்காக தொடர்ந்து போராடக்கூடியவர்கள் தொழிலாளர்கள் மாத்திரந்தான்'' என லெனின் கூறினார். ''தொழிலாளர்கள் ஜனநாயகத்திற்குரிய தமது போராட்டத்தில் வெற்றிபெற அவர்களுடைய புரட்சிகரப் போராட்டத்தில் விவசாயிகளும் ஒன்றுபட வேண்டும்'' எனக் கூறினார். இதன் மூலம் இரண்டு உண்மைகளை லெனின் தெளிவுபடுத்தினார். சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கம் தான் சிறந்த, தொடர்ந்து போராடும் புரட்சிகர வர்க்கம் என்ற தனது கொள்கையை மேலும் உறுதிப்படுத்தினார். அடுத்ததாக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கு தொழிலாளர் விவசாய ஐக்கிய அணி அவசியம் எனக்கூறினார். அத்தோடு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை தொழிலாளி வர்க்கம் தலைமைதாங்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினார். நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கினால் முதலாளிகள் பயந்து ஒதுங்கி விடுவார்கள் என்று கூறுபவர்களை லெனின் மிகவும் வண்மையாக கண்டித்தார், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கிப் போராடுவதின் மூலமே அப்புரட்சியைப் பாதுகாக்க முடியுமெனவும், வரலாற்றின் அக்கட்டத்தில் இது முக்கியமெனவும் கூறினார்.



என். சண்முகதாசன்

முதலாளிகள் தலைமையில் இப்போராட்டத்தை நடத்தாவிட்டால் அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்குள்ளபயத்தினால் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் சமாதான உடன்பாடு செய்துகொள்வார்கள் எனவும் லெனின் சுட்டிக்காட்டினார். ஏனெனில் தொழிலாளர் வர்க்கந்தான் எதிர்காலத்தில் தங்களுடைய எதிரிகள் என்பதை முதலாளி வர்க்கம் நன்கு உணர்ந்துள்ளது.

முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் உண்மையான வெற்றி தொழிலாளி வர்க்கம் தலைமை தாங்கி நடத்துவதின் மூலம்தான் கிடைக்கும் எனச் சுட்டிக் காட்டிய லெனின் அதன்மூலம் வெகு விரைவில் சோஷலிச அமைப்புக்கும் வழி பிறக்கும் எனச் சுட்டிக் காட்டினார். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் எவ்வளவு அதிக சக்தியோடு தொழிலாளி வர்க்கம் பங்குகொள்கிறதோ அத்தனை அதிவேகமாக சோஷலிசப் புரட்சிக்கு வழி பிறக்கும் என எப்பொழுதும் வற்புறுத்தினார்.

### ஒக்டோபர் புரட்சியின் உதாரணம்

ருஷ்யாவில் 1917ல் நடைபெற்றது இதுதான். அவ்வருடம் பெப்ரவரி மாதம் முதலாளித்துவப் புரட்சி நடைபெற்றது. அதில் ஜார் மன்னனும், அவனுடைய நிலப்பிரபுத்துவ ஆட்சியும் அழிக்கப்பட்டது. அப்புரட்சியில் தொழிலாளர்களே ஆயுதம் தாங்கியவர்களாய் தலைமைதாங்கிப் போராடினார்கள். முடிவில் நாட்டிலே இரண்டு ஆட்சி ஏற்பட்டது. தற்காலிக ஆட்சியை முதலாளி வர்க்கம் ஏற்படுத்தியது. தொழிலாளர்களின் ஆட்சி மறுபுறத்தில் தொழிலாளர் சோவியத்தின் மூலம் நிறுவப்பட்டது. இறுதியில் அவ்வருடம் ஒக்டோபர் மாதத்தில் தொழிலாளி வர்க்கம் இப்புரட்சியை மேலும் முன்னெடுத்துச் சென்று சோஷலிசப் புரட்சியை நடத்தி தமது ஆட்சியையும் ஏற்படுத்தியது.

இதேவிதமான பிரச்சினை இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்பு காலனி, காலனி-சார்பு நாடுகளிலும் தோன்றியது. பாஜிஸ்ட்டுகள் முறியடிக்கப்பட்டு, ஏகாதிபத்தியத்தின் சக்தி குறையத் தொடங்கியவுடன் ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுதந்திர போராட்டங்கள் ஆரம்பமாயின. மக்கள்சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் மா. சே. துங் இப்பிரச்சினைகளை சிறப்பாக விவரித்துள்ளார். 1940 ஜனவரியில் புதிய ஜனநாயகம் பற்றி அவர் எழுதிய புத்தகத்திலும், 1949 ஜுலை முதலாம் திகதி எழுதிய ''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்'' என்ற கட்டுரையிலும் இப்பிரச்சினைகள் சம்பந்தமாக சிறப்பாக விளக்கம் கொடுத்துள்ளார். தேசிய விடுதலைப் போராட்டங்களில் தொழிலாளி வர்க்கம் முன்நின்று போராடவேண்டியதின் அவசியத்தை இவற்றில் அவர் விளக்கியுள்ளார். அத்தோடு தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஒக்டோபர் புரட்சி வகிக்கின்ற பாத்திரத்தையும், அது அளித்துள்ள உற்சாகத்தையும் அவர் அக் கட்டுரைகளில் விளக்கியுள்ளார்.

### சோஷலிச நாடுகளின் பாத்திரம்

எகிப்து, கியூபா, வியட்நாம், லாவோஸ், கோரியா போன்ற நாடுகளின் விடுதலைப்போராட்டத்தில் சோவியத் நாடும், மக்கள் சீனமும், மற்றும் சோஷலிச நாடுகளும் மிக முக்கிய பாத்திரத்தை வகித்தன. காலனி நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் சோவியத் நாடும், மக்கள் சீனமும் மற்றும் சோஷலிச நாடுகளும் அளித்த உதவியும், ஊக்கமும் சகலராலும் வரவேற்கப் பட்டுள்ளது.

தொழிலாளி வர்க்கம் இன்று பல நாடுகளில் ஆட்சி புரிகின்றது. இவ்விதமான தொழிலாளி வர்க்கம், தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கவேண்டியதின் அவசியத்தை இதன்மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தேசிய ரீதியிலும் இதே நிலைமைதான் உண்டு. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஒன்றுபடவேண்டுமென சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினர் சுட்டிக் காட்டுகின்றனர். இக்கூட்டு அணி தற்காலிகமானதாக இருக்கலாம். அல்லது தேசிய முதலாளிகள் ஓர் நிலையற்றவர்களாக இருக்கலாம். ஆனால் கூட்டணி அமைக்கப்படுவது அவசியமாகும். ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராக பலவித வர்க்கங்கள் மத்தியில் கூட்டணி உருவாகும். அவ்வித கூட்டணியில்தொழிலாளிவர்க்கம் கட்டாயமாக தலைமை தாங்க வேண்டும் எனவும் அவர்கள் வற்புறுத்தியுள்ளனர். ஆனால் அதே அணியில் அசைக்கமுடியாத சக்திபெற்ற பிணைப்பாக தொழிலாளி, விவசாயி ஒற்றுமை விளங்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர். இவ்விதம்தான் ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம் வெற்றிபெறும்.

### தொழிலாளர்கள் தலைமை தாங்க வேண்டும்.

தேசிய முதலாளிகளோ, அல்லது தேசிய முதலாளிகளின் அரசாங்கமோ ஏகாதிபத்தியத்தை தற்காலிகமாக

மாகவேனும் எதிர்க்கும் பொழுது கட்டாயமாக அதற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும். ஆனல் தொழிலாளர்கள் தலைமைதாங்காமல், ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்று முழுதாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பது முட்டாள் தனமாகும். பலவிதத் தயக்கத் தோடாயினும் அன்னிய எண்ணைக் கம்பெனிகளுக்கு எதிராக சுதந்திரக் கட்சி அரசாங்கத் தால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்படுவது ஏற்றதாகும். ஆனல் சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஒரு காஸ்ட்ரோவாக எண்ணி, எண்ணைக் கம்பெனிகளின் ஆதிக்கத்தை முற்றுமுழுதாக முறியடிக்க எதிர்பார்ப்பது முட்டாள்தனம் மாத்திரமல்ல சுத்த பயித்தியகாரத்தனமாகும். தொழிலாளிவர்க்கத்தின் தலைமையில்தான் அவ்வித கடமையை நிறைவேற்ற முடியும்.

இலங்கை வரலாற்று வளர்ச்சியின் அடிப்படையில் இன்று எதிர்நோக்கியுள்ள ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ போராட்டத்தில் எவ்விதம் தொழிலாளி வர்க்கம் தலைமை வகிக்க முடியும்? முதலில் ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் வெற்றி காண்பதற்கு, நாட்டிலே சோஷலிசத்தை உருவாக்குவதற்கு ஓர் பொதுத்திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரிக்கட்சிகள் ஒன்றுபட வேண்டும். இன்று இலங்கையிலுள்ள நிலைமையில் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் ஒற்றுமையில்லாமல் போராட்டங்களில் தலைமை தாங்குவது முடியாத காரியமாகும்.

### இடதுசாரிகள் ஒன்றுபட வேண்டும்.

எமது நாட்டிலே உள்ள நல்ல, முற்போக்கு எண்ணம் கொண்ட சகலரையும் உள்ளடக்கிய ஓர் இடதுசாரி ஐக்கிய அணியிடம் ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ போராட்டத்தில் வெற்றிகண்டு, சோஷலிச சமுதாய அமைப்பை நோக்கி நாட்டை முன்னெடுத்துச் செல்லத்தக்க சகல சிறப்புக்களும், அம்சங்களும் இருக்கின்றன. இந்தியா போன்ற சில நாடுகளில் தேசிய முதலாளிகளினுல் தேசிய விடுதலை இயக்கம் தலைமை தாங்கி நடத்தப்பட்டது. ஆனல் இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நிலமை இருக்கவில்லை. இதை நாம் நன்கு மனதிற் கொள்ளவேண்டும். தேசிய தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்ற சேர். பரன் ஜயதிலகா, டி. எஸ். சேனநாயக்க அல்லது பண்டாரநாயக்கா போன்றவர்களால் இலங்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் முதன் முதலில் இடதுசாரிக் கட்சிகளினுல்தான் 1934–35 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. பூரண சுதந்திரம் இலங்கைக்கு அளிக்கப்படவேண்டும் என்ற தெளிவான கோரிக்கையை முதலில் இடதுசாரிக் கட்சியினர்தான் முன்வைத்தனர். அதே நேரத்தில் தேசியத் தலைவர்கள் எனப்படுபவர்கள் தங்கள் எஜமானர்களான ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மூச்சு விடுவதே துரோகம் எனக் கருதினர்.

### இடதுசாரிகள் தம் முயற்சியைக் கைவிட்டனர்

ஏகாதிபத்திய எதிர்ப்பினை, தேசிய வளர்ச்சிப் போராட்டத்தை இடதுசாரிகளின் கையிலே இருந்து தேசிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதியான திரு. பண்டாரநாயக்கா கைப்பற்றியதற்கு இடதுசாரிகள் தம்மைத்தாமே நொந்து சொள்ளவேண்டும். இடதுசாரிகள் மத்தியில் தனித்தம்பிரான் போக்கிருந்தது. தேசியப் பிரச்சினைகளில் தெளிவிருக்கவில்லை. அவற்றை சிறந்த முறையில் அணுகி ஆராயவில்லை. முக்கியமாக மொழி, கலாச்சாரம் போன்றவை சம்பந்தமாக நல்ல தெளிவான கொள்கையிருக்கவில்லை. எல்லாவற்றிலும் மேலாக இடதுசாரிகள் மத்தியில் ஒற்றுமை இருக்கவில்லை. பண்டாரநாயக்கா இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டார். இடதுசாரிகளால் தூண்டிவிடப்பட்ட ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கோஷத்தைப் பாவித்து ஆட்சிபீடம் ஏறினர். இடதுசாரிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட இன, மத பேதத்தையும் அவர் உபயோகித்தார் என்பது உண்மையே.

### நாட்டை இடதுசாரிகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பல வருடங்களாக தாங்கள் ஆற்றிய நல்ல பணிகளையும், எடுத்த முயற்சிகளையும் இடதுசாரிகள் கைவிட்டனர். இடதுசாரிகளுக்கு முற்றும் உரித்தான இப்பணிகளின் பயனை பண்டாரநாயக்காபாவித்தார். ஆகவே தங்களுக்குரியதான தேசியத் தலைமையை மீண்டும் இப்பொழுதுதாவது பெற்றெடுப்பதற்கு இடதுசாரிக் கட்சிகளும் தொழிலாளர்களும் சிந்திப்பது சிறப்பாகும்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தை அகற்ற சுதந்திரக்கட்சி அரசாங்கம் தயக்கத்தோடாயினும் சில நடவடிக்கைகளை எடுத்தது. ஆனல் இன்று அது தன் முடிவினை அடைந்துவிட்டதற்குரிய பல அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இதற்கு மிகவும் சிறந்த உதாரணம் எண்ணெய்க் கம்பெனி தகராருகும். இத்தகராறில் இந்த நாட்டின் பூரண ஆதரவு அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனல் அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் முன் அடிபணிந்தது. தொழிலாளர்களால் தான் இந்த நாட்டை முன்னேற்ற முடியும் என்பது தெளிவாகியுள்ளது. தங்களுக்குரியதான பாத்திரத்தை, தேசத்தை தலைமைதாங்கிச் செல்லும் பணியை ஏற்க தொழிலாளி வர்க்கம் தயாராக வேண்டும். அதற்கு முதலில் தொழிலாளி வர்க்கமும், இடதுசாரிக் கட்சிகளும் ஓர் பொதுத் திட்டத்தின்கீழ் ஒன்றுபடவேண்டும். அதன்பின்பு ஏகாதிபத்தியத்தை, நிலப்பிரபுத்துவத்தை முறியடித்து சோஷலிச சமுதாயத்திற்குபாதையமைக்க எஞ்சியுள்ள சகல முற்போக்குவாதிகளையும் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புச் சக்திகளையும் அந்த ஐக்கிய அமைப்பின் கீழ் கொண்டுவரவேண்டும்.

# புதிய பாதையிலே தோட்டத்தொழிலாளர்கள்

## நுவரேலியா மாநாட்டில் புதிய சரித்திரம் ஆரம்பமாகியது !!

**தோட்டத் தொழிலாளர்கள் உண்மையை உணர்ந்துவிட்டனர். புதிய பாதையிலே வீறுநடைபோடத் தொடங்கிவிட்டனர். இனமொழி ரீதியாக அவர்களை இந்த நாட்டிலுள்ள மற்றத் தொழிலாளர்களிடமிருந்து பிரித்து வைத்திருந்த தோட்டத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டன. தோட்டத்தொழிலாளர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்து, தமது சுயநலத்திற்காக அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றிவந்த தொண்டமான், அஸீஸ் போன்றோரின் பொய்ப்பிரச்சாரங்களும் பூஞுகு முட்டைகளும் அம்பலமாகும் நாள் ஆரம்பமாகிவிட்டது.**

கடந்த மார்ச்மாதம் 17-ம் திகதி நுவரேலியாவில் தோட்டத் தொழிலாளர்களின் விசேஷ மாநாடு நடைபெற்றது. இந்த நாட்டிலுள்ள மற்றத்தொழிலாளர்கள் பெற்றுள்ள அரசாங்க அளவு பஞ்சப்படி தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட, வென்றெடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராய இம்மாநாடு நடைபெற்றது.

இம்மகாநாடு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தால் நடத்தப்பட்டது. இந்த நாட்டில் எங்கெல்லாம் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிருர்களோ அங்கெல்லாம் இருந்து ஆயிரக் கணக்கில் படை திரண்டாற்போல் தமது உரிமையைப் பெற்றெடுக்க அந்த வீரர் படை நுவரேலியாவில் திரண்டிருந்தது. சிங்கள தொழிலாளர்களும், தமிழ் தொழிலாளர்களும் சரிநிகர் சமானமாக உரிமைகோரி குரல் எழுப்பியது முதலில் கூறியதைத்தான் ஞாபகமூட்டியது.

மன் பங்குபற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

தோட்டத் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளையும் விளக்கிப் பேசிய தோழர். பீட்டர் கெனமன் தொடர்ந்து பேசுகையில் " தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமையை வென்றெடுக்க இந்த நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்களோடு ஒன்றுபட வேண்டும் எனக் கூறி தோட்டத் தொழிலாளர்கள் இக்கோரிக்கையை வென்றெடுக்க வேண்டுமெனவும், மாநாட்டிற்கு கம்யூனிஸ்ட் கட்சியின்



மாநாட்டிற்கு வந்திருந்த சில பிரதிநிதிகளுடன் அப்புத்தளை மாவட்டப் பிரதிநிதி தோழர் எம்.'மாரியப்பாவும், சங்க நிர்வாகக்காரியதரிசி ஈ. டி. மூர்த்தியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

இம்மகாநாடு தோட்டத் தொழிலாளர்களின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்ருகும். நகர மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டை தொடர்ந்து ஆயிரக்கணக்கான தோட்டத்தொழிலாளர்களின் அணிவகுப்பு நுவரேலியா நகர வீதிகளை வலம் வந்தது. ஊர்வலத்தில் தமிழர் சிங்களவர் ஒற்றுமைவாழ்க, தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி கொடு, இனவெறி ஒழிக என்ற கோஷங்கள் முழங்கப்பட்டன.

மாநாட்டிற்கு இலங்கைத் தோட்டத்தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் தலைவர் தோழர். எஸ். நடேசன் தலைமை வகித்தார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுக்காரிய தரிசி தோழர். பீட்டர் கென

வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மற்றும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க பொதுக் காரியதரிசி தோழர். என். சண்முகதாசன் (அவருடைய சொற்பொழிவின் விபரத்தை வேறு இடத்தில் பார்க்கவும்) சங்க உபதலைவர் பி. தேவராஜ், தலவாக்கலை மாவட்ட பிரதிநிதி தோழர். ரொசாரியோ பர்ணுந்து, காலி மாவட்ட பிரதிநிதி எஸ். விமலபால ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். மாநாட்டின் முடிவில் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (தீர்மானங்களை வேறு இடத்தில் பார்க்கவும்)

மாநாட்டைத் தொடர்ந்து ஊர்வலமும், நகரசபை மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். நடேசன், எஸ். அமிர்தம் ஆகியோர் பேசினர்.

### தோட்டத் தொழிலாளர் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

நுவரேலியாவில் கடந்த மாதம் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் விசேஷ மாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. சகல தோட்டத்தொழிலாளர்களுக்கும் அரசாங்க அளவு பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

2. அரசாங்க அளவு பஞ்சப்படியை வென்றெடுக்கும் முகமாக ஓர் ஐக்கிய இயக்கம் நடத்த ஒன்றுபடுமாறு சகல தோட்டத் தொழிலாளர் சங்கங்களையும் இம்மாநாடு வேண்டுகிறது.

3. அரசாங்கத்தின் சம்பள உயர்வைத் தடுக்கும், கருங்காலிகளையும் ராணுவத்தையும் பொலிசையும் வேலைநிறுத்தத்தின்போது பாவிக்கும், வேலை நிறுத்தத்தின் போது பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கும், உள்ள ஜனநாயக உரிமைகளைப்பறிக்கும் போக்கினை இம்மாநாடு கண்டிக்கிறது.

4. அரசாங்கத்தின் தொழிலாள விரோதக் கொள்கைகளை முறியடிக்கவும், தொழிலாளர்களின் பொருளாதார உரிமைகளை வென்றெடுக்கவும், வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுமாறு சகல தொழிற்சங்கங்களையும் இம்மாநாடு அழைக்கிறது.

### புதிய பாதையிலே தமிழ் வாலிபர்கள்

கடந்த மார்ச் மாதம் 10-ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர்களின் மாநாடு யாழ்நகர மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. வடமாகாணத்தின் பல பகுதிகளிலில் இருந்தும் மாநாட்டிற்கு பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

கொழும்பு, இரத்தினபுரி, திருமலை, மட்டுநகர் போன்ற பகுதிகளிலிருந்தும் சகோதரப் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குபற்றினர்.

சமஷ்டிச் கட்சியினர் காட்டி வந்த பாதை தவருனது, விமோசனம் அளிக்காது என்பதை தமிழ் வாலிபர்கள் பெருமளவில் உணர்ந்துவிட்டார்கள் என்பதற்கு இம்மாநாடு ஓர் எடுத்துக்காட்டாகவிளங்கியது. மாநாட்டைத் தொடர்ந்துஆயிரக்கணக்கான வாலிபர்கள் யாழ்நகர வீதிவழியே கோஷங்கள் முழங்கியவாறு ஊர்வலமாக யாழ் முற்றவெளிக்குச் சென்றனர். தமிழர் சிங்களவர் ஒற்றுமை வாழ்க எனவும் இன, மொழி வெறி எமக்குவேண்டாமெனவும் தமிழ் வாலிபர்களும் சிங்கள வாலிபர்களும் கோஷமிட்டது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

மாநாட்டைத் தொடர்ந்து யாழ் முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பீட்டர் கெனமன், இலங்கை தொழிற் சங்க சம்மேளன பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிப சங்கத் தலைவர் சரத் முத்தெட்டுகம ஆகியோர் பேசினர். வாலிப சம்மேளன பொதுச்செயலாளர் தோழர் எஸ். தர்மதாச தமிழில் பேசிய பொழுது பொதுமக்கள் கைதட்டி ஆனந்த ஆரவாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

# வேற்றுமை மறந்து ஒற்றுமைப்படுவோம்

## அரசாங்க சேவைத் தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத் தலைவரின் மேதினச் செய்தி !

இலங்கையில் தொழிற் சங்க இயக்கம் ஆரம்பமாகி 35 வருடங்களாகின்றன. அன்னிய ஆட்சியின் போது தொழிலாளர்கள் கேவலமான முறையில் சுரண்டப்பட்டனர். இதனுல் தொழிலாளர்கள் தனித்தனியே தொழிற்சங்கங்கள் அமைக்க முன் வந்தனர்.

இலங்கையில் ஆரம்பகாலத்தில் தொழிற்சங்க இயக்கம் ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் இயங்கிவந்த போதிலும், வர்க்க ரீதியான தொழிற்சங்க இயக்கம் இந்த நாட்டின் இடதுசாரி இயக்கத்தின் ஓர் வழித்தோன்றலாகவே ஆரம்பமாயிற்று. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமும் (CTUF) சம சமாஜச் கட்சியின் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் (CFL) இயங்கி வந்தன. இக்காலத்தில் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் அன்னிய முதலாளிகளினுல் தொழிலாளர்கள் கொடுமைப் படுத்தப்பட்ட போதிலும் தொழிற்சங்கத்தில்சேரக்கூடிய வசதி பிறந்தது.

1946 ம் ஆண்டின் இறுதியில் அரசாங்க ஊழியர் மத்தியில் பல தொழிற்சங்கங்கள் உருவாகின. ஆனுல் அத் தொழிற்சங்கங்களை அரசாங்கம் அங்கிகரிக்க மறுத்தது. ஆனுல் தொழிற்சங்கத் தலைவர்களின் உற்சாகத்தினுல் 1947 ம் ஆண்டளவில் பலமுக்கிய சங்கங்களை அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எற்பட்டது. பலவித கஷ்டங்களின் மத்தியிலும் 1947 ம் ஆண்டில் அரசாங்க ஊழியர்கள் தங்களுக்கென ஓர் மத்திய் சம்மேளனத்தை உருவாக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது.

1947ம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களும், தனிப்பட்ட ஸ்தானங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒன்றுபட்டு மாபெரும் வேலை நிறுத்தத்தை நடத்தினர். இந்த வேலை நிறுத்தம் தோல்வியடைந்தவுடன் அரசாங்க ஊழியர்களுக்கு இருந்த பல உரிமைகள் பறிக்கப்பட்டன. தனிப்பட்ட ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களோடு சேர்ந்து சம்மேளனம் அமைக்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. இவ்வேலை நிறுத்தத்தின் காரணமாக தோழர் கந்தசாமி தன் உயிரைத் தியாகம் செய்தார். பல தோழர்கள் வேலை இழந்தனர். இதனுல் அரசாங்க ஊழியர் மத்தியில் தொழிற் சங்க இயக்கம் மிகவும் பலவீனமடைந்தது.

1947 ம் ஆண்டில் மாபெரும் வேலைநிறுத்தத்தை முறியடிக்க வெள்ளை ஏகாதிபத்தியத்தினருக்கும்,பிற்போக்குவாதிகளுக்கும் முடிந்தாலும் அடுத்த வருடத்தில் இந்த நாடு விடுதலை பெற இவ் வேலைநிறுத்தம் மிகவும் உதவியாக இருந்தது. 5 வருடங்களாக உற்சாகமற்ற நிலைமை அரசாங்க ஊழியர் மத்தியில் நிலவியது. ஆனுல் பல தோழர்களின் சக்தி மிக்க உழைப்பினுல் மீண்டும் 1953ல் அரசாங்க ஊழியர்மத்தியில் தொழிற்சங்க இயக்கம் புத்துயிர் பெற்றது. மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்க ரீதியாக ஒன்றுபட்டனர். அகில இலங்கை அரசாங்க தொழிற் சங்க கூட்டணி (A. I. C.) உருவாகியது. இதில் சகல தொழிற் சங்கங்களும் ஒன்றுசேர்ந்தன. சகல அரசாங்க ஊழியர்களின் சார்பாகவும் 35 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதனுல் மேலும்பல தொழிற்சங்கங்கள் அரசாங்க ஊழியர்மத்தியில் உருவாயின, ஐக்கியப்பட்டன.

1956ம் ஆண்டில் மக்கள் ஐக்கியமுன்னணிஆட்சிக்குவந்தது. அதன் பின்பு தோன்றிய சில அரசியல் வேறுபாடுகாரணமாக சில சங்கங்கள் பிரிந்து சென்று புதியதோர் சம்மேளனத்தை உருவாக்கின, 1957 ம் ஆண்டில் (A. I. C.) அகில இலங்கை அரசாங்க தொழிற் சங்க கூட்டணியில் இருந்த தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி, அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தை ஸ்தாபித்தனர். அதன் பின்பு இச் சம்மேளனத்தினுல் எடுக்கப்பட்ட பெரு முயற்சியினுலும் உற்சாகத்தினுலும் அரசாங்க ஊழியர்களுக்கு பல கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டன.

அரசாங்க ஊழியர்களின் பொருளாதார, அரசியல் கோரிக்கைகளுக்காக எமது சம்மேளனம் போராடி வருகிறது. அதே நேரத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு ஒரே சம்மேளனம் ஒன்றை ஏற்படுத்தவும், நாட்டின் பூரண அரசியல் விடுதலைக்காகவும் பலவித கஷ்டங்களின் மத்தியில் எமது சம்மேளனம் பணியாற்றிவருகிறது.

1958ம் ஆண்டில் நடைபெற்ற ஏப்ரல்-மே மாத வேலை நிறுத்தப் போராட்டத்தின் பின் மீண்டும் பலவித அரசியல் பேதங்கள் அரசாங்க ஊழியரின் தொழிற்சங்கங்களிடையே உருவாகியது. இவ்வித பேத நிலமை எந்தவித மாற்றத்தை உருவாக்கியது என்ருல் ஒரு இலாகாவில் 50, 60 தொழிற் சங்கங்களை உருவாக்கியது. தொழிற்சங்க அறிவு காணுமையினுலும், சில அரசியல் நன்மைகளுக்காகவும் தொழிற் சங்கங்களைப் பிரிக்க முயன்றவர்களுக்கு எதிராகவும் எமது சம்மேளனம் கடுமையாகப் போராடி வந்துள்ளது.

அரசியல் வேறுபாடுகள் இருப்பதாலும், மத இனவேறுபாடுகள் இருப்பினும், செய்கின்ற தொழிலால் வேறுபட்டு நின்ருலும் தொழிலாளர்கள் என்ற முறையில் ஒன்று பட்டு நிற்பதாலேயே பொருளாதார அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதை வரலாற்று சான்றுகள் நிரூபிக்கின்றன.

எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் இது உண்மையே. எமது தொழிலாளர்கள் ஒன்றுபட்டு நின்ற காலத்தில் பல கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளனர்: பிளவு பட்டு நின்ற காலத்தில்பல உடனடிப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாமலிருந்தமைக்கு எமது நாட்டு தொழிற்சங்க வரலாறு சான்று கூறும்.

தேசிய நலனை முன்னிட்டு, இந்த நாட்டு இடதுசாரிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையைக் கண்டு முற்போக்கு எண்ணம் கொண்டோரும் நாட்டு நலன் கருதுவோரும் மனமகிழ்வு கொண்டுள்ளனர். ஆகவே இந்த நேரத்தில் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு நிற்பது அவசியம் என நாங்கள் கருதுகிருேம்.

தொழிலாளர்களின் நலன் கருதி மனவேற்றுமைகளை மறந்து ஒன்று படுவோம்.

வாழ்க தொழிலாளர்ஒற்றுமை

பியதாஸ ஆதிப்பொல

---

### “தொழிலாளி”

‘‘தொழிலாளி’’ பத்திரிகை ஒவ்வொரு மாதமும் முதல் திகதி வெளிவரும்!

தொழிலாளி பத்திரிகை தேவையான ஒவ்வொரு தோழர்களும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு தனிப்பிரதியின் விலை சதம்- 10.

‘‘தொழிலாளி’’ விற்பனை செய்ய விரும்புவோர் முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகை வேண்டியவர்கள் இம் மாதம் 15 ம் திகதிக்கு முன்னதாக வேண்டிய பிரதிகளின் தொகையை அறிவியுங்கள்.

முகவரி:–

நிர்வாகி
“தொழிலாளி’‘
123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.

---

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

செயல்படுத்த எங்களுக்கு அதிகாரம் கிடையாது. ஒருவர் நீதியற்ற முறையில் தனது ஸ்தாபனத்தை தொடர்ந்து நடத்த விரும்பாவிடில் கூட அவரை நிர்ப்பந்திக்க சட்டம் கிடையாது. மறுபக்கத்தில் ஒரு ஸ்தாபனம் மூடப்படுவது நீதியற்றது; முறையற்றது எனத் தெரிந்தால், தொழிலாளர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் நடைபெற்றதாக இருந்தால் அதை முறையற்றது என மட்டும் தீர்ப்பு வழங்கமுடியும்: அவ்வித நேரங்களில் மீண்டும் வேலை வழங்கும்படி கூறுவதிலும் பார்க்க கூடிய நஷ்டஈடு வழங்குவது சிறப்பாகும்.

வேலை நீக்கம் செய்யப்பட்டது நீதியற்றது என்ற தமது முடிவின்படி, நியாய ரீதியாக வேலைநீக்கம் செய்யப்படும்பொழுது வழங்கப்படுவதிலும் இரண்டுமடங்கு கூடுதலாக நஷ்டஈடு வழங்கவேண்டுமென நீதிமன்றம் தெரிவித்தது. அதன்படி ஒவ்வொருவருட சேவைக்கும் 5 வருடத்திற்கு மேற்படாமல் ஒரு மாதச் சம்பளம் வழங்கும்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

# ஆசிய ஆபிரிக்க தொழிலாளர் மாநாடு

## “ஐக்கியம் வளர்க்க பெரிதும் உதவும்”

சுதந்திரம் பெற்றுள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும். புதிதாகத் தோன்றிவரும் நவீன காலனி ஆதிக்க வெறியை முறியடிப்பதற்காகவும், இப்பகுதிகளில் வாழுகின்ற தொழிலாளர்களின் ஒற்றுமையை மேலும் கட்டி வளர்ப்பதற்காக ஆசிய, ஆபிரிக்க தொழிலாளர் மாநாடு ஒன்றை நடத்த இந்தோனேசிய தொழிற் சங்க சம்மேளனம் முயற்சி எடுத்துவருகிறது. இதற்குரிய அழைப்பை ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலுள்ள சகல தொழிற் சங்கங்களும் அனுப்பியுள்ளது. இம்மாநாட்டை வரவேற்று இந்தோனேசிய தொழிற்சங்க சம்மேளனத்திற்கு பல பாராட்டுக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்து எமது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, அம்மாநாடு வெற்றிபெற தன்னுலான சகல உதவிகளையுஞ் செய்ய காத்திருப்பதாகவும் அறிவித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடுகளாக இருந்தன. அப்பொழுது இந்நாட்டுத் தொழிலாள வர்க்கமும், தேசியச் செல்வமும் அன்னியரால் கேவலமான முறையில் சுரண்டப்பட்டன. இவ்வித சுரண்டலை ஒழிக்க, தாய் நாட்டின் விடுதலையைப் பெற்றெடுக்க இந்த நாட்டு பொதுமக்களோடுஒன்றிணைந்து தொழிலாளி வர்க்கம் முன்னின்று போராடியது. வெற்றியும் கண்டது. இவ் வெற்றிக்கு தொழிலாளர்களின் மத்தியில் நிலவிய ஒற்றுமையே காரணம்.

அரசியல் ரீதியாக சகல நாடுகளும் விடுதலை பெற்று சுரண்டலற்ற முறையில் மனிதன் வாழ வழிகாணவும், சமூகரீதியாக மனித சமுதாயத்தை யுத்த வெறியிலிருந்து பாதுகாத்து சமாதான முறையில் முன்னேற்றம் காணவும், சொந்த விவகாரங்களில் அன்னிய தலையீடுகளைத் தடுக்கவும், காலனி, நவீன காலனி ஆதிக்கம் மீண்டும் பரவாமல் தடுக்கவும், பொருளாதார ரீதியாக சகல சுதந்திரத்தோடும் தமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாணவும், கலாச்சார முன்னேற்றத்திற்கு வழிகோலவும் இம்மாநாடு பெரிதும் உதவி செய்யும் என இந்தோனேசிய தொழிற் சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசிய ஆபிரிக்க தொழிலாளர் மத்தியில் மேலும் ஐக்கியம் வளரவும், தங்களுடைய பொதுப் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவற்றிற்காக போராடவும் இம்மாநாடு வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### இலங்கைத் தொழிற் சங்க சம்மேளன வாலிப அணி!

தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலுள்ள வாலிபர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. விளையாட்டுத் துறை, கலாச்சார துறை முதலியவைகளில் அவர்களுக்கு ஈடுபட முடியாத நிலையிருக்கிறது. ஆனுல் அவ்வித வாலிபர்கள் மத்தியில் சிறந்த விளையாட்டு வீரர்களும், கலைஞர்களும் இருக்கின்றனர்.

இவ்வித விளையாட்டு வீரர்களையும் கலை ஆர்வம் மிக்க வாலிபர்களையும் முன்னேற்றும் நோக்கத்துடன் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் ஓர் வாலிப அணியை அமைத்துள்ளது.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் சகல வாலிபர்களும் இவ்வணியிற் சேரலாம். தற்காலிகமாக தோழர். டபிள்யூ. வில்சன் இவ்வணியின் அமைப்பாளராகக் கடமையாற்றுகிருர்.

---

குறைந்த விலையில் சிறந்த கண்கவர்
கன்வஸ் லெதர்பாக்ஸ், றேந்தைகள்,
பட்டன்கள், பெனியன், சேட்
வகைகளும்
பட்டு, பருத்தி, பெனரிஸ், பெங்களூர்,
மைசூர் சேலைகளும், பட்டு வேட்டி
சால்வைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.
எஸ். ரி. நாகலிங்கம் அன் கோ.,
101, 102, 103, கந்தரோடை ரேட், சுன்னுகம்.
முதலீடு: S. T. N. நாகரத்தினம் அன் பிரதர்ஸ்
தந்தி: எஸ்டியென்கோ ஸ்தாபிதம்: 1910

# மாணவர்

# அப்பியாசப் புத்தகங்கள்

## 40 அல்லது 80 பக்கங்கள்

(அட்டை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில்)

## 100 அல்லது 200 பக்கங்கள்

(வெற்றட்டை)

**10 வித றூல்கள் :**

ஒற்றை றூல், சதுர றூல், இரட்டை றூல் - நீலம், இரட்டை றூல் நீலம் - சிவப்பு கோடுகள், ஒரு பக்கம் ஒற்றை றூல் மறு பக்கம் கிராப், மார்ஜின்விட்ட வெறும் பக்கம், வெறும் பக்கம், ஒரு பக்கம் மட்டும் றூலும் மறுபக்கம் றூல் இல்லாமலும், பெரிய சதுர றூல் மார்ஜின் இல்லாமல்

**இலங்கை பூராவும் ஒரே விலையில் கிடைக்கும்**

**விலைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 40 | பக்கங்கள் | — | 11 சதம் |
| 80 | ,, | — | 22 சதம் |
| 100 | ,, | — | 30 சதம் |
| 200 | ,, | — | 60 சதம் |

**வியாபார மொத்த விற்பனை விலைகள் :**

1 குரோஸுக்கும் அதற்கு மேற்பட்ட ஓடர்களுக்கும் கொழும்பு, வாழைச்சேனை ஸ்டோர்ஸ் அல்லது அண்மையிலுள்ள புகையிரத நிலையத்திலிருந்து (செலவு கொடுக்கப்படும்)

குரோஸ் ஒன்றின் விலை :

| 40 பக்கம் | 80 பக்கம் | 100 பக்கம் | 200 பக்கம் |
|---|---|---|---|
| ரூ. 14/40 | ரூ. 28/80 | ரூ. 40/32 | ரூ. 88/52 |

அப்பியாசக் கொப்பிகள் செய்வதற்கான நவீன இயந்திரங்கள் '' ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனுக்காக " வாழைச்சேனை நிலையத்தில் இயங்குகின்றன என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கை முழுவதிலும் தேவைகளை கார்ப்பரேஷன் பூர்த்திசெய்யும். இதனால் அப்பியாசக் கொப்பிகளின் இறக்குமதி தவிர்க்கப்படுகின்றது.

**ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்,**

6, அல்பேர்ட் கிறசென்ற்,

கொழும்பு-7.

டெலிபோன்: 94040

# யூ. என். பி. ஆட்சியின் அடக்குமுறை!

## மேதினத்தில் கடந்தகால அனுபவங்களை மீண்டும் நினைவு கொள்வோம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்...... 1953ல் யூ. என். பி. ஆட்சியின் அடக்குமுறைத் தர்பார் நடந்த காலம். இரகசியப் பொலிசாரின் தொல்லைகள், நாடுகடத்தல், போலீஸ் அடிதடி, மறியல் ஒரு இடமும் சிறிது நேரம் தங்கி நிற்க முடியாத நிலை. இந்த நிலையில் தான் எங்கள் தலைமைப் பீடத்திலிருந்து "அரிசி விலை கூட்டியதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக ஒரு நாள் ஹர்த்தால்" என்ற உத்தரவு எங்களுக்குக் கிடைத்தது. அதன் பிரகாரம் ஆகஸ்ட் 12ம் திகதி வேலை நிறுத்தம். சீ. டி. யூ. எப். உடன் சேர்ந்த அத்தனை ஸ்தாபனங்களும் அன்று பங்கெடுத்தே தீரவேண்டும்.

அதன்படி தச்சுத்தொழிலாளர் சங்கம், பைப்புத் தொழிலாளர் சங்கம், நகரசபைத் தொழிலாளர் சங்கம், சீவல் தொழிலாளர் சங்கம், ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கம் ஆகிய எல்லாச் சங்கங்களும் ஒன்று திரண்டன. வேலை நிறுத்தத்திற்கு முந்திய நாள். 11ம் திகதி...........


அந்த நாள் விடியும் பொழுது சாதாரண நாட்களைப் போல் விடியவில்லை. ஊரெங்கும் பலத்த பரபரப்பு. சுவர்கள், தெருக்கள், கடைகள்– நகர மெங்குமே சுவரொட்டிகள். அதிலிருந்த "அரிசி விலையைக் குறைக்காவிடில் போராட்டம்' என்று கொட்டை எழுத்துக்கள் அதிகார வர்க்கத்தினரின் கண்களை அச்சுறுத்தின. அது மட்டுமா. கம்பித் தூண்களிலும் கடைத்தெருக்களிலும், மரக் கிளைகளிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன.

அன்று காலை தொடங்கி மாலை வரை கறுப்புக்கொடிகளுக்கும் பொலிசாருக்கும் பலத்த போராட்டம், கடைசியில் பொலிசார் கண்டது தோல்விதான்.

பிற்பகல் 6 மணி இருக்கும். எங்கள் அலுவலகத்தின் முன் பொலிஸ் ஜீப் வண்டி வந்து நின்றது. ஜீப் நிறைய சாக்கி உடை வீரர்கள் நிறைந்திருந்தனர். அவர்கள் வந்தது தான் தாமதம். "வெளியிலிறங்கினால் உன்னைச் சுடும்படி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது" என்றும் அறிவித்தனர். நான் உடனே அவர்கள் அருகில் போய்" ஐயா, நாளைக்கு வேலை நிறுத்த நாள், நான்தான் அதற்குத் தலைமைவகித்து நடத்த வேண்டியவன், அதற்கு நான் முன் நிற்காவிடில் தொழிலாளரைக் காட்டிக் கொடுத்தவனாவேன்" என மெல்லிய குரலில் கூறினேன். "அது முடியாத விடயம்; உன் நன்மைக்காகத்தான் சொல்கிறோம்." எனக் கூறி ஜீப்பில் ஏறிப் புறப்பட்டார்கள்,

இரவு 1 மணி இருக்கும். கழற்றிய கொடிகள் இரட்டிப்பாகக் காட்சியளித்தது. சுவரொட்டிகள் எல்லாம் பொலிஸ் நிலையத்தில் குவிந்து கிடந்தன. அதி காலை 4 மணி இருக்கும்; அன்று இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. புரண்டு படுத்த படியே இருந்தேன். அப்பொழுது ஜீப் பிறேக் போடும் சத்தம் கேட்டது அதைத் தொடர்ந்து கதவிலே அடி, உள்ளே படுக்கிறான் ஆசாமி என்ற குரல், மீண்டும் ஜீப் புறப்பட்டது.

காலை 5 மணியளவில் நாங்கள் எழுந்து அருகில் இருந்த குழாயில் முகத்தை அலம்பி விட்டு, பக்கத்துக் கடையில் ஒரு கோப்பை தேநீர் குடித்து விட்டு வீதியில் வந்து கொண்டிருந்தோம், அப்போது ஜீப் ஒன்று என் முன்வந்து நின்றது. ஏழு எட்டு வீரர்கள் துவக்குடன் என்னைச் சூழ்ந்து கொண்டனர் உடனே ஒருவர் இறங்கி "டேய் சொல்வது உனக்கு விளங்கிறதில்லையா, பெரிய மனிதன், பிளடி பூல்" என்றும்



கே. வி. கிருஷ்ணக்குட்டி

மற்றும் சொல்லத்தகாத வார்த்தைகள்மூலம் தமிழிலும் சிங்களத்திலும் என்னைத் தாறுமாறாக ஏசினர். "வெளியே இறங்கக் கூடாது என்ற சொல்லை அலட்சியம் செய்யப் போகிறாயா?" என்று மீண்டும் என்னை உறுக்கினார்கள். (துவக்கைக் கண்டவுடன் என் மனதிலே ஒரு பெரிய போராட்டம் உருவாயிற்று) நான் மெல்லிய குரலில், "சார் நான் சர்க்கஸ் விளையாட்டுக்காரனல்ல றேட்டால் நடவாமல் மின்சாரக் கம்பி மேலும் தொலைபேசிக் கம்பி மேலும் நடந்து போவதற்கு. மேலும் இன்று எல்லாத் தொழில் நிலையங்களுக்கும் போகாமல் இருக்க முடியாது. அதனால் வரும் எந்த முடிவையும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்பேன். அல்லாவிடில் நான் தொழிற் சங்கவாதியல்ல என்று கூறி முடித்தேன்,

6 மணியளவில் நகர சபைத் தொழிலாளர் பேர் கொடுக்கும் இடத்திற்குப் போய் முழு விபரமும் சொன்னேன். "சில வேளை என்னை உங்கள் மத்தியில் வைத்துச்சித்திரவதைசெய்யலாம். ஆனால் நீங்கள் குறிப்பிட்ட நேரம் முடிவடையும் வரை யாரும் வேலைக்குத் திரும்பக்கூடாது. என் நிலை ஆபத்தாகி வெடிகுண்டுபட்டு விழுந்தாலும் நம் கொடியை ஏற்றி என்னை அடக்கம் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு மஞ்சற் தொடுவாயிலுள்ள தச்சுத் தொழிற்சாலைக்குப் போனேம். அங்கும் அவர்களுக்குக் கூற வேண்டியதைக் கூறிவிட்டு மீண்டும் நகரை நோக்கி பிரயாணமானேம்.

கல்முனை மட்டக்களப்பு வீதியில் ஓடிக் கொண்டிருந்த பஸ் திடீரென்று நின்றது. என்னை பஸ்ஸினுள் வைத்துக் கைது செய்து ஜீப்பில் பொலிசார் ஏற்றினர். "என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்" என்று கேட்டேன். "ஏ. எஸ். பி. உன்னைக்கொண்டுவரச்சொல்லி இருக்கிறார்" என்றார்கள்.

போலிஸ் ஸ்டேசனுக்குள் ஜீப் வந்ததும் எங்களைப் பதம் பார்க்கத் தொடங்கினார்கள். கடைசியில் இன்ஸ்பெக்டர் புலி ஒருவன் வந்து, உடனே எல்லோரையும் வேலைக்குப்போகச் சொல்லாமல் இருந்தால் உன் உயிர் எதிரிலுள்ள ஆற்றில் நிச்சயமாக மிதந்தே தீரும் எனக்கூறினர். அதன் பின் அவர் வந்து என் முதுகில் குத்த வலி பொறுக்காமற் துவண்டு விழுந்தேன். என்னுடன் கைது செய்யப்பட்ட செல்லத் தம்பியை சுவரில் ஏறச் சொல்லி அவர்கள் படுத்திய பாட்டைத் திரும்பிப் பார்க்கக் கூட முடியாமலிருந்தது. அதன் பின் கூட்டினுள் அடைக்கப்பட்டோம்.

இச் செய்தி ஒரு கணப்பொழுதில் காட்டுத் தீ போல் எங்கும் பரவி விட்டது. இதனால் மக்கள் திரள் திரளாக வந்தனர். எனினும் அவர்கள் எவரையும் பார்க்க பொலிஸ் அனுமதியளிக்கவில்லை. அப்போது தான் மட்டக்களப்பின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் இராசதுரை எனக்கு பின் பக்கமாக வந்து சிகரட் ஒன்று தந்தார். பின் அவர் சென்று அப்புக்காத்து குமாரசாமி அவர்களை அழைத்து வந்தார், அவரும் கூட பொலிஸாரால் துரத்தப்பட்டார். அதன் பின் மின்சார நிலையத்திற்கு முன் நின்ற தொழிலாளர் மத்தியில் என்னைக் கொண்டுபோய் நிறுத்தி மிகவும் கஷ்டப் படுத்தினர். என் கண்களிலிருந்து கண்ணீர் கூட ஆறாக ஓடியது. அந்த நிலையிலும் தொழிலாளர் போராட்டத்தைக்கைவிடாமல் உறுதியுடன்நின்றதால் எனக்கு ஒரு புறம் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. திரும்பவும் என்னைக் கொண்டு போய் அடைத்தனர்

தொழிலாளர்கள்ஒத்துழைப்பால் அடுத்த நாள் எனக்கு விடுதலை கிடைத்தது. மேலும் அடுத்த சூழ்ச்சி மூலம் என்னைப் பிடிக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் இச் சூழ்ச்சியைக் கேள்விப்பட்டதும் நான் கல்லடி–உப்போடைக் காட்டில் மூன்று நாட்கள் தலைமறைவாகத் திரிந்தேன். அதன் பின் அங்கிருந்து தோணிமூலம் ஏறாவூரையடைந்து அங்கிருந்து புகையிரதம் மூலம் கொழும்பை அடைந்தேன். அங்கு எம் தோழர்கள் அடைந்த கஷ்டங்களையும் அவர்களின் துயர்களையும், எமது காரியாலயம் சூறையாடி உடைக்கப்பட்டிருப்பதையும் நேரில்காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசாங்கம் வீழ்த்தப் பட்டதும் அவ்வருட மேதினம் மிக்க விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. கொழும்பு, கண்டி, குருணுகலை போன்ற நகரங்களில் தொழிலாளர்கள் செங்கொடி பிடித்து ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தினர். அன்று கண்டதை விட அதிக ஆர்வம் இன்று பாட்டாளிமக்களிடையே காணப்படுகின்றது என்றே சொல்ல வேண்டும்.

சமீபத்தில் அரசாங்கம் கடைப்பிடித்த சில கொள்கைகளை ஆராய்ந்தால் அவை ஜனநாயகத்திற்கு ஒவ்வாதவை என்பது புலனாகும். பஸ்தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்தார் நிராகரித்ததுமின்றி அவர்களின் போராட்டத்தை முறியடிக்க ராணுவத்தையும், பொலிஸ் படையையும். கருங்காலிகளையும் உபயோகித்தனர். அந்நிய எண்ணெய்க் கம்பெனிகள் விஷயத்திலும் கோழைத்தனமாக நடந்து கொண்டனர். நாட்டின் வருமானத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதாகப் பறைசாற்றி அதற்குப் பின் அமெரிக்க ஏகாதிபத்திய பயமுறுத்தலுக்குப் பயந்து பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருப்பதை நாமறிவோம்.

இவ் விஷயங்களிலெல்லாம் அரசாங்கத்தை நேர்மையாக நடக்கவைக்க பாட்டாளி வர்க்கத்தால்தான் முடியுமென்று கூறுதல்மிகையாகாது. மேலும், ஏகாதிபத்திய வாதிகளின் சுரண்டலை அடியோடு அகற்றவும், முதலாளி வர்க்கத்தின் கொட்டத்தை அடக்கவும், பொதுமக்களின் நலனைப் பேணி வளர்க்கவும், சோஷலிஸக்கொள்கையைக்கொண்ட அரசாங்கம் இந்தநாட்டில் நிறுவப்பட வேண்டும், இவற்றையெல்லாம் சாதிக்க பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் பொதுமக்கள் திரண்டால் தான் முடியும்.

எனவே தான் முதலில் ஜாதி இன பேதமின்றி தொழிலாளர்கள் வர்க்க அடிப்படையில் ஐக்கியப்படுவது அத்தியாவசியமாகின்றது. இனத்தின் பெயரால் மொழியின் பெயரால் அல்லது கட்சியின் பெயரால் இந்நாட்டுத் தொழிலாள மக்கள் பிரிந்துள்ளனர். இதனால் தங்கள் வர்க்கத்தின் பலத்தை அவர்களால் பூரணமாய் உணரமுடியவில்லை.

இன்று இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்டு, சமசமாஜ, மக்கள் ஐக்கியமுன்னணி என்ற மூன்றும் ஒன்றுசேர பெரு முயற்சி செய்து வருகின்றன. முற்போக்குத் தொழிற் சங்கங்கள் மத்தியிலும் ஐக்கியம் வளரத் தொடங்கிவிட்டது. சமீபத்தில் நடந்த பஸ் தொழிலாளிகள் போராட்டத்தில் வெவ்வேறு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடைமுறையில் ஐக்கியப் பட்டதைக் கண்டோம். நகரத் தொழிலாளியும் தோட்டத் தொழிலாளியும் கூட ஒன்று சேர ஆரம்பித்துவிட்டனர். இந்தநிலை விருத்தியடைந்தால் விரைவில் பாட்டாளி மக்களின் பலம் மலை போல் பெருகுமென்பதில் சந்தேகமில்லை.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வுஎன்பதை நகரத்தொழிலாளிகளும், தோட்டத் தொழிலாளிகளும் உணர்ந்துகொண்டு வரும் காலம் இது. இவ்வருட மே தினக் கொண்டாட்டம் இந்த உணர்வை எடுத்துக் காட்டுமென்றே நம்புகின்றேன். வாழ்க பாட்டாளி; வளர்க ஒற்றுமை!

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யை இலங்கையிலுள்ள நாம் நன்கு அறிவோம். அமெரிக்க அரசாங்கத்தின் எஜமானர்களான எண்ணெய்க்கொம்பனிகள் கேட்டதற்கிணங்க இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு வழங்கவில்லை என்பதற்காக கொடுத்துவந்த உதவியை நிறுத்தி எமது தேசியசுதந்திரத்தைப் பயமுறுத்தியது. அண்மையில் விடுதலைபெற்று, அமெரிக்க உதவி பெறுகின்ற ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு இது நல்லதோர் படிப்பினையாகும்.

இவ்வுதவியின் பெயரால் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளிடையே பகைமையை வளர்க்க ஏகாதிபத்தியம் முனைகிறது. அண்மையில் நடைபெற்ற சீன–இந்திய எல்லைப் பிரச்சினை இவ்வித பிரதி பலிப்பில் ஒன்றாகும்.

### ஒற்றுமை மூலம் மேன்மை பெறுவோம்

ஏகாதிபத்தியத்தை, பழைய, புதிய காலனி ஆதிக்கத்தை முற்றாக முறியடிக்க ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களிடையே மேலும் ஐக்கியம் வளரவேண்டும். எங்கள் மத்தியிலேபிரிவினையை, பேதமையை தூண்ட நினைக்கும் ஏகாதிபத்திய சூழ்ச்சிக்கு எதிராக விளிப்பாக செயலாற்ற வேண்டும்.

விடுதலையின் பின் தான், மக்கள் தங்கள் சிறந்த வாழ்வுக்கு வழிகாண முடியும், மனிதனை மனிதன் சுரண்டாதசோஷலிஸ சமுதாயத்தைக் கட்டிவளர்க்க முடியும். மக்கள் சீன கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் மா–சே-துங் கூறிய "பிற்போக்குவாதிகள் ஓர் கடதாசிப் புலி" என்பது ஓர் பெரும் உண்மையாகும். ஏகாதிபத்தியங்கள் வெளித்தோற்றத்திற்கு பெரும் சக்திபெற்றவையாக விளங்கினாலும் உண்மையில் மக்கள் சக்திக்கு முன்னால் நிற்கக் கூடிய வல்லமையற்றவர்கள். உலக வரலாறு இதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. ஆகவே சகல மக்களும் விடுதலை பெற உலகத்திலிருந்தே ஏகாதிபத்தியத்தையும் சுரண்டல் முறையையும் துடைத்தெறிய இம் மேதினத்தில் சபதமேற்போம்.

# பாதை காட்டிய மேதை!

## லெனின் தொழிலாளர்களின் ஒளிவிளக்கு.

உலக வரலாறு கண்ட சிறந்த புரட்சியாளர்களில் ஒருவரும், இந்த நூற்ருண்டின் தலைசிறந்த புரட்சி மேதையுமான வலடிமிர் ஈலிச் லெனின் அவர்களின் பிறந்த தினம் ஏப்ரல் 22ம் திகதியாகும்.

அவர் ருஷ்ய புரட்சியின் தலைவர். முதல் சோஷலிஸ நாட்டை அமைத்தவர். இவற்றிற்கெல்லாம்மேலாக மார்க்ஸ் ஏங்கல்ஸ் இருவரினதும் சிறந்த கருத்துக்களைத் தொடர்ந்து பரப்பி, விரிவுபடுத்திய ஒரு உலக மார்க்ஸியத் தலைவர். விஞ்ஞான சோஷலிச கருத்தை ஸ்தாபித்தவர்களான மார்க்ஸ்சும் ஏக்கல்சும் முதலாளித்துவம் வளர்ந்து வந்த கால கட்டத்தில் வாழ்ந்தவர்கள். சமுதாய வளர்ச்சியின் அடிப்படையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை அவர்கள் விளக்கினுர்கள். காலத்துக்குக் காலம் முதலாளித்துவத்தில் தோன்றக்கூடிய முரண்பாடுகளையும் தெரிவித்தார்கள் அத்தோடு எதிர்காலத்தில் அமைக்கப்பட வேண்டியசோஷலிஸ சமுதாயத்திற்கான பாதையையும் சுட்டிக்காட்டினுர்கள். முதலாளித்துவத்திற்கு சவக்குழி தோன்றுகின்ற வர்க்கம் தொழிலாளிவர்க்கம் என்பதையும் அவர்கள் எடுத்துக்காட்டினர்.

விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களை ஐரோப்பா அமெரிக்கா போன்ற நாடுகளில்அவர்கள் பரப்பியதோடு, பரந்த தொழிலாளர் இயக்கங்கள் பலவற்றை பல நாடுகளிலும் ஸ்தாபித்தனர். ஆனுல் தங்களின் கனவு நனவாகியதைக் காண அவர்களுக்கு முடியாமல் போயிற்று. மார்க்ஸ் ஏங்கல்ஸ்சின் சிறந்த மாணவரான லெனினுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிட்டியது.

### புரட்சிகர காலகட்டத்தில் வாழ்ந்தார்

லெனின் வாழ்ந்த கால கட்டம் வேறு. அப்பொழுது முதலாளித்துவம் வளர்ந்து தனது கடைசி நிலையான ஏகாதிபத்திய உருவத்தைப் பெற்றிருந்தது. உலக ரீதியாக வளர்ந்த முதலாளித்துவ ஏகாதிபத்தியம் உழுத்துப் போன நிலையில் புரட்சி, யுத்தம் போன்றவற்றை எதிர்நோக்கியவண்ணமிருந்தது. இது சம்பந்தமாக லெனின் "ஏகாதிபத்தியம்-முதலாளித்துவத்தின் அதி உயர்ந்த நிலை" என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார். மார்க்ஸிய சித்தாந்த வளர்ச்சிக்கு லெனின் இதன் மூலம் ஒரு பெரும் பங்கைச் செலுத்தினுர்.

மார்க்ஸீய கருத்துக்களை வளர்ப்பதோடு லெனின் நிற்கவில்லை. அதே போன்ற முக்கியமான வேறுபல பிரச்சினைகளும் அவரை எதிர்நோக்கியது. விஞ்ஞான சோஷலிஸ முதல்வர்களின் கருத்துக்களின் உண்மையான நிலையை எடுத்து விளக்க வேண்டியவராகவும், கட்ஸ்கி போன்ற சந்தர்ப்பவாதிகளினுல் மூடி மறைத்து, சீர்குலைக்கப்பட்டகருத்துக்களை ஒழித்து, சரியான மார்க்ஸியக் கருத்துக்களை எடுத்துக்காட்ட வேண்டியவராகவும் இருந்தார்.

### திரிவு வாதங்களை எதிர்த்தார்

தொழிலாளர் சர்வாதிகாரம், அரசாங்கமும் புரட்சியும், ஏகாதிபத்தியமும் யுத்தமும் போன்றவைபற்றி மிக முக்கிய கருத்துக்களை மார்க்ஸ் எழுதியிருந்தார். இத் தீவிர வாதிகள் அக் கருத்துக்களைக் கூட மாற்ற முற்பட்டனர். அதற் கெதிராக கடுமையாக, முழுச் சக்தியோடும் போராட வேண்டியவராக லெனின் விளங்கினுர். திரிபுவாதிகளுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் லெனின் சிறிதும் தயக்கமின்றி தயவு தாட்சனியமின்றிப் போராடினுர். 'அரசாங்கமும் புரட்சியும்,' 'தொழிலாளர் சர்வாதிகாரமும் கொள்கை மாறி கட்ஸ்கியும்' போன்ற அவரது சிறந்த கருத்துக்கள் அக் காலத்தில் தான் எழுதப் பட்டன.

சோஷலிஸம் அமைப்பதற்கு தொழிலாளர் சர்வாதிகாரம் தேவையில்லை யென திரிபுவாதிகள் கூறினர். இதன் மூலம் சோஷலிஸத்தின் தன்மையை மாற்றி பாராளுமன்ற நிலைக்கு கொண்டுவர விரும்பினர். இன்றும் சிலர் இந்த நிலையில் உள்ளனர். ஆனுல் முதலாளித்துவ கிளர்ச்சிகளை ஒழிக்க தொழிலாளர் சர்வாதிகாரம் அவசியம் என்பதைலெனின்உணர்ந்தார் அத்தோடு மாக்ஸிய சித்தாந்தத்தில் இது ஒரு முக்கிய அம்சம் என்பதையும் அவர் தெரிந்துகொண்டார். முதலாளித்துவ அரசாங்க நிர்வாகத்தையே, அமைப்பையே(ராணுவம், போலிஸ், நீதிமன்றம், சிறை) தொழிலாளர்களின் நன்மைக்காகப் பாவிக்க முடியும் என்ற வாதத்தை மிகவன்மையாகக் கண்டித்தார். முதலாளித்துவ அரசியல் அமைப்மையே அடியோடு மாற்றி தொழிலாளர் சர்வாதிகாரம் நிறுவப்பட வேண்டும் என அவர் வாதிட்டார். எனெனில் அகற்றப் பட்ட வர்க்கம் மீண்டும் எந்தவிதத்திலோ பதவிக்கு வர முயலும். ஆகவே அதை இல்லாமற் செய்ய தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம் எனச் சுட்டிக் காட்டினுர்.

திரிபுவாதிகளை எதிர்த்துப் போராடுவதோடு அவர் நின்று விடவில்லை. தன்சகல சக்திகளையும் உபயோகித்து ருஷ்ய நாட்டில் நிலவிய, நாற்றமடித்த நிலப்பிரபுத்துவ ஆட்சியை அகற்ற அரும் பாடுபட்டார். இதன் மூலம்தான் தொழிலாளி வர்க்கத்திற்கு ஓர் சிறந்த கட்சியைப் பரிசாக வளங்கினுர்.

### புதிய கட்சியை உருவாக்கினுர்

ஐக்கிய அமைப்பிலே அதிக நம்பிக்கை கொண்டவர் லெனின். தான் தோன்றிப் போக்கு அவரிடமிருக்கவில்லை. அதே போல ஒரு சில தேர்ச்சி பெற்ற, புரட்சிவாதிகளைக் கொண்டு நடத்தப்படும். பயங்கர இயக்கங்களையும் அவர் ஆதரிக்கவில்லை அவர் வயதிற் சிறியவராக இருந்தபோது ஜார் மன்னனைக்கொல்ல முயற்சித்ததற்காக அவரது மூத்த சகோதரர் தூக்கிலிடப் பட்டார். இதன் காரணமாக அந்தக் காலத்திலேயே இவ்வித பயங்கர இயக்கத்தை அவர் வெறுத்து விட்டார். இதன் மூலம் புதிய நல்ல மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை அவருக்கு இருந்தது.

வளர்ச்சிபெற்ற புரட்சிகர எண்ணங்கொண்ட தொழிலாளர்களின் தலைமையில் ஓர் கட்சியை அமைக்க அவர் விரும்பினுர். ஆனுல் இக் கட்சியை ஓர் பயிற்றப்பட்ட ராணுவமாக, தத்துவ வளர்ச்சிபெற்ற வர்க்க உணர்வுகொண்ட, மக்களோடு எப்பொழுதும் நெருங்கிய தொடர்பு கொண்ட ஓர் கட்சியாக, தொழிலாளவர்க்கத்தின் பாதுகாவலனுக இக்கட்சியை அமைக்க விரும்பினுர். தொழிலாளிவர்க்கம் ஆட்சியைக் கைப்பற்ற இக்கட்சி தலைமை கொடுக்க வேண்டும் என விரும்பினர்.

ஐக்கிய அமைப்பிலே அளவு கடந்த நம்பிக்கை கொண்டனர் லெனின். இது சம்பந்தமான அவரது கருத்தை நாம் நினைவு கூர்தல் சாலச் சிறந்தது. "அதிகாரத்திற்காக தொழிலாளி வர்க்கம் நடத்துகின்றபோராட்டத்திற்கு ஐக்கியமாக ஒன்றுபடுவதைத் தவிர வேறு சிறந்த ஆயுதம் கிடையாது. முதலாளித்துவ சமுதாயத்தில் காணப்படும் பொருளாதாரப்போட்டிகளினுல், பிளவு பட்டு, பொருளுக்காக கட்டாய வேலைவாங்கிபடு பாதாளத்திற்கு தள்ளப் பட்டு, பசியாலும் பிணியாலும் பீடிக்கப்பட்டுள்ள தொழிலாளி வர்க்கம் மார்க்ஸிய தத்துவத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டு, லட்சக்கணக்கான வர்களை ஒன்று சேர்க்கக் கூடிய ஒரு ஐக்கிய அணியில் ஒன்று திரண்டால் ஜார் ஆட்சியாலோ, உலக முதலாளித்துவத்தாலோ அந்த தொழிலாளி வர்க்கப் படைக்கு முன்னிற்க முடியாது' என்று கூறியுள்ளார்.

இவ் விதம் அவர் ஆரம்பித்த கட்சி – போல்சிவிக் (பின்பு கம்யூனிஸ்ட் கட்சியாக மாறியது) கட்சி மார்க்ஸிய தத்துவார்த்த ரீதியாக ஐக்கியப் படுத்தப் பட்டு, மத்திய ஜனநாயக ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டு தொழிலாளர்களின் உண்மையான பாதுகாவலனுகவிழங்கியதோடு, லெனினின் தலைமையில் உலகத்திலேயே முதலாவது தொழிலாளர் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்தது.

### பாராளுமன்ற மோகத்தை எதிர்த்தார்

தொழிலாளி வர்க்கம் பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்பதை லெனின் ஏற்கவில்லை. முதலாளித்துவ சமுதாயத்தில் கேவலமான முறையில் சுரண்டல் நடைபெறுகிறது. அவ்வித அமைப்பிலே உள்ள பாராளுமன்றங்களுக்குச் செல்லக் கூடிய தன்மைக்கு தொழிலாளர் கட்சிகள் மாற்றப்படுவதை அவர் எதிர்த்தார். பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சியை கைப்பற்றலாம் என்ற கற்பனை முதலாவது உலக யுத்தத்திற்கு ஜேர்மன் பாராளுமன்றம் கைசர் அரசாங்கத்திற்கு நீதியொதுக்கியதை ஆதரிக்கும் அளவுக்கு மிகவும் சக்தி பெற்றிராத ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியை நிர்ப்பந்தித்தது என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி விடலாம் என எண்ணிக்கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள முற்போக்குவாதிகளுக்கு லெனின் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த ஒரு புகையிரதத் தொழிலாளிக்குக் கூறியதை நினைவூட்டுதல் மிக்க சிறந்ததாகும்.

"அன்பரே, எதற்காக ஒரு முதலாளித்துவ வரவு செலவுத் திட்டத்தில் மாற்றம் கொண்டு வர முனைகிருய். நீ ஒரு தொழிலாளி. எருமைகளுக்குத்தான் பாராளுமன்றம் சரியானது. நாடு பூராவும் சென்று தொழிலாளர்களின் வாழ்க்கைநிலையை எடுத்துச்சொல். முதலாளித்துவ அடிமை முறையை விளக்கிக் கூறு. தொழிலாளர்களைப் புரட்சிக்குத் தயாராக்கு. அது ஓர் சிறந்த மாற்றம்" எனக் குறிப்பிட்டார். பாராளுமன்றத்தைப் பாவித்து கொடுமைகளை அம்பலப்படுத்தும்படியும் ஆனுல் அதனுல் நன்மைகளைச் செய்ய முடியுமென எதிர்பார்க்க வேண்டாம் எனவும் பிரித்தானியத் தோழர்களுக்கு லெனின் அறிவுரை கூறினுர்.

பாராளுமன்றத்தைப் பற்றிக் குறிப்பிட்ட லெனின் "முடியாட்சி நடைபெறும் நாடுகளிலுள்ள பாராளுமன்றங்களுக்கு மட்டுமல்லாமல், ஜனநாயக குடியரசாக விளங்குகின்ற பல நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களுக்கும், ஆளுகின்ற வர்க்கத்தின் எந்தப் பிரிவினர் மக்களை நசுக்குவது என்பதைத் தீர்மானிப்பதற்காகவே முதலாளித்துவ நாடுகளில் தேர்தல்கள் சில வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது பற்றிக் குறிப்பிடுகையில் "பாராளுமன்றத்திலிருந்து விடுபடுவதின் மூலம் தேர்தல் முறையையோ, பிரதிநிதிகள் சபையை ஒழிப்பது என்பல்ல. மாருக இன்று வெறும் வெட்டிப் 'பேச்சுக் கடை'களாக விளங்குவதை உண்மையான செயலாற்றும் இடமாக மாற்றுவதாகும்" எனப் பாராளுமன்ற போராட்ட முறைபற்றி அவர் அளித்துள்ள கருத்துக்களை நாம் நன்கு மனதில் கொள்ள வேண்டும்.

### பூரண அர்ப்பணம்

புரட்சிகர இலட்சியத்திற்காகத் தங்கள் உடலையும், உயிரையும் வாழ்நாள் பூராவும் அர்ப்பணித்த ஒரு சில புரட்சிவாதிகளில் லெனினும் ஒருவர். லெனின் தன்னிடத்து அளவிட முடியாத சக்தியைப் பெற்றிருந்தார். அத்தனை சக்தியையும் தொழிலாளி வர்க்க விடுதலைக்காக அர்ப்பணித்தார். இது ஒன்றுதான் அவருடைய இதயத்தில் நிரம்பியிருந்தது. வேறு எதுவும் இருக்கவுமில்லை. அவர் கவலைப்படவுமில்லை.

1905ம் ஆண்டுப் புரட்சி தோல்வியுற்றது. அதன் பின் லெனின் நாட்டிலிருந்து வெளியேறியிருந்தார். அப்பொழுது அவருடைய நண்பர்கள் பலர் அவரை விட்டுப் பிரிந்து மென்சிவிக் கட்சியில் சேர்ந்தனர். லெனின் தனிமையானுர். ஆனுல் அவர் தளரவில்லை. தனி மனிதராக தன் இலட்சியத்திற்குப் பாடுபட்டார்.

அப்பொழுதுதான் அவருடைய எதிரிகள் ஒரு மனிதன் முழுக்கட்சியையும் பாழ்படுத்துவதாகக் கூறினர். அப்பொழுது அவருடைய ஆதரவாளர் ஒருவர் மென்சிவிக் கட்சியைச் சேர்ந்த ஒருவனைப் பார்த்து "எப்படி ஒருவர் முழுக் கட்சியையும் கெடுக்க முடியும். ஒரு மனிதருக்கு எதிரில் நீங்கள் எல்லாம் எப்படிச் சக்தியற்றிருக்க முடியும்" எனக் கேட்டார்.

அதற்குப் பதில் கூறிய மென்சிவிக் கட்சி உறுப்பினர் "24 மணிநேரமும் புரட்சியைப் பற்றி எண்ணியவராய், புரட்சியைத் தவிர வேறு எண்ணம் அற்றவராய், கனவிற் கூட புரட்சியை மட்டும் காண்பவராய் வேறு ஒரு மனிதரும் கிடையாது. அப்படிப்பட்ட மனிதருக்கு எதிராக என்ன செய்யலாம்?" எனக் கேட்டார்.

தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியத்திற்காகப் பாடுபட்ட லெனினுக்குக் கிடைத்த ஒரு சிறந்த பாராட்டு இதுவாகும். புரட்சிக்காகவே அவர் வாழ்ந்தார்.

லெனின் இறந்துவிட்டார். ஆனுல் அவருடைய இலட்சியம் பல வெற்றிகளைப் பெற்று முன்னேறிக்கொண்டிருக்கிறது. உலகத்தின் மூன்றில் ஒரு பகுதியில் அது வெற்றிபெற்று விட்டது. எஞ்சியுள்ள மூன்றில் இரண்டு பகுதிகளிலும் புதிய நம்பிக்கையை அளித்து வெற்றியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

உலகத்திலிருந்தே ஏகாதிபத்தியத்தை ஒழிக்க, 1917ல் லெனின் ஆரம்பித்த இலட்சியப்பாதையை நிறைவேற்ற, ஏகாதிபத்தியத்திற்கு இறுதி உதை கொடுக்க உலக முற்போக்குச் சக்திகள் ஒன்றுபட்டுள்ளன. ஆனுல் முற்போக்குச் சக்திகள் யாவும் ஒன்றுபட்டு சரியான தத்துவார்த்த பாதையில் நிற்கவேண்டிய நேரத்தில் லெனினுடைய கொள்கைகளை மாற்றியமைக்க, விஞ்ஞானத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை, முக்கியமாக, ஏகாதிபத்தியமும் யுத்தமும், சமாதான சக வாழ்வு, தேசிய விடுதலை இயக்கங்களின் கடமை, அரசாங்கம் பற்றிய தத்துவம் போன்றவற்றில் உலக கம்யூனிஸ இயக்கத்தில் புதிய கருத்துக்களைப் புகுத்த ஒரு முயற்சி நடைபெறுகிறது.

இவ்வித முயற்சிகளுக்கு இடம் கொடுக்காமல் மாக்ஸிய லெனிஸிஸத்தின் உண்மையான கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும். வாழ்ந்துகொண்டிருக்கக் கூடிய தலைசிறந்த மாக்ஸிய லெனிஸிஸ்ட்டான மா. சே. துங்கின் தலைமையில் இயங்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் கடமையை சிறப்பாக நிறைவேற்றுகிறது.

லெனினுடைய பாதையில் தொடர்ந்து செல்லவும், அதைப்போலவே முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பில் தளராத உள்ளத்தோடும், தொழிலாளர் இயக்க இலட்சியத்தில் நம்பிக்கையும் அன்பும் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தைத் தலைமைதாங்கிச் சென்று ஆட்சியைக் கைப்பற்ற அவர்களுடைய பெயரில் உறுதி பூண்போமாக.

வாழ்க லெனினிஸம்!

வளர்க தொழிலாளர் ஒற்றுமை!!

"கிராமப் புறங்களில் ஏற்படும் மாற்றங்கள் தேசியப் புரட்சிக்கு அத்தியாவசியமானது என்பதை ஒவ்வொரு புரட்சித் தோழனும் தெரிந்து கொள்ளவேண்டும். கிராமப் புறங்களில் மாற்றங்கள் ஏற்படாமையால் தான் 1911-ம் ஆண்டுப் புரட்சி தோல்வியடைந்தது. இப்பொழுது எங்கும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த அம்சம் புரட்சியைப் பூரணத்துவப் படுத்தும்'' என்றார். மக்கள் சீனக் குடியரசின் தலைவர் தோழர் மா-சே-துங். கிராமப் புறத்திலுள்ள விவசாயிகளுடைய ஒத்துழைப்பு புரட்சிக்கு எவ்வளவு இன்றிமையாது என்பதை இதன்மூலம் எடுத்துக் காட்டுகின்றனர்.

தோழர் மா-சே-துங் விவசாயிகளுடைய ஸ்தாபன அமைப்பையும், போராட்டத்தைப் பற்றியும் தெளிவாகக் கூறுகின்றார். "விவசாயிகள் தங்களுடைய பரந்த ஸ்தாபன மூலம் நேரடி நடவடிக்கைகள் எடுத்து, நான்கு மாதங்களுக்குள் கிராமங்களில் எதிர்பாராத புரட்சியை நடத்தியுள்ளார்கள்."

சீனு ஒருவிவசாயநாடு. புரட்சிக்கு முன்பு சீனுவிலே பஞ்சம் பசி, பட்டினி, கொள்ளை, கொலை விபச்சாரம், சுரண்டல் நிறைந்திருந்தன. மனித உயிர்கள் பணத்திற்காக விற்கப்பட்டன. நிலப் பிரபுக்கள் கோடிக் கணக்

# தொழிலாளர் விவசாயிகளே ஒன்றுசேர்வோம்!

கான விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்திருந்தனர். அன்று சீனு அன்னிய முதலாளிகளின் வேட்டைக் காடாக இருந்தது. சீனத் தொழிலாளர்களும் விவசாயிகளும் செங்கொடியின் கீழ் திரண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புரட்சி செய்து வெற்றியீட்டினர். இன்று மக்கள் சீனம் சோஷலிஸ பாதையில் வெற்றிநடை போட்டு முன்னேறுகின்றது. தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்பமாக இன்று வாழ்கின்றார்கள்.

நமது ஈழத்திரு நாடும் ஒரு விவசாய நாடு. கைத்தொழில்

16 வருடங்களாகியும், இன்றும் அந்நிய முதலாளிகள் நமது தேசியப் பொருளாதாரத்தில் பெரும்பகுதியைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருக்கின்றார்கள். செல்வம் கொழிக்கும் மலை நாட்டிலுள்ள பெரும் பகுதியான தோட்டங்கள்; வர்த்தக கம்பெனிகள், ஏற்றுமதிஇறக்குமதிகளில் பெரும் பகுதி இன்றும் அன்நிய முதலாளிகளின் கையில் தான் இருக்கின்றது. கோடிகோடியான நமது பணத்தை அன்னியர்கள் கொள்ளையடிக்கின்றார்கள்.

நமது தேசிய பொருளாதாரம் குன்றி வருகின்றது. சுதந்

முள்ள தொழிலாளர்களை அணி திரட்டி, தொழிலாளர்களுடைய அரசியல் பொருளாதார உரிமைப் போராட்டங்களை நடத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தியுள்ளன. விவசாயிகளைப் பொறுத்த மட்டில் இடதுசாரிக் கட்சிகள் தொட்டம் தோட்டமாகச் சில விவசாய சங்கங்களை நிறுவிப் போராடினார்களே யொழிய, விவசாயிகளைத் தேசிய ரீதியாக அணி திரட்டி, தொழிலாளி வர்க்கத்துடன் இணைத்து, போராட்டங்களை நடத்தத் தவறிவிட்டன.

வெற்றிபெற முடியும்' என்று காலம் சென்ற பொன் கந்தையா கூறியுள்ளார்:

"ஜனநாயக பாராளுமன்ற ரீதியில் போராடி நாம் அதிகாரத்திற்கு வந்தபின்பு சோஷலிசத்தைக் கட்டி வளர்க்க முடியும்'' என்று சில கற்பனவாதிகள் கோழிக் கனவு காணலாம். இடதுசாரிக் கட்சிகள் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதின் மூலம் சோஷலிசத்தை நிறுவ முடியும் என்று சில திரிபுவாதிகள் கூறலாம். தொழிலாளி வர்க்க சர்வாதிகாரமில்லாமல் சோஷலிஸப் பாதையில் ஒரு அடி கூட முன்னுக்குச்

# புரட்சிப் பாதையிலே சென்றிடுவோம் வாரீர் !!

இங்கு விருத்தியடையவில்லை. 70 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தையே தமது தொழிலாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் பெரும் தொகையான விவசாயிகளுக்குச் சொந்த நில மில்லை. கமத்தொழிலில் முதலீடு செய்யப் போதிய பணமில்லை. நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளுடையபெரும்பகுதி உழைப்பைச் சுரண்டுகின்றார்கள்' விவசாயிகளுக்கு எண்ணற்ற பிரச்சினைகளுண்டு.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நமது நாடு விடுதலையடைந்து

திரக் கட்சி ஆட்சி அதே நேரத்தில் மக்கள்மேல் வரிப் பளுவை சுமத்துவதிலும், மக்களுடைய வயிற்றிலடிப்பதிலும், தொழிலாளர்களுடைய உரிமைப் போராட்டங்களை நசுக்குவதிலும் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

இன்றயகாலகட்டத்தில்நமது நாட்டில் மாற்றம் தேவை. இதை உணர்ந்த இடதுசாரிக் கட்சிகள் ஒரே அணியில் திரண்டுள்ளன. இடது சாரிக் கட்சிகள் ஒன்றுதிரண்டாலும் நமது நாட்டில் மாற்றம் கொண்டு வருவதற்கு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒரே

இன்று இடதுசாரிக் கட்சிகள் தேசிய முன்னணி அமைத்து பிற்போக்குவாதிகளுக்கும் அந்நிய முதலாளிகளுக்கும், சுதந்திரக் கட்சியின் பிற்போக்கான நடவடிக்கைகளுக்கும் எதிராகப் போராட முன்வந்துள்ளன. சுதந்திரக் கட்சி அரசாங்கம் தனது பொதுமக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளினால் செல்வாக்கிழந்துவரும் அதே வேளையில் யூ. என். பி. யும் பிற்போக்குச் சக்திகளும் தலை தூக்குகின்றன. இதைத் தடுத்து நிறுத்த நமது நாட்டைப் புரட்சிகரமான பாதை

செல்ல முடியாது என்பதை இவர்கள் உணர வேண்டும்.

தொழிலாளர், விவசாயிகளை ஒரே அணியில் திரட்டி வர்க்க முரண்பாட்டை விரிவுறச் செய்து தீவிரமாகப் போராடினால்தான் நாம் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமைக்கமுடியும்.

ஈழத்திலுள்ள விவசாயிகள் மத்தியில் எண்ணற்ற பிரச்சினைகள் உண்டு. நிலமின்மை, தண்ணீர் தட்டுப்பாடு, உயர்ந்த வரி, உயர்ந்த வட்டி, நிலச் சொந்தக்காரர்களின் சுரண்டல், கல்வியறிவின்மை இன்

## போக்கு ஏது?

- க. இராஜமாணிக்கம் -

அதிகாலையிலே சங்கொலியின் அலறல்கேட்டு
அரண்டெழுந்து விரைகின்றார் ஆலைநோக்கி
அந்திவரை சுரண்டுவோனின் அடிமையாக
அல்லலுறு மிவர்வாழ்வில் அமைதியெங்கே?

சளைக்காது உழைப்பவர்க்கு சம்பளமாம்!
சம்பளந்தான் தருவார்கள் சற்றேபொறும்
சம்பளத்தால் வருவதெல்லாம் சஞ்சலமே
சலிப்புடனே கலங்கிடுவார் சாந்தியெங்கே?

மாலைவரை வியர்வையினை மாலையாக்கி
மாடுபோல் உழைக்கின்ற மாந்தர்களின்
முகமலரில் சற்று முன்னிருந்தவொளி
மூழ்கிவிடும் கவலைகளால் மகிழ்வாயிது?

எத்தனையோ கடன்தொல்லை என்னசெய்வார்
"இறைவா நீ ஏன்படைத்தாய்?" எனவழுவார்
இதைவைத்து என்செய்வேனென்று ஏங்கி
இளைக்கின்றார், இளைக்கின்றார், இளைக்கின்றாரே!

தன்மனைவி புறபுருஷன் தன்னையேற்றால்
தானதையே பாராது தாண்டிப்போவார்
தான் பெற்ற பிள்ளைகளைத் தானமாகத்
தாரைவார்க்க மற்றவர்க்கு தயங்குவா ரோ?

உறவென்றிவர் நினைக்கும் உறவுநிலை
உண்மையாய் சொன்னலே உணர்ச்சிவீங்கும்
உயிரற்ற உடலாக உழுலுமிவர்
உய்தற்கு வழி நீயும் உணருவாயோ?

எங்கும் நிறைந் திருக்கின்பம் என்பார்
இவர்கண்ட தொன்றுமே இல்லையடா!
இல்லை யில்லை இசைப்பல்லவியே
என்பதன்றி வேறு என்னகண்டார்?

பொல்லாத இக்கொடுமை போக்கைக்காண
பொங்கிவரும் சிரிப்பல்ல பொருமலடா!
பொல்லாத இக்கொடுமை போய்மறைய
பொதுவுடமை இல்லையெனில் போக்குயேது?

# எமது தாய்த்திருநாட்டில் தேனும் பாலும் ஓடச்செய்திடுவோம்!

அணியில் திரட்டி, ஒரே கொடியின் கீழ் நின்று போராட வேண்டும்.

இது காலவரையும் இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் விவசாயிகளை அணிதிரட்டத் தவறிவிட்டன. யூ. என். பி' அன்னிய முதலாளிகளுடைய கையாளாக இருந்தபடியால் அது விவசாயிகளின் மேல் அதிக அக்கறை காட்டவில்லை.

யூ. என். பி. க்குப் பின் அதிகாரத்திற்கு வந்த எம். ஈ. பி. அரசாங்கம், திரு. பண்டாரநாயக்காவின் தலைமையில் இந்த நாட்டிலுள்ள கிராமப்புற மக்கள், விவசாயிகள் குட்டி முதலாளிகளுடைய ஆதரவுடன் ஆட்சி பீடமேறியது. திரு பண்டாரநாயக்காவின் எம். ஈ, பி, கட்சி விவசாயிகளுடைய ஆதரவைப் பெற்றபோதிலும், விவசாயிகளை ஸ்தாபன ரீதியில் ஒன்று திரட்டவோ, விவசாயிகளுடைய நலனுக்குப்பாடுபடவோ தவறிவிட்டது. திரு. பண்டாரநாயக்காவின் கட்சி விட்ட தவறையே இன்றைய சுதந்திரக் கட்சியும் விவசாயிகள் சம்பந்தமாக விடுகின்றது.

மாக்ஸிய லெனினிஸக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட, புரட்சியே தமது லட்சியமாகக் கொண்ட, தொழிலாளிவர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் சோஷலிஸத்தைக் கட்டி வளர்க்கவேண்டும் என்று உறுதி பூண்டுள்ள இடதுசாரிக் கட்சிகள் விவசாயிகள் சம்பந்தமாக என்ன செய்துள்ளார்கள் என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

இடது சாரிக் கட்சிகள் நகரப் புறங்களிலும், பட்டினங்களிலு

யில் கொண்டுசெல்லவேண்டுமானால் இடதுசாரிக் கட்சிகள் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஒரே அணியில் திரட்டி போராடவேண்டும்.

பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி நடந்த காலததில் தொழிலாளர்களும், விவசாயிகளும் இணைந்து பொதுப்போராட்டத்தை நடத்தியது தான் பெப்ரவறிப் புரட்சிக்கு தொழிலாளி வர்க்கத்தைத் தலைமை தாங்க வழி செய்தது. என்று தோழர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

நகரப்புறங்களிலுள்ள தொழிலாளர்களையும் கிராமப் புறங்களிலுள்ள விவசாயிகளையும் எப்படி ஒரே அணியில் திரட்டமுடியும்? இது செய்யக்

**நீர்வை பொன்னையன்**

கூடிய செயலா எனச் சிலர் ஐயுறலாம். சுரண்டப்படும் பெரும்பான்மையான விவசாயிகடைய உள்ளத்தில் புரட்சித் தீ நீறுபூத்த நெருப்பாகக் சுடர்விட்டுக்கொண்டிருக்கிறது விவசாயிகளை ஒரே அணியில் ஸ்தாபன ரீதியாகத்திரட்டி மேலே மூடியிருக்கும் சாம்பலை அகற்றிவிட்டால் புரட்சித் தீ தானுக சுடர் விட்டெரியும். இந்தப் புரட்சிச் சுடர் விவசாயிகளை தொழிலாளர்களுடன் ஒரே அணியில் இணைத்துவிடும் என்பதை மக்கள் சீனப் புரட்சி தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

ஈழத்திரு நர்ட்டிலுள்ள தொழிலாளர்கள் விவசாயிகளை ஒரே அணியில் திரட்டிப் போராடினுல்தான் நமது புரட்சிப் போராட்டத்தில் நாம்

னும் எண்ணற்ற பிரச்சினைகள். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விவசாயிகளை இடதுசாரிக் கட்சியினராகிய நாம் ஒரே அணியில் திரட்டி தொழிலாளி வர்க்கத்துடன் இணைத்துப்போராடவேண்டும். தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒன்றுதிரண்டால்தான் நமது போராட்டம் வெற்றியடையும். காலதாமதமின்றி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒரே கொடியின்கீழ் திரட்டி போராடி சோஷலிஸ ஆட்சியை நிறுவி, நமது நாட்டை வளப்படுத்த வேண்டும் என்று இந்த மேதினப் புனித நாளில் சபதமேற்போம்.

வாலிபர்கள்
முக்கியம் வாசிக்கவேண்டியது

"யுவசக்தி"

[மாத இதழ்]

சிறந்த அரசியல், கலை, கலாச்சார
வரலாற்று கட்டுரைகளும்,
சினிமா விமர்சனங்களும் உண்டு.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
"யுவசக்தி"
91, கொட்டா ரேட்,
கொழும்பு 8.

# தொழிலாளிக்கு வாழ்வழித்த மேதினம்!

உலகத் தொழிலாளர்களின் ஒப்பற்ற உயர் தினம். தமது உன்னத கோட்பாடுகளுக்காக, உரிமைக்கா அணிதிரளும் பெருந்தினம். வாலிபர்களும், கன்னியரும், ஆண்களும், பெண்களும் சரிசமமாக வீதி வழியே தமது ஐக்கிய குரல் எழுப்பி சக்தியை காட்டிடும் நன் நாள். தம் வர்க்க நலனுக்காக இன்னுயிர் ஈந்த தியாகிகளின் ஞாபகார்த்த தினம் மே தினம்.

கடந்த "72" வருடங்களாக மேதினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் மகத்துவத்தை அறிய, வரலாற்றினை அறிய, அன்றைய தொழிலாளர்களின் நிலையை அறிய நாம் "18"ம் நூற்றுண்டுக்கு நம் சிந்தனையை பின்னுக்கு இழுத்து செல்ல வேண்டும். உழைப்பாளிகள் உறிஞ்சப் பட்டார்கள். பாடுபட்டவர்கள், பாட்டாளித்தோழர்கள் மாடுகள் போல இரவும் பகலும் ஓய்வின்றி வேலை செய்தார்கள். குறிப்பிட்ட நேர வேலையின்றி, உறக்கமின்றி உழைக்கும் வர்க்கம் முதலாளிகளால் வாட்டப்பட்டது. இதுதான் 18 ம் நூற்றுண்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை.

இந்த இழி நிலை போக்க எண்ணங்கொண்டது தொழிலாளர் பெரும்படை. 8மணி நேர வேலை. 8 மணி நேர பொழுது போக்கு, 8 மணி நேர ஓய்வு என்ற கோரிக்கையை முன் வைத்துகுரலெழுப்பிற்று. அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மற்றும் எங்கெல்லாம் முதலாளிகளின் சுரண்டல் தாண்டவமாடிற்றோ அங்கெல்லாம் இக் குரல் கேட்டது.

இக் கோரிக்கை அமெரிக்காவில் ஒரு வரலாற்றுப் பெருமையை உருவாக்கியது. உழைத்து உருக்குலைந்திருந்த சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள் 1886 ம் ஆண்டு மே முதல் நாள் இக் கோரிக்கை கோஷத்தை முன் வைத்து கிளர்த்தெழுந்தனர். உழைக்கும் கரங்கள் போர்க்கொடி உயர்த்திற்று. மறைந்திருந்த தொழிலாளர் சக்தி மலையெனக்கிளம்பிற்று.

முதலாளிகள் மிரண்டனர். சுரண்டி வாழ்ந்த கும்பல் செய்வதறியாது திகைத்தது. எத்ர் கூட்டம் போலீஸ்படையை ஏவிவிட்டது. சிக்காக்கோ நகர வீதிகள் ரத்தக்காடாகியது. உரிமை கேட்ட மக்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். சிக்காக்கோ நகரெங்கும் செங்குருதி பாய்ந்தது. உழைக்கும் உத்தமத தோழர்களின் ரத்தம் ஆறுக ஓடியது.

1889 ம் வருடம் பாரிஸில் கூடிய சர்வதேசிய காங்கிரஸ் மேற் கூறியதின் ஞாபகார்த்தமாக மே முதலாம் திகதியை தொழிலாளர்களின் தினமாகக் கொண்டாட தீர்மானித்தது.

1890 ம் ஆண்டு முதல் மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தினத்தில் தொழிலாளர்கள் தமது தொழிற்சாலைகள் மீது செங்கொடியைப் பறக்கவிட்டு தாம் வாழும் நகரத்தின் பிரதான வீதி வழியே பவனி வந்து முதலாளி வர்க்கத்திற்கு எதிராக தமது சக்தியைப் பிரகடனப் படுத்த வேண்டும் என லெனின் கேட்டுக்கொண்டார்.

1917 ல் சோவியத் நாட்டில் தோன்றிய அமரத்துவப் புரட்சி மேதினக் கோரிக்கைகளை சாதனையாக்கியது. இன்று சோவியத் நாட்டிலும் மற்றும் சோஷலிச நாடுகளிலும் மே தினம் தேசியத் திருநாளாக புதுப் பொலிவுபெற்று புனிதத் திருநாளாகக் கொண்டாடப் படுகிறது. மேற்கத்திய நாடுகளில் தொழிலாளர்கள் தமது எதிர்காலத்திட்டத்தை முன் வைத்துப் போர்க் குரல் எழுப்பும் பொன் நாளாக மிளிர்கின்றது.

மொழி இன நிறம் என்ற பேதம் ஒழித்து பாரில் பரந்து கிடக்கும் தொழிலாளிவர்க்கம் பாங்கானரீதியில் ஒன்றிணைந்து கொண்டாடும் தேசிய தினமாக இன்று மேதினம் விளங்குகின்றது.

எமது தாய்த்திரு நாட்டிலும் 1932 ம் ஆண்டு முதல் அமர மேதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக 1956 ம் ஆண்டுக்குப்பின் புதுப் பொலிவுடன் இங்கு தொழிலாளர்களால் கொண்டாடப் படுகிறது. 1956 ம் ஆண்டு முதல் மே தினம் இலங்கையில் ஓர் கட்டாய விடுமுறை நாளாக மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் மே தினம் கலை அம்சங்களும் தேசியத்தன்மைகளும் கொண்டதாகத் தொழிலாளர்களின் கடந்தகால சாதனைகளையும் எதிக்காலத் திட்டங்களையும் பிரகடனப் படுத்தும் நாளாகக் கொண்டாடப் படுகிறது.

தொழிலாளர்களின் துயர் துடைக்கும், ஒற்றுமை வளர்க்கும் புனிதத் திருநாள், மே நன்னாள் வாழ்க! வாழ்க!! தம்இன்னுயிர் ஈந்து உலகு வாழ் தொழிலாளத் தோழர்களின் நல் வாழ்வுக்கு வழி காட்டிய அமர தியாகிகளின் நினைவுநாள் வாழ்க! வாழ்க!! பாட்டாளி வர்க்கம் பாரினை ஆண்டிட, தமது ஐக்கியம் வளர்ந்திட வழி வகுத்த பெருநாள் வாழ்க!! வாழ்க!!!

> மொகைதீன் பிச்சை <

# சோஷலிஸ்ட் நாடுகளுக்கு எமது மேதின பிரதிநிதிகள்

வருடா வருடம் எமது தொழிற்சங்க சம்மேளனத்தைச்சேர்ந்த பிரதிநிதிகள் பலர் சோவியத் நாடு, மக்கள் சீனம், மக்கள் கொரிய குடியரசு, ஜேர்மன் ஜனநாயகக்குடியரசு, போன்ற நாடுகளுக்கு மேதின விழாவில் பங்குபற்றுவதற்காகச் சென்றுள்ளனர்.

இவ்வருடமும் அந்த நாடுகளில் நடைபெறும் மேதின விழாவைக் கண்டுகளிப்பதற்காக பல பிரதிநிதிகள் வெளிநாடு சென்றுள்ளனர். அந்த நாட்டிலுள்ள சகோதர தொழிற் சங்கங்களின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் செல்கின்றனர்.

முதன் முதலாக இவ்வருடம் எமது சம்மேளனப் பிரதிநிதிகள் வீர கியூபா நாட்டில் நடைபெறும் மேதின விழாவிற்கு சகோதரப் பிரதிநிதிகளாகச் சென்றுள்ளனர். எமது சம்மேளனத்தின் உப செயலாளரான தோழர் ஏ. ஜயசூரியா அவர்களும் இ. போ, சா. விற் கடமையாற்றும் எமது இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க இ. தொ. ச, தலைமைக் காரியாலயக் கிளையின் தலைவரான தோழர் டி. ஜி. குருகே அவர்களும் சென்றுள்ளனர்.

இவர்களைத் தவிர சோவியத் நாட்டிற்கு தோழர் சுசிமா, டி. சில்வா அவர்களும், மக்கள் சீனத்திற்கு தோழர்கள் சமால் டி. சில்வா, ஏ. எம். பி. ஜோன் அவர்களும், சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்திலுள்ள எமது கிளையின் செயலாளரான டபிள்யூ. பி. ஜயசுந்தரா அவர்களும், தோழர் டி. பி. எஸ். அமரசேகரா அவர்களும் மக்கள் கொரியக் குடியரசிற்கும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க அப்புத்தளைப் பிரதிநிதி தோழர் எஸ். மாரியப்பா அவர்களும் தோழர் கே. எல். பிரேமதாச அவர்களும் ஜேர்மன் ஜனநாயக குடியரசிற்கும் செல்கின்றனர்.

இவர்கள் மேதின விழாவில் கலந்துகொண்ட பின் ஒருமாத காலம் அந்நாடுகளில் மக்கள் அடைந்துள்ள முன்னேற்றங்களை, சோஷலிஸ அமைப்பின் சிறப்பை நேரிலே கண்டு கொண்டு திரும்புவர். எங்கள் சம்மேளனத்திலிருந்துதான் அதிகமான பிரதிநிதிகள் வெளி நாடுகளில் நடைபெறும் மே தின விழாக்களில் பங்கு பற்றச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நகரசபையைப் பார்த்து நாடு சிரிக்கிறது!

யாழ்ப்பாண நகரசபை ஒரு உலக சாதனையை நிலை நாட்டி விட்டது. மாதத்திற்கு ஒரு மேயரை வைத்திருக்கும் ஒரு நகரசபையை உலகத்தில் வேறெங்கும் காணமுடியாது. தமிழரசு வாதிகளின் சுயநலப்போக்கும், தான்தோன்றித்தனமும் பதவி வேட்கையும் தான் இந்த உலக சாதனைக்கு (வெட்கக்கேடு) காரணமாகும்.

யாழ்ப்பாண நகரத்தில் சுகாதாரம் மிகவும் கேவலமான நிலையில் உள்ளது. சாக்கடை நீர் பல இடங்களில் தேங்கி நிற்கிறது, குப்பை கூளங்கள் தெருவெல்லாம் மண்டிக்கிடக்கிறது. தண்ணீர்ப் பிரச்சனையால் யாழ்ப்பாண நகர மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லி முடியாது. இது போன்ற எண்ணற்ற பிரச்சனைகளால் யாழ்நகர மக்கள் அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி எல்லாம் யோசிக்க, மாற்றம் காண்பதிற்கு நடவடிக்கை எடுக்க நகரசபையில் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் தமிழரசு வாதிகளுக்கு சிந்தனை இல்லை பதிலாக தங்களுடைய சுயநல ஆசைகள் நிறைவேறுவதற்காக மாதத்திற்கொரு மேயரை தெரிவு செய்து, பின் அவரை அகற்றி தங்கள்காலத்தைக்கடத்துகின்றனர். இவர்களுடைய இந்தப் போக்கு மூழு யாழ்ப்பாண நகர மக்களுக்கும்கவலைதருவதுமட்டுமல்லாமல் பெரும் வெட்கக் கேடாகவும் இருக்கிறது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர்களின், தமிழரசுபிரதிநிதிகளின் போக்கைக் கண்டித்துஇலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிப சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் தோழர் கே. எஸ். சுப்ரமணியம் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்த சீர் கெட்ட. நகரசபை நிர்வாகத்தை ஒழிக்க, நல்லதொரு நிர்வாகத்தைப் பெற்று தமது குறைகளைப்போக்க யாழ்ப்பாணத்து நகர மக்கள் ஒன்றுபட்டு எழவேண்டும்.

ஒரு நகர நிர்வாகத்தையே சரிவர நடத்த முடியாத தமிழரசு வாதிகளா தமிழ் மக்களுக்கு விமோசனப் பாதை காட்டித் தமிழ்அரசு அமைக்கக் கூடியவர்கள்? தமிழ் மக்களே சிந்தித்துப் பாருங்கள்!

## புயர் பவரேஜர்ஸ் தொழிலாளர்கள் எங்களோடு இணைந்தனர்

நாளுக்கு நாள் எமது சம்மேளனம் சக்தி பெறுகிறது. புதிய தொழிலாளர்கள் எங்கள் சம்மேளனத்தில் வந்து சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர். எங்கள் சம்மேளனம் உறுதியுடனும் நேர்மையுடனும் தொழிலாளி வர்க்கத்திற்கு தொண்டாற்றி வருவதின் பலனே இதுவாகும்.

இவ்விதம் அண்மையில் எங்கள் சம்மேளனத்தில் சேர்ந்த தொழிலாளர்களில் புயர் பவரேஜஸ் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இத்தொழிலாளர்கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற் சங்கத்தில் அங்கத்துவம் வகித்தனர். அத்தோடு அத்தொழிற்சங்கத்தில் இணைந்த ஆரம்ப சங்கங்களில் இதுவுமொன்றுகும்.

உண்மையாகத் தொழிலாளி வர்க்கத்திற்கு பாடுபடும் தொழிற் சங்க சம்மேளனம் எமது இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் என்பதை தொழிலாளர்கள் உணர்ந்து வருகிறார்கள் என்பதற்கு இது நல்லதோர் உதாரணம். அத்தோடு வெகு விரைவில் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே பிரதிநிதியாக இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் விளங்கப் போகிறது என்பதற்கும் இதைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை அல்லவா?

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போராட்டங்களின்போது இரண்டுவித நன்மைகளை எம்மால் காணமுடிந்தது. ஒரு பக்கத்தில் அரசாங்கமும் முதலாளிகளும் கடுமையாக, பிடிவாதமாகதொழிலாளவிரோத கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். மறுபக்கத்தில் அரசாங்கத்தினதும்முதலாளிகளினதும் எதிர்ப்புக்கு மத்தியில் நீண்ட நெடும் போராட்டங்களைத் தொழிலாளி வர்க்கம் நடத்தியது. துறைமுகத் தொழிலாளர்கள் 50 நாட்களுக்கு மேலாகப்போராடினர். வங்கி ஊழியர்கள் 3 மாதங்களாகப் போராடினர். முன்னெப்பொழுதும் கண்டிராத வீரமிகு போராட்டமொன்றை இ.போ.ச. தொழிலாளர்கள் 17 நாட்களாகநடத்தினர். இதில் எந்த ஒரு போராட்டத்திலாயினும் தொழிலாளர்கள் ஒரு சிறு வெற்றியைத்தானும் பெற்றதில்லை. தொழிலாளர்கள் சரணடையும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

முதல்வர்கள்
காட்டிய பாதை.

ஆனால் போராட்டங்கள் வீண்போகவில்லை சிலர் கதிரைகளில் அமர்ந்தவண்ணம், வெற்றிபெறக்கூடிய போராட்டங்களில்தான் தொழிலாளர்கள் ஈடுபடவேண்டுமெனக்கூறுகின்றனர். வெற்றிக்குரிய சாத்தியக் கூறுகள் எங்கள் பக்கத்திலிருக்கும் பொழுது எல்லாப் போராட்டங்களையும் நடத்தமுடியுமானால் ஓர் உலக சாதனையையே நிலைநாட்டமுடியும்'' என மார்க்ஸ் ஒருமுறை கூறினார்.

''அவசியமற்ற சில பிரச்சினைகளுக்காகக் கூட சில போராட்டங்களை நடத்தவேண்டிய நிலை வரலாற்றிலுள்ளது என்பதை மார்க்ஸ் உணர்ந்திருந்தார். மக்கள் போராட்டப் பயிற்சி பெறுவதற்கும் அடுத்த போராட்டத்திற்குத் தயாராவதற்கும் இது அவசியம்'' என லெனின் இதற்கு விளக்கம் கொடுத்தார்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல்போராட்டங்களுக்கும் தொழிற்சங்க போராட்டங்களுக்கும் மேற்கூறிய விளக்கங்கள் மிக அவசியமானதாகும். வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர துறைமுகத் தொழிலாளர்களுக்கும், இ. போ. ச. தொழிலாளர்களுக்கும் வேறு மார்க்கம் இருக்கவில்லை. வேலை நிறுத்தம் செய்யாதிருந்திருந்தால் மேலும் நம்பிக்கை இழந்திருப்பார்கள்.

பெற்ற
போதனைகள்.

இப்போராட்டங்களின்மூலம் சகல தொழிலாளி வர்க்கமும் மிக அவசியமான போதனைகளைப் பெற்றுள்ளது. இவ் அரசாங்கத்திடமிருந்து தொழிலாளிவர்க்கத்திற்கு எவ்விதஉதவியும் கிடையாது என்பது முதல் போதனையாகும். அரசாங்கத்தின் தொழிலாளி விரோத எண்ணம் அம்பலமாகியுள்ளது. தொழிலாளர்களின் சம்பளம் உயரக்கூடாது என்ற கொள்கையைத் திணித்திருப்பது மட்டுமல்லாமல் தொழிலாளர் போராட்டங்களை முறியடிக்க வெளிப்படையாகவே கருங்காலி வேலைகளுக்கு ஆதரவளித்தது. வேலை நிறுத்தங்களை முறியடிக்க போலிசையும், ராணுவத்தையும் பாவித்தது. வேலை நிறுத்தத்தின் போது பேச்சு வார்த்தைக்கு வரமறுத்தது. இதற்குமேலாக அக்காலங்களில், நடைமுறையிலுள்ள ஜனநாயக உரிமைகளையே பறித்தது. இவ்விதத்தில் யூ.என். பியிலும் பார்க்க தான் தொழிலாளிவிரோதத்தன்மை படைத்தது என்பதை நிரூபித்துவிட்டது. வேலை நிறுத்தம் செய்தவர்களைப் பழி வாங்குவதில்லை என்ற வாக்குறுதியைக்கூடக் காப்பாற்றத் தவறியது.

இரண்டாவதாக, இனிமேலும் தொழிலாளர்கள் தனித்தனியே போராடுவதற்கு தொழிற்சங்கங்கள் அனுமதிக்கக்கூடாது. தொழிலாளிவர்க்கத்தின் முழுச் சக்தியையும் ஒன்றுபடுத்தி, சரியான தருணம் பார்த்து அரசாங்கத்தையும், முதலாளிகளையும் பலமாகத் தாக்கவேண்டும். அதன் மூலம் தான் அரசாங்கத்தின் தொழிலாள விரோதப்போக்கை மாற்றியமைக்க முடியும். பலன்தரக்கூடிய அளவுக்கு தாக்குதல் பலமாகவிருக்க வேண்டும். இத்தாக்குதலை நடத்தக் கூடிய சக்தி இந்த நாட்டுத் தொழிற்சங்கங்களுக்கு இருக்கிறது.

மிகவும் சக்திபெற்ற தொழிற்சங்க இயக்கத்தை நாம் பெற்றிருக்கிறோம். 1½ லட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை அது அணி திரட்டிவந்துள்ளது. எங்களுக்கு மத்தியிலுள்ள ஒற்றுமையின்மையே எங்களுக்குள்ள குறைபாடாகும். இந்தப் பிளவு உடனடியாக ஒழிய வேண்டும். இன்றுள்ளது போல் என்றுமே தொழிலாளர்கள் போராட்ட உணர்ச்சி பெற்றிருக்கவில்லை. போராடுவதற்காகத் தொழிலாளர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓர் ஐக்கிய தலைமையும் அமைப்பும் தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

போராட்டம் தான்
ஐக்கியம் வளர்க்கும்

தொழிற் சங்கங்கள் தங்கள் கடமையைச் சரியாக உணர வேண்டும். இடையிலுள்ள சிறிய வேற்றுமைகளை மறக்க வேண்டும். போராட்டங்களில் ஒற்றுமையாக தொழிலாளரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். வெறுப்பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒற்றுமையைப்பெறமுடியாது. பொதுப் போராட்டங்களில் தான் ஐக்கியம் உருவாகும், உறுதியடையும். போராட தொழிலாளரை அழைத்துச் செல்வோம். அதன் மூலம் ஐக்கியம் பிறக்கும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டுமா, எல்லாச் சங்கங்களும் ஒரு சம்மேளனத்தில் இணையவேண்டுமா என்பன போன்ற ஐக்கிய அமைப்புக்கள் பற்றி விவாதிப்பதில் காலம் கடத்துவது பலன் தராது. காலம் செல்ல தொழிலாளர்களே இதை முடிவு செய்வார்கள். இப்பொழுது தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளில் போராட ஒன்றுபடுவோம்.

போராடத் துடித்துக்கொண்டிருக்கும் பல்வேறு தொழிலாளர்களை எவ்விதம் ஐக்கிய தலைமையளித்து அழைத்துச் செல்லலாம் என்பது பற்றி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் பல தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. (இப் பேச்சு வார்த்தைகளில் C. T. U. F, CCTU, CCTUO, P.S.W. T. U. F, P. S. L. சிறிலங்கா ஜாதிக குரு சங்கமய போன்ற ஸ்தாபனங்கள் பங்குபற்றின.) இலங்கையிலுள்ள சகல தொழிற் சங்க இயக்கமும் இதில் இடம் பெற்றுள்ளது. எதிர்கால தொழிற்சங்க ஒற்றுமையின் கருப்பொருள் இதுவாகும். அதே நேரத்தில் இடதுசாரி ஒற்றுமையும் பெருமளவு வளர்ந்துவருவது குறிப்பிடத்தக்கது, இதை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம். அரசியல் ரீதியாக இடது சாரி ஒற்றுமை, தொழிற் சங்க ஒற்றுமையோடு தொழிலாளி வர்க்கத்தோடு ஒன்றிணைக்கப் படவேண்டும். இதன்மூலம் தான் யூ.என்.பி.யும் பிற்போக்காளர்களும் மீண்டும் சக்தி பெறாமல் தடுக்கமுடியும்.

வெற்றி பெறுவோம்

இந்த நாட்டு தொழிலாளி வர்க்கத்தின்முழுச்சக்தியையும் இம் மே தின ஊர்வலத்தின் மூலம், பொதுக்கூட்டத்தின் மூலம் எடுத்துக் காட்டுவோம். தொழிலாளிவர்க்கத்தின் சக்தியை அரசாங்கத்திற்கு உணர்த்துவோம் அதன் மூலம், அரசாங்க ஊழியர்களுக்கும், தனிப்பட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் புதிய சம்பள விகிதம் ஒன்றைப் பெற்றெடுப்போம். இல்லையானால் இலங்கையில் என்றுமே நடைபெற்றிராத மாபெரும் போராட்டம் அடுத்த சில மாதங்களில் நடக்கும் என்பதையும் அதன் மூலம் அரசாங்கமும் முதலாளிகளும் சரணடையவேண்டி ஏற்படும் என்பதுமட்டுமல்லாமல், தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியாய் சக்திபெற்று முன்னேறவும் வழிபிறக்கும் என்பதையும் நாம் உணர்த்தவேண்டும்.

ஆகவே இம் மே தினத்தில் தொழிற்சங்க, தொழிலாளி வர்க்க ஒற்றுமைகாண எங்கள் முழுச் சக்தியையும் ஒன்றுபடுத்தி உழைப்போமாக. இவ்வித ஒற்றுமையை எந்தத் தலைமையாலும் புறக்கணிக்க முடியாத அளவுக்கு சாதாரண அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து பெரும் குரலாக ஒற்றுமைக்குரல் கிளம்பவேண்டும்.


செல்லமஹால் மற்றும் பல திரைகளில்
வெகுவிரைவில் எதிர்பாருங்கள்

மனேகர், நரசிம்ம பாரதி, டி. பாலசுப்பிரமணியம், (காலஞ்சென்ற) என். எஸ். கிருஷ்ணன்,
மதுரம், அஞ்சலிதேவி, ஆகியோர் நடித்த

தோழன்




பாடல்கள்:
மருதகாசி

இசை:
ஜி. ராமநாதன்

பின்னணி:
ஸ்ரீனிவாஸ், ஜிக்கி, சுசீலா, ரத்தினமாலா, பாலசரஸ்வதி.

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
விரைவில் எதிர்பாருங்கள்



ஜெமினி கனேசன், எம். ஆர். ராதா, நாகய்யா, எஸ். ராமராவ், அஞ்சலிதேவி,
கண்ணும்பா, ஜயந்தி, மீனுகுமாரி நடித்த

மங்கையர் உள்ளம்
மங்காத செல்வம்

இசை: ஆதிநாராயணராவ். பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ்.
பின்னணி: சுசீலா, ஜானகி, டி. எம். சௌந்தரராஜன், கண்டசாலா,
பி. பி. ஸ்ரீனிவாஸ்


பதிப்பித்து வெளியிடுபவர்: ஆறுமுகம் செல்லையா கந்தசாமி, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1, கியூ வீதி, கொழும்பு 2.